REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK






2020 ஒக்டோபர் 15 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 88 இல. 245 | October 15, Thursday, 2020 | 24 பக்கங்கள் | 30/-




கொரோனாவுக்கு ஏற்ப வாழ்வதே ஒரே வழி 05



பூநகரியின் நீர் தேவை 12



சமஷ்டிக்கு ஒப்பான தீர்வே பொருத்தம் 14



சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெற்றி 24

### கணக்காளர், மெய்ப்பாதுகாவலர், சாரதிகள் இருவர் நேற்று கைது

# ரிஷாட்டை கைது செய்ய பொலிஸார் தீவிர தேடுதல்

## வெளிநாடு செல்லத் தடை



**ஷம்ஸ் பாஹிம்**

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் த லை ம றைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்ய 6 விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்ப ட்டு தேடுதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதே வேளை குற்றச்சாட்டுக்களுடன் தொடர் புள்ள சந்தேக நபரொருவர் கைதாக 06

## கல்விக் கட்டமைப்பு மறுசீரமைப்பு; பேராயருடன் ஜீ.எல் பீரிஸ் சந்திப்பு



கல்விக் கட்டமைப் பில் மேற்கொள்ளப் பட வுள்ள மறுசீரமைப்பு கள் தொடர்பில், கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக் கும் பேராயர் கார்தினால் மெல்கம் ரஞ்ஜித்துக்குமி டையில் விசேட சந்திப் பொன்று நடைபெற்றது. கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் 06

## கட்டுநாயக்கா பொலிஸ் பிரிவில் மறுஅறிவித்தல் வரை ஊரடங்கு

### இன்று அதிகாலை 5.00 மணி முதல் அமுல்

கட்டுநாயக்கா பொலிஸ் அதிகாரப் பிரிவிற்குட்ட பகுதிகளுக்கு தனிமைப் படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளதாக கொவிட் ஒழிப்பு தேசிய செயல்பாட்டு மையத் தின் தலைவரும் 06

ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்

## ஜனாதிபதிக்கு ஸ்ரீதரன் எம்.பி கடிதம்



ஊடகவியலாளர் கள் மீது மேற்கொள் ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக நடவ டிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப் பினர் சி. ஸ்ரீதரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். முல்லைத் தீவு, முறிப்புப் பகுதியில் தொடர்ச்சியாக 06

20 ஆவது திருத்தம் குறித்து ஆராய

## கட்சித் தலைவர்களுக்கு சபாநாயகர் நாளை அழைப்பு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட் டத்தில் மேற்கொள்ள ப்படவுள்ள திருத்தங் கள் தொடர்பில் கலந்து ரையாடுவதற்காக நாளை வெள்ளிக்கி ழமை விசேட கட்சித் தலைவர் கூட்டத்திற்கு சபாநாயகர் அழைப்பு விடுத்துள்ளார். சபா நாயர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் 06

## விடுதிகளில் தங்கியுள்ளோருக்கு இராணுவத் தளபதி முக்கிய அறிவிப்பு



பொது விடுதிகளில் தங்கியிருந்து வேலைக் குச் செல்பவர்கள், விடுதியிலுள்ள ஏனை யவர்கள் தொடர்பான தகவல்களை, பணியாற் றும் நிறுவனத்தின் பிர தானிகளிடம் தெரியப்ப டுத்துமாறு இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா தெரி வித்துள்ளார்.

கொரோனா பரவலை கட்டுப்படுத்த அரசாங் கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைக்கு இது உத வியாக இருக்குமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்ட நோயாளிக ளில் நூற்றுக்கு 45 வீதமா னோர் தனிமைப்படுத்தல் 06

## அப்துல் சத்தாருக்கு பிரதமர் வழங்கிய இரு புதிய பதவிகள்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் முஸ்லிம் விவகார ஒருங் கிணைப்பு செயலாளராகவும் குருநாகல் மாவட்ட ஒருங் கிணைப்பாளராகவும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முஸ்லிம் முன்னணி யின் செயலாளர் 06

## அரசுக்கு 'கொவிட் 20' நோய் பீடித்திருக்கிறதாம்

மனோ கணேசன் எம்.பி கூறுகிறார்



நாட்டில் கொவிட் 19 தொற்று ஏற்பட்டி ருக்கும் நிலையில், அரசாங்கத்தை கொவிட் 20 நோய் பீடித்திருப்பதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார். 06

மரம் முறிந்து விழுந்ததில் பாரிய அனர்த்தம்

## கொழுந்து பறித்துக் கொண்டிருந்த இரு பெண்கள் பரிதாப மரணம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை பிரதேசத்தின் வளவ தோட்டத்தில் நேற்று மரமொன்று முறிந்து விழுந்ததில், கொழுந்து பறித்துக் கொண் டிருந்த இரு பெண்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். இச்சம்ப வத்தின் போது படுகாயமடைந்த இன்னொரு பெண், பலாங் கொடை அரச வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மரணடைந்தவர்கள் செல்லையா பரமேஸ்வரி (46) வயது, சந்தனம் ரோஸ் மேரி (47) வயது ஆகி யோரென அ டையாளம் காணப்பட்டுள்ளனர்.

ரியாஜ் விடுதலை விவகாரம்;

## விசாரணைகளை துரிதப்படுத்த பொலிஸ் குழுக்களுக்கு பணிப்பு



**ஷம்ஸ் பாஹிம்**

ரிசாட் பதியுதீனின் சகோதரர் ரியாஜை விடுதலை செய்தது தொடர்பான விசா ரணைகளை, துரிதப்படுத்துமாறு விசா ரணைகளை முன்னெடுக்கும் இரு பொலிஸ் குழுக்களுக்கும் அறிவுறுத் தல் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் 06



நியூ டயமண்ட்

## கப்பலின் கெப்டனுக்கு 12 மில். ரூபா அபராதம்

**லோரன்ஸ் செல்வநா யகம்**



இலங்கை கடற்ப ரப்பில் அணமையில் தீ விபத்துக்குள்ளான நியூ டயமண்ட் எண் ணெய்க் கப்பலின் கெப்டனுக்கு கொழும்பு உயர்நீதி மன்றம் 12 மில்லியன் ரூபாவை அபராதமாக விதித் துள்ளது. மேற்படி அபராதப் பணத்தை வழங்கியதன் பின்னர் பிரதிவாதியை 06



முந்தியொரு காலத்தில ஐ டி இல்லாம படலைக்கு வெளியால போகேலாது,
இப்ப மாஸ்க் இல்லாம போகேலாது.....
கையோட செல்போன் இல்லாமலும் போகேலாது... என்ன கொடுமை அப்பா...!!

242 பிரித்தானிய கழிவுக் கொள்கலன்கள்

## நீதிமன்றம் நேற்று அதிரடி உத்தரவு




பிரிட்டனிலிருந்து இலங் கைக்கு கொண்டுவரப்பட்ட கழிவுகள் அடங்கிய 242 கொள் கலன்களை மீளத் திருப்பி அனுப்புமாறு, மத்திய சுற்றா டல் அதிகாரசபைக்கு நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது.

இக்கழிவுக் கொள்கலன் களை மீள் ஏற்றுமதி செய்யக் கோரி, மாற்றுக் கொள் கைக்கான மையம் 06

வானிலை தொடர்பாக

## மீனவருக்கு எச்சரிக்கை

மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை வழியாக பொத்து வில் வரையான கடல் பிரதேசங்களுக்குள் இன்று (15) கடற்படை மற்றும் மீனவர்கள் செல்வது ஆபத்தானது என்பதால் எச்சரிக்கை யாக இருக்குமாறு வானிலை அவதான நிலையம் தெரிவிக்கிறது.

நாட்டைச் சூழவுள்ள கடல் பிரதேசங்களில் 35 முதல் 45 கி.மீ. வரையான காற்று வீசும். எவ்வாறாயினும் இது 60 முதல் 70 கி.மீ. வரை அதிகரிக்கக் கூடும்.மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை வழியான பொத்துவில் வரையான கடல் பிரதேசங்களில் 55 முதல் 60 கி.மீ. வரை வீசும் காற்று, நீர்கொழும்பு முதல் 06

ரிஷாட் கைது விவகாரம்:

## முஸ்லிம்களை சீண்டி பார்க்கும் செயல்



அகில இலங்கை மக்கள் காங் கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனைக் கைதுசெய்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை முஸ்லிம்களைப் சீண்டிப் பார்க்கும் செயற்பா டாகவே நோக்க வேண் டியுள்ளதாக, ஸ்ரீலங்கா 06




# சர்வதேச செய்திகள்

## ஆப்கானில் உக்கிர மோதல்: ஆயிரக்கணக்கானோர் ஓட்டம்



தெற்கு ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மற்றும் பாதுகாப்பு படையினருக்கு இடையே கடந்த சில நாட்களாக நீடிக்கும் உக்கிர மோதல்களை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

இரு தரப்புக்கும் இடையே அமைதிப் பேச்சுவார்த்தைகள் நீடிக்கும் நிலையிலேயே மோதலும் அதிகரித்துள்ளது. பதற்றம் கொண்ட ஹெல்மாண்ட் மாகாணத்தின் லஷ்கார் காஹ் நகர் மீது தலிபான்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்தியதை அடுத்து ஆப்கான் பாதுகாப்பு படைகளுக்கு உதவியாக அமெரிக்கா வான் தாக்குதல்களை நடத்தியது.

இந்த மோதல் தீவிரம் அடைந்த நிலையில் உள்ளூர் மக்கள் மோட்டார் சைக்கிள்கள், டெக்சிகள் மற்றும் பஸ் வண்டிகளில் தமது வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர்.

“மோதல்கள் காரணமாக இதுவரை 5,100க்கும் அதிகமான குடும்பங்கள் அல்லது 30,000 பேர் வரை வெளியேறியுள்ளனர்” என்று ஹெல்மாண்ட் அகதிகள் திணைக்கள பணிப்பாளர் செயித் முஹமது ரமின் தெரிவித்துள்ளார்.

அண்டை வீட்டின் மீது மோட்டார் குண்டு தாக்கி இரு பெண்கள் கொல்லப்பட்டதை அடுத்து தாம் வெளியேறியதாக உள்ளூர் குடியிருப்பாளரான ஹெக்மதுல்லா தெரிவித்துள்ளார். ஐந்து மாவட்டங்களில் தற்போது மோதல் இடம்பெற்று வருவதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மனித உரிமை கௌன்சிலில் இணைவதில் சவூதி தோல்வி



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கௌன்சில் அங்கத்துவத்தை பெறும் சவூதி அரேபியாவின் முயற்சி தோல்வி அடைந்ததோடு சீனா மற்றும் ரஷ்யா மூன்று ஆண்டு தவணைக்கு அதன் அங்கத்துவத்தை பெற்றுள்ளன.

இதில் அங்கத்துவத்தை பெறுவதற்கு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் சீனா 139 வாக்குகளை வென்றது. ரஷ்யா மற்றும் கியூபா உட்பட 11 நாடுகள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டன.

பாகிஸ்தான், உஸ்பகிஸ்தான் தலா 169 வாக்குகளுடனும் நேபாளம் 150 வாக்குகளுடனும் அங்கத்துவத்தை பெற்றன.

சவூதி அரேபியா மாத்திரமே இந்த வாக்கெடுப்பில் தோல்வியை சந்தித்த நாடாகும். அந்த நாடு 90 வாக்குகளை மாத்திரமே பெற்றது.

“அரசியல் கைதிகளை விடுவித்து, யெமனில் கொடிய போரை முடிவுக்குக் கொண்டுவந்து அனைத்து பிரஜைகளுக்கும் அர்த்தபூர்வமான அரசியல் பங்களிப்புக்கு அனுமதி அளித்து அதிரடி சீர்திருத்தங்களை மேற்கொள்ளாத வரை சவூதி அரேபியா சர்வதேச அளவில் தொடர்ந்து ஒதுக்கப்படும்” என்று அரபு உலகத்திற்கான ஜனநாக அமைப்பின் பணிப்பாளர் நாயகம் சாரா லீஹ் வைட்சன் குறிப்பிட்டுள்ளார்.

## அகதி படகு மூழ்கி 21 பேர் உயிரிழப்பு



துனீசிய கடற்கரைக்கு அப்பால் கடந்த வார இறுதியில் மூழ்கிய அகதிப் படகில் இருந்த 21 பேர் உயிரிழந்திருப்பதாக நீதிமன்றம் ஒன்று தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களின் மேலும் நான்கு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தைத் தொடர்ந்து இதுவரை 17 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் ஏழு பேர் உயிரிடன் காப்பாற்றப்பட்டனர். தொடர்ந்து காணாமல் போன நிலையில் இருக்கும் நான்கு அல்லது ஐந்து பயணிகளையும் உயிருடன் காப்பாற்றும் வாய்ப்புக் குறைந்துள்ளதாக துனீசியாவின் ஸ்பெக்ஸ் நீதிமன்ற பேச்சாளர் முராத் துர்கி தெரிவித்துள்ளார்.

## ஆப்கானில் ஹெலிகள் மோதுண்டு 9 பேர் பலி



தெற்கு ஹெல்மாண்ட் மாகாணத்தில் காயமடைந்த படையினரை ஏற்றிவந்த இரு ஆப்கான் இராணுவ ஹெலிகொப்டர்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர். நவா மாகாணத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்துக்கு தொழில்நுட்பக் கோளாரே காரணம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் ஆப்கான் படையினருக்கும் தலிபான்களுக்கும் இடையே ஒருசில நாட்களாக உக்கிர மோதல் இடம்பெற்று வரவதோடு, ஆப்கான் இராணுவத்திற்கு ஆதரவாக அமெரிக்கா வான் தாக்குதல்களையும் நடத்தி வருகிறது.

### கொரோனா தொற்று உச்சம்:

## ஐரோப்பிய நாடுகளில் கட்டுப்பாடு அதிகரிப்பு



கொரோனா வைரஸ் தொற்று சம்பவங்கள் வேகமாக அதிகரித்து வரும் நிலையில் ஐரோப்பிய நாடுகள் அதனை கட்டுப்படுத்துவதற்கு போராடி வருகின்றன.

செக் குடியரசில் பாடசாலைகள், மதுபானக் கடைகள் மற்றும் இரவு விடுதிகள் மூடப்பட்டு மூன்று வாரத்திற்கு பகுதி அளவு முடக்க நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் 100,000 பேருக்கு அதிக நோய்த் தொற்று வீதம் பதிவாகி இருக்கும் செக் குடியரசில் உணவகங்கள் மூடப்பட்டு பொது இடங்களில் மதுபானத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்திலும் பகுதி அளவு பொது முடக்கநிலை அறிமுகப்படுத்தப்பட்டு, பொது உட்புற இடங்களிலும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் பல நாடுகளில் மருத்துவமனைக்கு அனுமதிக்கப்படுபவர் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகிறது. பிரான்ஸ் தலைநகர் பாரிசின் மருத்துவமனைகளில் அடுத்த வாரம் இறுதியாகும் போது அவசர சிகிச்சை பிரிவு படுக்கைகள் 90 வீதம் நிரம்பக் கூடும் என்று பொது வைத்தியசாலைக் குழுவின் தலைவர் மார்டின் ஹர்ஷ் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் நாட்டில் கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கும் அறிவிப்பு ஒன்றை ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோன் வெளியிடவிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன்படி பாரிஸ் உட்பட வைரஸ் தொற்று மையம் கொண்டிருக்கும் பகுதிகளில் இரவு நேர ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

மிகுந்த கவலையுடன் நிலைமையை அவதானித்து வருதாக ஜெர்மனி சான்செலர் அங்கேலா மெர்கல் தெரிவித்துள்ளார்.

“நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருவதை நான் கூறிக்கொள்கிறேன்” என்றும் அவர் தெரிவித்துள்ளார். பிரிட்டனில் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேற்றுத் தொடக்கம் மதுபானக் கடைகள் மற்றும் விடுதிகள் மூடப்படுகின்றன.

ஐரோப்பாவில் கடந்த வாரம் 700,000 கொரோனா தொற்று சம்பவங்கள் பதிவாகி உள்ளன. இது இந்த பெருந்தொற்று ஆரம்பித்தது தொடக்கம் பதிவான மிக அதிக எண்ணிக்கை என்று உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளார்.

## 2ஆவது முறை கொரோனா பாதித்த பெண் உயிரிழப்பு



கொவிட்–19 வைரஸ் தொற்று இரண்டாவது முறை தாக்கப்பட்ட வயது முதிர்ந்த நெதர்லாந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்வாறான சம்பவம் ஒன்று பதிவாவது இது முதல்முறை என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இந்த வைரஸ் தொற்றில் இருந்து உடலில் நோயெதிர்ப்பு சக்தி எத்தனை காலம் நீடிக்கிறது என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.


முதல் முறை வைரஸ் தொற்றுக்கு பின்னர் 59 நாட்களில் அவர் உயிரிழந்திருப்பதாக இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக சஞ்சிகையில் இது பற்றி வெளியாகியுள்ளது.

89 வயதான அந்தப் பெண் அரிதான நோய் ஒன்றினாலும் பாதிக்கப்பட்டிருந்துள்ளார். இந்நிலையில் அவருக்கு கீமோதெரபி சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு சில நாட்களில் இரண்டாவது முறை கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்த இரண்டு முறை ஏற்பட்ட கொரோனா பாதிப்புக் குறித்து ஆய்வு செய்திருக்கும் ஆய்வாளர்கள், இந்த இரண்டு சந்தர்ப்பத்திலும் வைரஸ் மரபணு அமைப்பில் மாறுபாடு ஏற்பட்டிருப்பதை உறுதி செய்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று இரண்டாவது முறை ஏற்பட்ட 23 சம்பவங்கள் உலகெங்கும் பதிவாகி இருந்தபோதும் அந்த அனைத்து நோயாளிகளும் பூரண குணமடைந்துள்ளதாக அந்த ஆய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

## கொரோனா தடுப்புமருந்து: உலக வங்கி நிதி ஒதுக்கீடு




அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கொரோனா தடுப்பு மருந்துகளின் கொள்வனவு மற்றும் விநியோகத்திற்காக 12 பில்லியன் டொலர் நிதிக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

ஒரு பில்லியன் மக்களுக்கு தடுப்பு மருந்தை செலுத்துவதற்கு உதவும் நோக்கில் இந்த நிதி ஒதுக்கப்படுவதாக உலக வங்கி வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் வைரஸ் தொற்றை எதிர்த்துப் போராட உதவ அடுத்த ஆண்டு ஜூன் வரை, உலக வங்கி 160 பில்லியன் டொலர் ஒதுக்கியிருந்தது.

அதன் ஓர் அங்கமாக 12 பில்லியன் நிதி வழங்கப்படும். “கொவிட் அவசர நிலையை கையாள்வதற்கு எமது விரைவான செயற்பாட்டை நீடித்து விரிவுபடுத்துவதன் மூலம் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு நியாயமான மற்றும் சமமான வகையில் தடுப்பு மருந்துகளை பெற முடியுமாக இருக்கும்” என்றும் உலக வங்கி வலியுறுத்தியது.

உலகெங்கும் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் எண்ணிக்கை 38 மில்லியனைத் தாண்டி இருப்பதோடு ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

## புதிய 'ஐபோன் 12' ரக திறன்பேசிகள் அறிமுகம்



ஆப்பிள் நிறுவனம் அடுத்த தலைமுறை ஐபோன் 12 ரகத் திறன்பேசிகளை அறிமுகம் செய்துள்ளது.

வேகமான ஐந்தாம் தலைமுறை (5ஜி) கட்டமைப்பில் செயல்படும் அந்தத் திறன்பேசிகள் சில வண்ணங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

ஹோம்பேட் மினி ஸ்மார்ட் ஸ்பீக்கர், ஐபோன் 12 மினி, ஐபோன் 12, ஐபோன் 12 ப்ரோ மற்றும் ஐபோன் 12 ப்ரோ மேக்ஸ் ஆகியவையே அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

புதிய ஸ்மார்ட் ஸ்பீக்கர் மற்றும் ஐபோன்களில் சக்திவாய்ந்த பிரோசஸர், நீண்ட பெட்டரி பெக்கப் மற்றும் வயர்லெஸ் சார்ஜிங் போன்ற வசதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல நாடுகளிலும் நாளை முதல் இந்த திறன்பேசிகளை முன்பதிவு செய்யலாம். வரும் 23 ஆம் திகதி முதல் இது சந்தையில் கிடைக்கும்.

இருப்பினும், முதன்முறையாக இந்த வகை ஐபோன் திறன்பேசிகளோடு இலவசமாகக் காதொலிக் கருவியும் மின்னேற்றக் கருவியும் வழங்கப்பட மாட்டாது

கட்டுக்கடங்காமல் பெருகிவரும் மின்குப்பையைக் குறைத்து சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதே அதன் நோக்கம் என்று ஆப்பிள் நிறுவனம் தெரிவித்தது.

வாடிக்கையாளர்கள், திறன்பேசிகளை மின்னேற்றம் செய்வதற்குரிய யு.எஸ்.பி–சி வடங்களைத் தனியே விலை கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டும். அது, வாடிக்கையாளர்கள் சிலருக்கு ஏமாற்றமளித்துள்ளது.

## கடல் எல்லையை தீர்மானிக்க இஸ்ரேல்–லெபனான் சந்திப்பு




தொடர்ந்து போர் சூழலில் இருக்கும் இஸ்ரேல் மற்றும் லெபனான் நீண்ட காலமாக நீடிக்கும் கடல் எல்லை பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முதல் சுற்று பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளது.

அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தை லெபனான் நகரான நகுராவில் ஐ.நா அமைதிகாக்கு படைத் தளத்தில் இடம்பெற்றுள்ளது. எனினும் இதன்மூலம் உறவுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு ஏதும் இல்லை என்று இது தரப்பும் வலியுறுத்தியுள்ளன.

நேற்று ஒரு மணி நேரம் மாத்திரமே இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தை முடிவில் வரும் ஒக்டோபர் 28 ஆம் திகதி மீண்டும் சந்திப்பதற்கு இரு தரப்பும் இணங்கியதாக லெபனான் பாதுகாப்பு வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

1948–49 இஸ்ரேல்–அரபு யுத்தம் தொடக்கம் போர் சூழலில் இருக்கும் லெபனான் மற்றும் இஸ்ரேலுக்கு இடையே எல்லைகள் தொடர்பில் உடன்பாடு ஒன்று எட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம் 0112429367

விற்பனை பிரிவு 0112429444, 0112429378

ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2020 ஒக்டோபர் 15 வியாழக்கிழமை

தினகரன் THINAKARAN

இன்றைய சுபதினம்

சார்வரி வருடம் ஆவணி 27

ராகுகாலம் : காலை : 9.00 - 10.30வரை

சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: சித்தயோகம்

நட்சத்திரம்: திருவாதிரை பகல் 1.33

திதி: தசமி

தொழுகை நேரம்

14 முதல் 16 வரை

சுபஹ் - 04.41

லுஹர் - 11.58

அஸர் - 03.16

மஃரிப் - 05.56

இஷா - 07.06




# தரம் 05 புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நிதிக் கொடுப்பனவுகள்

## ஊ. ந. பொறுப்பு நிதியம் பிரதமரிடம் ரூபா.90 மில். காசோலை கையளிப்பு



இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு, புலமைப் பரிசில் வழங்குவதற்காக,அந்நிதியம் 90 மில்லியன் ரூபா (ரூ.89,895,000) பெறுமதியான காசோலையை,பிரதமர் மஹிந்த ராஜபகஷவிடம் கையளித்துள்ளது.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தலைவர் சிறியான் டி சில்வா விஜயரத்ன நேற்று முன்தினம் (13) அலரி மாளிகையில் வைத்து,பிரதமரிடம் இதை கையளித்தார்.

2019ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை நிதிய உறுப்பினர்களின் 5 ஆயிரத்து 993 பிள்ளைகளுக்கென முதற் கட்டமாக, இந்நிதி வழங்கப்படவுள்ளது.

மக்கள் வங்கியில் இந்நிதி வைப்பிலிடப்பட உள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தொழில் அமைச்சராகப் பதவி வகித்த 1994ஆம் ஆண்டு இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தேசத்தின் பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் வகையிலும், உழைக்கும் மக்களுக்கு செய்யும் உபகாரமாகவும் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

06

## பிரதமரின் ஊடக பணிப்பாளராக நியமனம்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஊடக மற்றும் தொலைத் தொடர்பு பணிப்பாளராக விஜயானந்த ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலப் பகுதியான, 2006 முதல் 2014 வரை இவர் ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பு செயலாளராக பணியாற்றியிருந்தார்.

மேலும், ஊழியர் நம்பிக்கை நிதிய சபையின் தொலைத் தொடர்பு தலைவராகவும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித வள அபிவிருத்தி நிறுவனத்தின் சபை உறுப்பினராகவும் இவர், பணியாற்றியமை

06

## பிரதமர் மஹிந்த கருணாவுக்கு வழங்கிய பதவி



முன்னாள் பிரதி அமைச்சரான விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு (கருணா) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விசேட பதவி ஒன்றை வழங்கியுள்ளார்.மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கான பிரதமரின் மாவட்ட இணைப்பாளராக இவரை, பிரதமர் நியமித்துள்ளார். இது தொடர்பிலான நியமனக் கடிதம் கருணா அம்மானுக்கு வழங்கப் பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின்

06

## 74 பௌத்த மதகுருமார் உட்பட 90 பேர் சுய தனிமைப்படுத்தலில்

பிலியந்தலை, சிலுமின விகாரையிலுள்ள 74 பௌத்த மதகுருமார் உட்பட90 பேரை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு சுகாதார அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

பிலியந்தலையிலுள்ள ககாபொல சிலுமின மகாவிகாரையின் தலைமை மதகுரு உட்பட 90 பேருக்கே தனிமைப்படுத்தல் உத்தரவு பிறப்பிக்கப்படடுள்ளது.

கிம்புலாவலயிலிருந்து சிலுமின விகாரைக்கு சென்ற ஒருவர், கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

இதைத் தொடர்ந்தே அதிகாரிகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவரின் மகன் குறிப்பிட்ட விகாரையின் மதகுரு எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

### ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு

## 2 வாரத்திற்கு ஒருமுறை பி.சி.ஆர் பரிசோதனைக்கு ஏற்பாடு

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை இருவாரத்திற்கு ஒரு முறை பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கொவிட் 19 தொற்று பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதேபோன்று அனைத்து ஊழியர்களினதும் நிரந்தர முகவரியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போதைய கொவிட் 19 நிலைமையின் காரணமாக பியகம மற்றும் கட்டுநாயக்க வர்த்தக வலையம் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள ஆடைத் தொழிற்சாலைகளை முன்னெடுப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக விசேட பேச்சுவார்த்தையும் நடத்தப் பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட தொழிற்சாலை ஊழியர்கள் தங்கியுள்ள இடங்கள் தொடர்பில், விசேட கவனம் செலுத்த வேண்டுமென்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளி பேணுதல், 03 வாரத்துக்கொருமுறை உடல் வெப்பத்தை அளவிடுதல் போன்றன ஆரம்பத்தில் மேற்கொள்ள வேண்டிய,பாதுகாப்பான விடயங்களென சுகாதார அமைச்சு ஆலோசனை தெரிவித்துள்ளது.

இதேபோன்று தற்போதைய கொவிட் 19 நோய்த் தொற்றுக்கு மத்தியில், தைத்த ஆடைகளைப் பொதி செய்வது தொடர்பில், விசேட ஆலோசனைகளை பின்பற்றவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழகங்கள் மூடப்படமாட்டாது

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுக்கு மத்தியில், பல்கலைக்கழக கட்டமைப்பை மூடும் எவ்வித தீர்மனங்களும் எடுக்கப்படவில்லை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுக்கு மத்தியிலே தரம் ஐந்து பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளது.மேலும் கல்விப் பொது தராதர உயர் தர மாணவர்களும் இன்றைய கொரோனா சூழ்நிலையிலே பரீட்சைகளுக்கு தோற்றி வருகின்றனர்.

இந்நிலையில் பல்கலைக்கழகங்களை மூடுவதற்கான எந்தத் தீர்மானங்களும் இதுவரை எடுக்கப்படவில்லை.

எனவே பல்கலைக்கழகங்களை மூடுவது நடைமுறைச் செயற்பாடல்ல என்றும் அவர் மேலும் கூறினார்.

## அத்தியாவசிய பொருட்கள் உடனடியாக விலை குறைப்பு

**டின் மீன் ரூ.200, பருப்பு ரூ.150, சீனி ரூ. 85, பெ. வெங்காயம் ரூ.100**

வாழ்க்கைச் செலவு மற்றும் கொவிட் 19 நோய்த் தொற்றுடன் கூடிய நிலைமைகளை கவனத்திற் கொண்டு பருப்பு, டின் மீன், பெரிய வெங்காயம் மற்றும் சீனி ஆகிய அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதி வரி நீக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவற்றின் மீதான வரி நீக்கப் பட்டுள்ளதால், நேற்று நள்ளிரவிலிருந்து, டின் மீன் (பெரியது) 200 ரூபாவுக்கும், பெரிய வெங்காயம் ஒரு கிலோ 100 ரூபாவுக்கும் சீனி ஒரு கிலோ 85 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய முடியும்.

இந்த அத்தியாவசிய பொருட்கள் உட்பட 500 ரூபாவுக்கும் அதிகமாக ச.தொ.ச நிறுவனத்தில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது ஒரு கிலோ பருப்பை 150 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

### ச.தொ.ச ஊடாக தேங்காய் விற்பனை

தெங்கு அபிவிருத்தி சபை, குருநாகல் பெருந்தோட்ட கம்பனி மற்றும் சிலாபம் பெருந்தோட்ட கம்பனி என்பன கொழும்பு நகரத்திற்கு தேங்காய் வழங்குவதை அதிகரித்துள்ளன.

இதனால் ச.தொ.ச விற்பனை நிலையங்களில் நியாயமான விலைகளில் நுகர்வோர் தேங்காய்களை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்பட்டுள்ளது.

## மாலைதீவிலிருந்து வந்தவருக்கு கொரோனா உறுதி

மாலைதீவிலிருந்து நான்கு மாதங்களுக்கு முன்பு இலங்கைக்கு வந்து தனிமைப்படுத்தல் பணியை முடித்த ஒருவருக்கு,தற்போது கொரோனா தொற்றியுள்ளமை கண்டறியப்பட்டது.

இரத்தினபுரி கஹவத்த பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள இவருக்கு, இறுதியாக எடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் கொரோனா வைரஸ் இருப்பது கண்டறியப் பட்டதாக கஹவத்த நிர்வாக பொது சுகாதார ஆய்வாளர் தெரிவித்தார்.

இதையடுத்து அந்நபரின் உறவினர் வீடுகள் மற்றும் அவர் பார்வையிட்ட கடைகள் உட்பட 12 இடங்களில் வசிப்பவர்கள் தனிமைப்படுத்தப்பட உள்ளனர். மாலைதீவிலிருந்து திரும்பிய

06

## பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக காசிலிங்கம் கீதநாத் நியமனம்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்புச் செயலாளராக காசிலிங்கம் கீதநாத் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கடந்த ஆட்சியில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது காசிலிங்கம் கீதநாத், எதிர்க் கட்சித் தலைவரின் தகவல் மற்றும் தகவல் தொடர்புப் பணிப்பாளராகவும், தற்போதைய

06


விரைவில் வெளிவருகிறது!

மாணவச் செல்வங்களுக்காக

வார நாட்களில்...



உங்கள் தினகரனுடன்

தரம்-5 மாணவருக்கான புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி மாதிரி வினாத்தாள்கள்

மற்றும்

கொழும்பு உட்பட நாடெங்குமுள்ள பிரபல ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டல் பயிற்சிகள்...

மாணவர் அறிவுத் தேடலுக்காக தினகரன் வழங்கும் வாய்ப்பு


## கொழும்பில் புதிதாக 11 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் 11 பேர் புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர். இந்நிலையில் வைரஸ் தொற்று பரவுவதைத் தடுக்கும் வகையில் 06 விசேட குழுக்கள் செயற்படுத்தப் பட்டுள்ளன.

கொழும்பு மாநகர சபையினால் இதற்கான செயற்திட்டம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இக் குழு கொழும்பு நகரின் அனைத்துப் பகுதிகளிலும் வைரஸ் தொற்றாளர்களை இனங்காணும் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளது.

கடந்த 06ஆம் திகதியிலிருந்து இதுவரை கொழும்பு நகருக்குள் 2,884 பி சிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் வைரஸ் தொற்று நோயாளர்கள் 10 பேர் இனங் காணப்பட்டதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம மருத்துவ அதிகாரி டாக்டர் ருவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகருக்குள் வைரஸ் தொற்று பரவுதலைத் தடுக்கும் அதேவேளை, கொழும்புக்கு வெளியே தொற்றுப் பரவாமலிருக்க, முறையான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

இதற்காக ஆறு குழுக்கள் செயற்படுவதுடன் அக்குழுக்களில் 49 பொது சுகாதார பரிசோதகர்களும் உள்ளடங்குகின்றனர்.

கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை கொழும்பு நகருக்குள் மாத்திரம் 3,833 பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒக்டோபர் 04ஆம் திகதிமுதல் இதுவரை 2,884 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(ஸ)



இலங்கை – ஜெர்மன் தொழில்நுட்ப கல்லூரியில் பயிலும் மாணவர்களின் கற்றல் அபிவிருத்திக்கென, இலங்கை போக்குவரத்து சபையின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் டாக்டர் சீதா அரம்பேபொல தலைமையில் விஷேட கூட்டம் இடம்பெற்றது. இதில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, தொழில் நுட்ப கல்லூரி அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 129.03 | 135.18 |
| கனடியன் டொலர் | 137.48 | 142.97 |
| யூரோ | 212.73 | 220.23 |
| ஜப்பான் யென் | 1.7127 | 1.7870 |
| சிங்கப்பூர் டொலர் | 132.96 | 138.23 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 234.68 | 242.40 |
| சுவிஸ் பிராங்க் | 197.64 | 205.29 |
| அமெரிக்க டொலர் | 182.14 | 188.46 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 488.66 | கட்டார் ரியால் | 50.61 |
| குவைத் டினார் | 602.29 | சவூதி ரியால் | 49.12 |
| ஓமான் ரியால் | 478.65 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.16 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 29ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 27

**குறள் தரும் சிந்தனை**

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்

விருந்தினரை முன்னே போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ?.

## மக்களின் வாழ்க்கை செலவை குறைக்கும் சிறந்த நடவடிக்கை

கொவிட் 19 தொற்று மற்றும் அதனைத் தொடர்ந்து எழுந்துள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி அரசாங்கம் பல்வேறு வகையான நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. குறிப்பாக கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களை இனங்காண்பதற்கும், சிகிச்சை அளித்து குணப்படுத்துவதற்கும் அத்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும் பரந்த அடிப்படையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அதேநேரம், தற்போதைய சூழலில் ஏற்பட்டுள்ள நிலைமைகளால் மக்கள் பொருளாதார ரீதியில் நெருக்கடிகளுக்கு உள்ளாவதைத் தவிர்க்கும் வகையில் பல நிவாரண வேலைத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அவ்வாறான நடவடிக்கைகளில் ஒன்றாக அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டிருக்கின்றன. ரின் மீன், பெரிய வெங்காயம், சீனி, பருப்பு ஆகிய நான்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளே இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன. இப்பொருட்களுக்கான இறக்குமதி வரியை நீக்கி இவ்விலைக் குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன் பயனாக பெரிய ரின்மீன் ஒன்றை 200 ரூபாவுக்கும், ஒரு கிலோ சீனியை 85 ரூபாவுக்கும், பெரிய வெங்காயம் ஒரு கிலோவை 100 ரூபாவுக்கும் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அத்தோடு, பருப்புக்கான இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளதோடு கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய (சதொச) விற்பனைக் கூடங்களில் 500 ரூபாவுக்கு மேல் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது ஒரு கிலோ பருப்பை 150 ரூபாவுக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் விலை குறைப்பு செய்யப்பட்டிருக்கின்றது.

இவை இவ்வாறிருக்க, கொழும்பிலும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும் தேங்காயின் விலை அதிகரிப்பதைத் தவிர்க்கும் வகையிலும் விசேட வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி, சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி என்பவற்றின் ஊடாகக் கொழும்புக்கான தேங்காய் விநியோகம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழலில் மக்களின் பொருளாதார நலன்களை கருத்திற் கொண்டு இந்நடவடிக்கைகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இதேவேளை மக்களின் பொருளாதார நலன்களை முன்னிலைப்படுத்தி அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்நடவடிக்கைகளை நாட்டு மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

இந்த உணவுப் பொருட்கள் அனைத்தும் நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தினதும் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருப்பவையாகும். இப்பொருட்களைப் பயன்படுத்தாத எந்தவொரு குடும்பமும் இந்நாட்டில் இருக்க முடியாது. இந்த நிலையில் தான் நாட்டின் பெரும்பாலான மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் இந்த நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான அரசாங்கம் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமையளித்து செயற்படுவதில் ஒருபோதும் பின்னிற்பதில்லை. அந்த வகையில் கடந்த ஆட்சிக் காலத்தில் மக்கள் மீது சுமத்தப்பட்டிருந்த 10 வரிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்ததும் முற்றாக நீக்கியதோடு ஐந்து வரிகளை சீரமைத்தும் குறைத்தும் மக்களுக்கு நிவாரணம் அளித்திருக்கிறது. அது மாத்திரமல்லாமல் கொவிட் 19 தொற்று ஆரம்பமான கடந்த மார்ச், ஏப்ரல் மாத காலப் பகுதிகளிலும் மக்கள் நலன்களை கருத்திற் கொண்டு பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் தற்போது அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் இவ்விலைக் குறைப்பானது காலத்துக்குப் பொருத்தமான ஒரு செயற்பாடாகும். அதனால் கொவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்தவும் மக்களின் பொருளாதார நலன்களை முன்னிலைப்படுத்தியும் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு மக்கள் அதிக ஒத்துழைப்பும் ஆதரவும் நல்க வேண்டும். அதனைத் தம் பொறுப்பாக கருதி செயற்படுவது அவசியம். என்றாலும் சிலர் தற்போதைய சூழலைப் பயன்படுத்தி அற்ப அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றனர். ஆனால் இது அரசியல் இலாபம் தேடுவதற்கான சூழல் அல்ல. இத்தொற்றின் அச்சுறுத்தலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளுக்கு எல்லோரும் ஒன்றுபட்டு ஒத்துழைப்பு நல்க வேண்டும். எவரும் அற்ப அரசியல் இலாபம் தேட இடமளிக்கலாகாது.

ஆகவே கொவிட் 19 தொற்றின் பரவலை முழுமையாகக் கட்டுப்படுத்தி அதிலிருந்து மீட்சி பெறுவதற்கு ஏற்ப தம் செயற்பாடுகளை அமைத்துக் கொள்வது மக்களின் பொறுப்பாகவும் கடமையாகவும் விளங்குகின்றது. அது இத்தொற்றின் பரவலைத் தடை செய்வதோடு மக்களதும் நாட்டினதும் பொருளாதார சுபீட்சத்திற்கும் வழிவகுக்கும்.

editor.tkn@lakehouse.lk

### டவர் மண்டப நாடக, அரங்கியல் கல்லூரி

# மாணவர்களுக்கான மாதாந்த புலமைப்பரிசில் தொகையை அதிகரிக்க பிரதமர் அறிவுறுத்தல்



டவர் மண்டப நாடக மற்றும் அரங்கியல் கல்லூரியின் மாணவர்களுக்கு வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபா மாதாந்த புலமைப் பரிசில் நிதியை 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமையன்று அறிவுறுத்தியுள்ளார்.

டவர் மண்டப அரங்க அறக்கட்டளையின் 296ஆவது நிர்வாக சபை குழுக் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்ற போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அதற்கு மேலதிகமாக டவர் மண்டப நாடக மற்றும் அரங்கியல் கல்லூரியில் ஆண்டுதோறும் சிறந்த திறமையை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா பணப் பரிசை, ரூபா 10 ஆயிரமாக அதிகரிப்பதற்கும் பிரதமர் அறிவுறுத்தினார்.

அது தொடர்பான முன்மொழிவுகளை இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க முன்வைத்தார்.

டவர் மண்டப அறக்கட்டளையின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி டக்ளஸ் சிறிவர்தன, குறித்த முன்மொழிவுகளுக்கானபத்திரத்தை முன்வைத்து,தூரப்பிரதேசங்களிலிருந்து வருகை தருகின்ற நாடக மற்றும் அரங்கியல் கல்லூரியின் மாணவர்கள் கடந்த காலங்களில் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தியுள்ளதாகவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அத்துறை சார்ந்த பாடநெறிக்கான சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கத்தினால் கலைஞர்களுக்கு வழங்கப்படும் வீடுகள், பிற்பட்ட காலங்களில் விற்பனை செய்யப்படுவதால் கலாபுர போன்ற இடங்களின் முக்கியத்துவம் குறைந்து வருவதாக தெரிவித்த பிரதமர், அவ்வாறு அரசாங்கத்தினால் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள் விற்பனை செய்யப்படின், அவற்றை மீண்டும் அரசாங்கத்திற்கு கையகப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் குறிப்பிட்டார்.

அதற்கு மேலதிகமாக கலாபுரவில் இதுவரை அபிவிருத்தி செய்யப்படாத, அரசாங்கத்திற்கு சொந்தமான இடத்தில் கலைஞர்களுக்கான வீட்டுத் திட்டமொன்றை நிர்மாணிக்க முடியும் என பிரதமரின் செயலாளர் காமினி செனரத் சுட்டிக்காட்டினார். அதற்கான ஆய்வுகளை முன்னெடுக்குமாறு பிரதமர் தெரிவித்தார்.

அநுராதபுரம், நுவரெலியா, மொனராகலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் கலைஞர்களுக்காக ஒதுக்கப்படும் விடுமுறை ஓய்வு விடுதியொன்றை அமைப்பதற்கான வேலைத் திட்டத்தை தயாரிப்பதற்கான இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கை தொடர்பில் ஆராயுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோருக்கு அறிவித்தார்.

டவர் மண்டப அரங்க அறக்கட்டளை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாலி வளாகத்தின் பரஸ்பர புரிந்துணர்வின் கீழ் கற்கைநெறிகள் மற்றும் நாடக விழாவை நடத்துவதற்கான பிரதமரின் அனுமதி இதன் போது கிடைத்தது.

நாடக மற்றும் அரங்கியல் கல்லூரியில் திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு வெளிநாட்டு புலமைப் பரிசில்களை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தி, இந்தியா, ரஷ்யா உள்ளிட்ட நாடகக் கலை தொடர்பில் வெளிநாட்டு புலமைப் பரிசில்களை வழங்கக் கூடிய விசேட கற்கைநெறிகள் கற்பிக்கப்படும் நாடுகள் குறித்து ஆராய்ந்து அவர்களுக்கு புலமைப்பரிசில்களை பெற்றுக் கொடுக்கவும் இந்த கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.



கலைஞர்களுக்கு வழங்கப்படும் விபத்து காப்புறுதி வழங்கலின் போது மேடை நாடக கலைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கி, முதல் கட்டமாக நிதி வழங்கலை ஆரம்பிப்பதற்கு இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ்.டி.கொடிக்கார, டவர் மண்டப அறக்கட்டளையின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி டக்ளஸ் சிறிவர்தன, நிர்வாக மற்றும் அபிவிருத்தி பணிப்பாளர் நிபுன திசாநாயக்க, பதில் கலாசார பணிப்பாளர் தரணி அனோஜா கமகே, நிதி அமைச்சின் பிரதி பணிப்பாளர் குலோஜா பீரிஸ், டவர் மண்டப அறக்கட்டளையின் பணிப்பாளர் குழு உறுப்பினர்களான சரிதா பிரியதர்ஷினி பீரிஸ், ஹாசிம் உமர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(பிரதமர் ஊடக பிரிவு)

# விழிப்புலனற்ற மக்களுக்கு வழிகாட்டியாக வாழ்வோம்



**சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்**

உலகில் ஒவ்வொரு மனிதனும் அங்கக் குறைபாடுகள் இன்றியும், தேகாரோக்கியமாகவும் வாழவே விரும்புகிறான். இயற்கையிலேயே சிலர் அங்கவீனக் குறைபாடுகளுடன் பிறக்கின்றனர். ஆனால் அவர்களை மனிதன் என்ற வகையில் குறைவான நிலையில் மதிப்பிடுவது தவறாகும். அங்கக் குறைபாடுகள் உள்ளவர்களும் மனிதப் பிறவிகளே. அவர்களுக்கும் சமூகத்தில் சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே மனிதாபிமான நிலை.

சமூகத்தில் அவர்களாலும் உயர்ந்த நிலைக்கு வர முடியும். சமூகத்தில் அவர்கள் குறை பிறவிகள் அல்லர் போன்ற எண்ணக்கருக்களை விளைவிப்பதற்காக குறித்த அங்கவீனம் தொடர்பாக தேசிய, சர்வதேச ரீதியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விழிப்புலன் இழந்தோருக்கான சர்வதேச தினம் இன்றாகும். விழிப்புலனில் ஏற்படக் கூடிய குறைபாடு காரணமாக பார்வையை இழந்துள்ளோரை கௌரவிக்கவும், அவர்கள் பற்றிய உணர்வுகளை ஏற்படுத்தவும், அத்தகையோருக்கு உதவிகளை வழங்குவதற்கும் ஒக்டோபர் மாதம் 15ம் திகதி சர்வதேச விழிப்புலனற்றோர் தினம் அல்லது வெள்ளை பிரம்பு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

பொக்கிஷமாகப் பாதுகாக்க வேண்டிய பொருட்களைக் கண் மாதிரி பாதுகாக்க வேண்டும் எனச் சொல்வது வழக்கம். கண் என்பது அத்தனை பத்திரமாக, பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட வேண்டியதொரு உறுப்பாகும். நமது உள்ளத்து உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பவை கண்களே. கண்களில் உண்டாகிற பிரச்சினைகள் ஆரோக்கியத்துக்கு மட்டுமின்றி, அழகுக்கும் உகந்ததல்ல.

இந்த உலகத்தைக் கண்டு ரசிப்பதற்கு நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிசய உறுப்பு கண்ணாகும்.

மனிதனின் கண் என்பது ஒளியை உணர்வதற்கு உதவும் ஓர் உறுப்பாகும். வெவ்வேறு விதமான ஒளியை உணரும் உறுப்புகள் பல விலங்குகளிடையே காணப்படுகின்றன. மிக எளிய கண்கள் சுற்றுப்புறத்தில் உள்ள ஒளி அல்லது இருளை மட்டும் கண்டு உணரவல்லவை. இன்னும் மேம்பட்ட கண்கள் காட்சிகளைப் பார்க்கும் திறன் அளிக்கக் கூடியவை. பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன, மீன்கள் உட்பட்ட பல மேல்நிலை உயிரினங்கள் இரு கண்களைக் கொண்டுள்ளன. இவ்விரு கண்களும் ஒரே தளத்தில் அமைந்து ஒரே முப்பரிமாணப் படிமத்தை காண உதவுகின்றன.

மனிதர்களின் பார்வையும் இவ்வாறானதே. இரு கண்களும் வெவ்வேறு தளங்களில் அமைந்து இரு வேறு படிமங்களை (monocular vision) காண உதவுகின்றன. இந்தக் கண்களில் ஏற்படக் கூடிய பாதிப்புக்களே பார்வையீனத்தை ஏற்படுத்துகின்றன. இத்தகைய பார்வையீனம் இயற்கையாக அமையலாம். அன்றேல் விபத்துக்கள், நோய்கள் காரணமாக அமையலாம். நமது கண் ஒரு நிழற்படக் கருவியைப் போன்று இயங்குகிறது. ஒளியின் உதவியுடன் ஒரு நிழற்படக் கருவி பொருட்களைப் படம் பிடிப்பதைப் போல, நமது கண்ணும் ஒளியின் உதவியுடன் பொருட்களின் உருவத்தை கணப்பொழுதில் படம் பிடித்து, மனதில் பதிவு செய்து, பின்பு அதை மூளையில் விருத்தி செய்கிறது.



கண்ணின் அனைத்து பாகங்களும் ஒருங்கிணைந்து, ஒரு குழுவைப் போன்று இயங்கி நமக்குப் பார்வை அளிக்கிறது. இதில் விழிப்படலம் என்ற பாகம் முக்கிய பங்கு வகிக்கிறது. கருமையான கண்மணிக்குள் நுழையும் ஒளிக்கதிர்களை விழிப்படலம் திசைதிருப்புகிறது. திசை திரும்பிய ஒளிக்கதிர் கண்மணிக்குப் பின்னால் உள்ள வில்லையைச் சென்றடைகிறது. இந்த வில்லை தனது உருவத்தை மாற்றிக் கொண்டு, தொலைவில் மற்றும் அருகில் உள்ள பொருட்களின் மீது ஒளிக்கதிர்களை ஒருமுனைப்படுத்துகிறது. இதனாலேயே ஒரு பொருள் எமக்குப் புலப்படுகிறது.

கண்பார்வையற்ற விழிப்புலனற்ற மானிடர்பால் எமது கவனம் ஈர்க்கப்பட வேண்டிய நல்லதோர் வாய்ப்பினை உலகுக்கு துலாம்பரமாக வெளிச்சமிட்டு காட்டுவதற்காகவே வெள்ளைப் பிரம்பு தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது. மூன்றாம் உலக நாடுகளை விட மேற்கத்தேய நாடுகளில் வெள்ளைப் பிரம்பு தினத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதைக் காண்கிறோம். 'வெள்ளைப் பிரம்பு' உலக விழிப்புலனற்ற சம்மேளனத்தினால் 1969 ஒக்டோபர் 15 முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இவ்விடத்தில் இதன் பின்னணியை நாம் ஆராய்வோமாயின் அது எம்மை இரண்டாவது உலக மகாயுத்தத்தின் இறுதிக்கு இட்டுச் செல்கின்றது. இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அமெரிக்கா ஜப்பானில் ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும் அணுகுண்டை வீசியது. இச்சம்பவம் உலக வரலாற்றால் மறக்க முடியாத ஒரு கறை படிந்த நிகழ்வாகும். இன்றும் கூட இப்பகுதிகளில் பிறக்கின்ற குழந்தைகள் பல குறைபாடுகளுடனேயே பிறப்பதை நாம் செய்திகள் மூலம் அறிகின்றோம். அவற்றுள் முக்கியமான ஒன்றாக விழிப்புலன் அற்றோரின் நிலையினையும் காண்கின்றோம்.

இவ்வாறு பெருமளவானோர் ஜப்பானில் பார்வை இழக்கவே, அதற்கான சிகிச்சையை பெற்றுக் கொள்வதற்காக அவ்வேளை ஜப்பானில் பிரபல்யமாக இருந்த வைத்தியர் Heyவை மக்கள் நாடினர். தம்மை நாடி வந்தோரில் கூடியளவிலானோரின் பார்வையை வைத்தியரால் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. இத்தகையதொரு பரிதாபகரமான நிலைமையை எதிர்நோக்கிய வைத்தியர் Hey, மனிதர்கள் என்ற வகையில் அவர்களையும் சமூகத்தில் நடமாட வைப்பதற்கு வழிதேடினார். அதன் பிரதிபலனாக உருவானதே வெள்ளைப் பிரம்பாகும்.

வைத்தியர் Hey யின் சிந்தனையில் விசையும் திசையும் உதித்தது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஆபத்து ஏற்படாத வண்ணம் நகர்வதற்கு பயன்படுத்திய முறையில் வெள்ளைப் பிரம்பு மகத்துவம் பெற்றது. வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்துவோர் விழிப்புலனற்றோர் ஆவர். இவ்விழிப்புலனற்றோர், ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நகரும் போது அல்லது நடமாடும் போது அவர்களுக்கு பக்கத்துணையாக தாம் நகரும் இலக்கை நோக்கிய பயணத்திற்கும் வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்துகின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, விழிப்புணர்வு உள்ளோர் வெள்ளைப் பிரம்பை பயன்படுத்தி வரும் ஒருவரை விழிப்புலனற்ற ஒருவர் என்று இனம் கண்டு கொள்ளவும், அவர்களுக்கு உதவுவதற்கும் வெள்ளைப் பிரம்பு உதவுகின்றது. இந்த இயந்திர யுகத்தில் தங்களுக்கென ஒரு துணையாக இவ்வெள்ளைப் பிரம்பை உருவாக்கி அதனை கையிலேயே துணையாகத் தந்து எவரது உதவியுமின்றி தாமாகவே நகருவதற்கு இவ்வெள்ளைப் பிரம்பு ஒரு மனிதனாகவே உதவுவது விழிப்புலனற்றோருக்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகும். இதற்கான உலக அங்கீகாரம் 1969இல் கிடைத்தது.

'கொரோனாவுக்கேற்ப வாழக் கற்றல் என்ற தலைப்பு சற்று மயக்கத்தைத் தரக் கூடும். கொரோனாவோடு வாழுதல், கொரோனாவுக்கேற்ப வாழுதல் எனும் இரு எண்ணக்கருக்கள் உள்ளன. இவற்றில் இரண்டாவது எண்ணகருவைத் தான் கல்விப்புலத்தினர் விதந்துரைப்பர்.

# கொரோனாவுக்கேற்ப வாழக் கற்றுக் கொள்வதே இன்றைய நெருக்கடியை சமாளிக்கும் ஒரே வழி

கல்விப் புலத்தில் பொதுவாக நான்கு தூண்கள்(4pillers) பற்றி அடிக்கடி பேசப்படுவதுண்டு. அந்தத் தூண்களிலொன்றாக ஒன்றாக வாழக் கற்றல் (learning together)என்ற ஒரு எண்ணக்கரு உண்டு. அந்தக் கற்றல் தற்போதைய காலத்தில் அவசியம் தேவைப்படும் ஒன்றாகத் திகழ்கிறது.

ஆம், உலகின் சகல பாகங்களிலும் வியாபித்திருக்கின்ற கொரோனா வைரஸ் தீநுண்மி இன்று எம்மை விட்டு விலகுவதாக இல்லை. அது நிரந்தரமாக எம்முடன் தொடர்ச்சியாக பயணிக்கப் போகின்றது. எனவே அதற்கேற்ப நாம் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அதாவது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று ஆரம்பத்தில் ஒரு விஞ்ஞானி கூறியிருந்தார். அதனைச் சிலர் விமர்சனம் செய்தனர்.

## கொரோனா உலகை விட்டு முற்றாக நீங்கும் காலம் வெகு தொலைவிலேயே உள்ளது. அவ்வாறிருக்கையில், வைரஸ் தொற்று தலைதூக்கும் போதெல்லாம் நாட்டை முடக்கி வைத்திருப்பது எத்தனை காலத்துக்கு சாத்தியமாக போகிறது?

எனினும் அதுதான் இன்று நிஜமாகி வருகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே கல்வியியலாளர்கள் அன்று வகுத்த நான்கு தூண்களில் ஒன்றை இன்று முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. தெரிந்தோ தெரியாலோ தடிமன், காய்ச்சல் போன்று கொரோனாவும் எம்முடன் தொடர்ந்து பயணிக்கப் போகின்றது என்ற செய்தியை அந்த வைரஸ் சொல்லாமல் சொல்கிறது.

சூறாவளி, சுனாமி, பெருவெள்ளம் போன்றவற்றுக்கு எவ்வாறு இந்தோனேசியா, ஜப்பான் போன்ற நாடுகள் தமது வாழ்க்கைக் கோலத்தை மாற்றிக் கொண்டு பயணிக்கிறதோ, அவ்வாறு நாமும் கொரோனாவுக்கேற்ப நமது வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டு பயணிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்தியம்பிக் கொண்டிருக்கிறது கொரோனா.

கொரோனா என்றால் முழுநாட்டையும் முடக்குவது, பரீட்சைகளை நிறுத்துவது, கற்றலையும் போக்குவரத்தையும் முற்றாக நிறுத்துவது என்பதை விட அதற்கான மாற்று உபாயங்களைக் கையாண்டு வாழ முற்பட வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. அதற்காக புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள் சிந்திக்க வேண்டிய காலகட்டம் வந்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை இலங்கையில் இப்போது உருவாகியுள்ளது. எனினும் துணிகரமாக பொதுப் பரீட்சைகளை திட்டமிட்டபடி நடத்த கல்வியமைச்சு தீர்மானம் எடுத்தது. பரீட்சைகள் சுமுகமாக நடைபெறுகின்றன. தற்போதைக்கு பாடசாலை விடுமுறை ஒரு வாரம் முன்கூட்டியே ஆரம்பித்துள்ளது. அவ்வளவுதான்.

கொரோனா தொற்றுள்ள பிரதேசத்தை மட்டும் முடக்குவது, இலத்திரனியல் உபகரண கண்காணிப்பின் துணையுடன் சுகாதார விதிமுறைகளுக்கமைவாக பரீட்சைகளை நடத்துதல், சமூக இடைவெளியைப் பேணி கூட்டங்களை நடத்துதல், உரிய பாதுகாப்பு நடைமுறைகளுடன் போக்குவரத்தை நடத்துதல் போன்ற உபாயங்களைக் கையாளுவது போல் புதிய யுக்திகளை வகுத்து அதன்படி ஒழுகுதல் வேண்டும். 'நிலவுக்கு அஞ்சி பரதேசம் போவதா?' என்றொரு பழமொழி உண்டென்பதைச் சிந்திக்க வேண்டும்.



கொரோனாவை துணிச்சலுடன் எதிர்கொண்டு அதற்கேற்றபடி வாழக் கற்றுக் கொள்ளாமல் போனால் உலக அரங்கிலிருந்து அல்லது வாழ்க்கையிலிருந்து நாம் ஓரங்கட்டப்படுவோம் என்பதுதான் யதார்த்தம் என்பதை நன்குணர்ந்து கொள்ள வேண்டும். எனவே அதற்கேற்ப சகல துறையினரும் இணைந்து புதிய புதிய உபாயங்களை வகுத்து வாழப் பழக வேண்டும்.

கொரோனா தொற்று காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட அமெரிக்கா, பிரேசில், இந்தியா போன்ற நாடுகள் முற்றாக முடங்கிப் போயுள்ளனவா? அந்நாடுகள் புதிய புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு பயணிக்கின்றன அல்லவா?

எனவே நாமும் இன்றைய அவசர இயந்திர வாழ்க்கை முறையியலை விடுத்து கொரோனா அச்சுறுத்தலை எதிர்த்து நிற்கின்ற வாழ்க்கைக் கோலத்திற்கு மாற வேண்டும் என்ற செய்தியை கண்ணுக்குத் தெரியாத கொரோனா கிருமி நமக்கு வந்து சொல்கிறது. அதாவது இயற்கையோடு வாழுங்கள் என்று கூறுகிறது.

கல்வி உளவியலில் அறிஞர் பியாஜேயின் வகிபாகம் இங்கு கவனிக்கத்தக்கது. பிள்ளை சூழலுக்கு எவ்வாறு பொருத்தப்பாடு காண வேண்டும் என்பதை இரு எண்ணக்கருக்கள் மூலம் விளக்குகிறார் அவர். சமகால கொரோனா சூழலுக்கு இது பொருந்துமென நாம் கருதலாம்.

அந்த எண்ணக்கருக்களாவன:

***1.தன்னமைவாக்கம் (accommodation)***

***2.தன்மயமாக்கல் (assimilation)***

இவையிரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.

ஒன்று சூழலை தம்வயப்படுத்துதல் மற்றது சூழலுக்கேற்ப மாறுதல் என்பதாகும். இவையிரண்டும் ஒரு குழந்தை சூழலுக்கு பொருத்தப்பாடு காணும் மார்க்கங்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

தன்மயமாக்கல என்பது குழந்தைகள் தாம் ஆக்கிய திரளமைப்பு மூலம் சூழலை விளங்கிக் கொள்ள முற்படுதலைக் குறிக்கும். சிலவேளை தமது திரளமைப்பிற்கு பொ ருந்தாத அனுபவங்களை சூழலில் எதிர்கொள்ளக் கூடும். அப்போது அக்குழந்தை தமது திரளமைப்பை திருத்திக் கொள்வதன் மூலம் அல்லது புதிய அனுபவங்களை இணைத்துக் கொள்வதன் மூலம் அச்சூழலுக்குப் பொருத்தப்பாடடையும். இதனை தன்னமைவாக்கல் என்பர்.


எனவே இன்றைய கொரோனா சூழலில் புதிய புதிய அனுபவங்களை நாம் எதிர்கொள்ள வேண்டி நேரிடுகிறது. அதற்கேற்ப நாம் வாழப் பழகிக் கொள்ளுதலை தன்னமைவாக்கல் எண்ணக்கரு மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

அதனையே தற்போது இலங்கையர் மட்டுமல்ல உலக மக்களே செய்ய வேண்டும். உலக நாடுகள் கொரோனாவுக்கேற்ப மாறி வருகின்றன. நாட்டையும் சமுகத்தையும் நடைமுறைகளில் மாற்றி வருகின்றனர்.

நான்கு தூண்கள் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம். வாழ்நாள் முழுவதும் கல்வி என்பது நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

தெரிந்து கொள்ளக் கற்றல்(learning to know), செய்யக் கற்றுக் கொள்ளல் (learning to do),ஒன்றாக வாழக் கற்றுக் கொள்ளல் (learning together), இருக்கக் கற்றுக் கொள்ளல் (learning to be) சமூக மாற்றத்திற்கான முக்கிய கருவி கல்வி என்பதை மறுக்க முடியாது.

எனவே அந்தக் கல்விதான் இன்றைய நெருக்கடி மிகுந்த கொரோனா சூழலை எதிர்கொள்ளக் கூடிய வாழ்க்கை முறைமையை வடிவமைக்க வேண்டும். மக்களுக்கு வழிகாட்ட வேண்டும்.



வி.ரி.சகாதேவராஜா... ✍
(காரைதீவு குறூப் நிருபர்)

---

'ஈஸ்டர் தின தாக்குதலுக்கான பொறுப்பை ரணிலும் மைத்திரியுமே ஏற்க வேண்டும்' என்கிறார் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா.

# ஈஸ்டர் தின தாக்குதலுக்கான பொறுப்பை மைத்திரியும் ரணிலுமே ஏற்க வேண்டும்

## சரத் பொன்சேகா எம்.பி பேட்டி

**கேள்வி: இருபதாவது திருத்தத்தை ஏன் வேண்டாம் என்று கூறுகின்றீர்கள்?**

**பதில்:** நாம் தெளிவாக 20 வேண்டாம் என்று கூறுகிறோம். அதற்கு பல காரணங்கள் உள்ளன. 20 மூலம் ஜனாதிபதிக்கு அதிகளவு அதிகாரம் வழங்கப்படுகிறது. சுயாதீன ஆணைக்குழுக்கள் பலவீனமடைந்தால் பொலிஸும் பலவீனமடையும். அனைத்தையும் இயக்குவதற்கு ஜனாதிபதியால் முடியும். ஏனென்றால் அந்த அனைத்து நிறுவனங்களினதும் தலைவர்களை நியமிக்கும் அதிகாரம் 20 மூலம் ஜனாதிபதிக்குக் கிடைக்கும். ஒருபுறம் தணிக்கை ஆணைக்குழு நீக்கப்படுவதால் ஜனாதிபதி, பிரதமரின் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது. நூற்றுக்கு 50 வீதத்துக்கும் அதிகமான பங்குகளை உடைய அரசு நிறுவனங்களான இலங்கை விமான சேவை, டெலிகொம் நிறுவனம் என்பவற்றில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது. இதன் தலைவர்களுக்கு மாதச் சம்பளமாக மில்லியன் அளவு பணம் வழங்கப்படுகின்றது.

கேள்வி: அரசாங்கத்துக்கு எதிர்கால திட்டங்களை மேற்கொள்ள 20ஆவது திருத்தம் தேவையென கூறப்படுகின்றது அல்லவா?

பதில்: நாம் மீண்டும் மீண்டும் கூறுகின்றோம் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல 20 வது திருத்தம் தேவையில்லை, 19வது திருத்தம் போதுமானதாகும்.

**கேள்வி: ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து 10 மாத காலம் ஆகின்றது. நீங்கள் கூறுவது போல் அவர் நாட்டுக்காக எதனையும் செய்யவில்லையா?**

**பதில்:** இல்லை, எனது கருத்தின்படி எதுவுமே செய்யவில்லை. தேர்தலுக்கு முன்னர் பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் அவர்கள் நிறைவேற்றவில்லை. இன்று மக்கள் வாழ முடியாத நிலைமை தோன்றியுள்ளது. பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. ஏற்றுமதி குறைந்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

**கேள்வி: ஜனாதிபதியின் நோக்கம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் தங்கியிருக்காமல், அவற்றை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டுமென்பதாகும். அது தவறானதா?**

**பதில்:** இதனை செயற்படுத்த வேண்டும் என்றால் முதலில் எமது பொருளாதாரத்தை வலுவானதாக்க வேண்டும். அதன் பின்னர் அவற்றை நிறுத்தினால் பரவாயில்லை. வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்படும் உபகரணங்கள், உணவுப் பொருட்களை உடனடியாக நிறுத்த முடியுமா? இங்கு எமது நாட்டில் உற்பத்தி செய்த பின்னர் அவற்றை நிறுத்தினால் பரவாயில்லை. உதாரணமாக மஞ்சளை இங்கே போதுமான அளவு உற்பத்தி செய்த பின்னர் மஞ்சள் இறக்குமதியை தடை செய்யலாம். இன்று மஞ்சள் இல்லாமை சமையல் அறையில் பெரும் பிரச்சினையாக உள்ளது. தற்போது நிறுத்தப்பட்டுள்ள எதுவுமே இங்கு உற்பத்தி செய்யப்படவில்லை. அவற்றை உற்பத்தி செய்ய சில காலம் தேவைப்படும்.

**கேள்வி: பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் 20ஆவது திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப் போவதாக கூறுகின்றார்களே... அவ்வாறு நடக்குமா?**

**பதில்:** அதுதொடர்பாக அவர்களுக்கு பிரச்சினை உள்ளது. ஏனென்றால் எண்ணிக்கை தொடர்பாக. ஆனால் இந்த அரசியலைப் பற்றி உறுதியாக எதனையும் கூற முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்கள் பணத்துக்கு விலை போனதை நாம் அறிந்துள்ளோம். 52 நாள் ஆட்சிக் காலத்தில் பணத்துக்காக அங்குமிங்கும் மாறியவர்களை நாம் கண்டோம். அரசாங்கம் பணத்தைக் கொடுத்து அவர்களை விலைக்கு வாங்குவது நாட்டைப் பற்றி எண்ணி அல்ல, தங்களைப் பற்றி எண்ணி என்பதை மக்கள் நன்கு உணர்வார்கள்.

**கேள்வி: அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 30 பேர் மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்காக ஒத்துழைப்பு வழங்குவார்கள் எனக் கூறியிருக்கினறார் அல்லவா? இது உண்மையா?**

**பதில்:** மஹிந்தானந்த அலுத்கமகே என்பவர் வாயில் வந்ததை சொல்லும் ஒருவராவார். அதனால் நாம் அதைப் பற்றி அக்கறை கொள்ளத் தேவையில்லை. ஒருவர் இருவர் கட்சி மாறலாம். எமது ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்படுபவர்கள். அதனால் அவர்களைப் பற்றி நாம் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளோம்.

**கேள்வி: தற்போதைய அரசாங்கத்தைப் பற்றிய உங்கள் கருத்தென்ன?**

**பதில்:** தற்போதைய அரசாங்கம் அண்மைக் கால சரித்திரத்திலேயே தோல்வியடைந்த அரசு என்று தெளிவாக கூற வேண்டும். இன்று மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. மக்கள் பெரும் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளார்கள். அரசாங்கம் அபிவிருத்தியை நோக்கி பயணிக்கவில்லை. அதனை மக்களும் உணர்ந்துள்ளார்கள். இவர்கள் உலகுக்கே கடனாளியாகி நிற்கின்றார்கள். பல சுற்றுநிருபங்கள் மூலம் சட்டவிரோத செயல்களுக்கு துணை போகின்றார்கள். உதாரணமாக மணல் கொண்டு செல்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கியமை, காடுகளை அழித்து பயிர் செய்வதற்காக இடம் அளித்தமை என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றின் மூலம் நாட்டின் வளங்கள் அழிக்கப்படுகின்றன. நாட்டின் அபிவிருத்தி மேற்கொள்ளப்படுவதில்லை.

**கேள்வி: அரசாங்கம் பிணைமுறி உள்ளிட்ட மோசடிகள் தொடர்பாக விசாரணைகள் நடத்துவதாக கூறினாலும் அவற்றை நடத்தவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள் அல்லவா?**

**பதில்:** ஆம், நான் மாத்திரமல்ல பொதுமக்களும் இந்த குற்றச்சாட்டை சுமத்துகிறார்கள். ஜனாதிபதித் தேர்தல் ,பொதுத் தேர்தல் மேடைகளில் இது பற்றிக் கூறினார்கள். இன்று நாம் அவர்களிடம் கேட்கிறோம் எங்கே கள்வர்கள்? ரிஷாத் பதியுதீன் மீது தொடர்ந்து குற்றம் சாட்டினார்கள். அவரைக் கைது செய்யவில்லை என்று எமது அரசின் மீது குற்றம் சுமத்தினார்கள். அவரின் சகோதரை கைது செய்து அவர் மீது குற்றம் சுமத்தினார்கள். இன்று அவர்களே வேறு கதைகளை கூறுகின்றார்கள். அவர்கள் இருவருக்கும் எதிராக குற்றச்சாட்டுக்கள் இல்லை என்று கூறுகின்றார்கள். அமைச்சர் சமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் இது பற்றிக் கூறியுள்ளார்.

**கேள்வி: முன்னாள் இராணுவ தளபதியாக, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**பதில்:** ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை தடுத்திருக்க முடியும். இதை விட மோசமான பயங்கரவாதிகளுடன் போரிட்டு நாம் நாட்டைக் காப்பாற்றினோம். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் சரியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நடந்திருக்காது. உண்மையில் 2014 ஆம் ஆண்டு மேஜர் ஜெனரல் லால் பெரேரா சஹ்ரான் பற்றிய விபரங்களை அறிந்து எச்சரித்துள்ளார்.

மற்றைய விடயம்இந்தத் தாக்குதல் தொடர்பான இடம், நேரம் அனைத்துமே ஏற்கனவே தெரிந்துள்ளன. அனைத்தையும் அறிந்தும் இவர்கள் எதுவும் செய்யவில்லை. சம்பவம் நடக்கும் என்றும் தெரிந்தும் அது பற்றி நடவடிக்கை எடுக்காததற்கு அவர்களே பொறுப்புக் கூற வேண்டும். அதேபோல் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையும் வழங்கப்பட வேண்டும்.

**கேள்வி: இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெறும் போது நீங்கள் அரசாங்கத்தில் ஒரு அமைச்சராக இருந்தீர்கள். ஆயினும் இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையே? நீங்கள் இது பற்றி அறிந்து இருந்தீர்களா?**

**பதில்:** என்னால் செயல்பட முடியவில்லை.எனக்கு அளிக்கப்பட்டிருந்த அமைச்சின்படி எனக்கு தகவல்கள் முன்னதாகக் கிடைக்கவில்லை. ஏனென்றால் இது பற்றி அறிந்தவர்கள் ஒரு வார்த்தை கூட வெளியே சொல்லவில்லை. விசேடமாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு நடவடிக்கைகள், மற்றும் சட்டம், சமாதானம் தொடர்பான விடயங்கள் எதற்கும் என்னை இணைத்துக் கொள்ளவில்லை. அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பொழுது நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கவில்லை. அவர் என்னிடம் தூதுவர் பதவி அல்லது வேறு ஏதேனும் பதவி தேவையா எனக் கேட்டார். நான் எனக்கு எந்த ஒரு பதவியும் வேண்டாம் எனக் கூறி பாதுகாப்பு ஆலோசகர் பதவியைக் கேட்டேன். அவர் அதனை செய்யவில்லை. நான் இரண்டு முறை அவருக்கு ஞாபகப்படுத்தினேன். ஆனால் அவர் அதனை தவிர்த்தார். அந்த நியமனத்தை எனக்கு வழங்கியிருந்தால் நான் இந்தத் தாக்குலை நடக்க விட்டிருக்க மாட்டேன்.

**கேள்வி: ஐக்கிய மக்கள் சக்தி ஐக்கியம் இழந்து காணப்படுவதாக கூறப்படுகின்றதே... அது உண்மையா?**

**பதில்:** இல்லை முற்றிலும் பொய். எமது அணியில் எவ்வித பிரச்சினையும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியாக நாம் வலுவுடன் செயல்படுகின்றோம்.2023_2024 ம் வருடமளவில் நாம் புதிய ஆட்சி ஒன்றை அமைப்போம். அது பற்றி எவ்வித பிரச்சினையும் இல்லை.

**கேள்வி: ஆனால் உங்களுடன் உள்ள பல கட்சிகள் கூட்டமைப்பு பற்றி பேசுகின்றனவே...**

**பதில்:** தேசியக் கட்சிகள் எம்முடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டன. அவர்கள் எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் முன்னணியாக போட்டியிடுவார்கள்.

**கேள்வி: ஐக்கிய தேசியக் கட்சி புதிய பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. அக்கட்சியுடன் இணைய ஐக்கிய மக்கள் சக்தி விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. நீங்கள் அதனை ஏற்றுக் கொள்கிறீர்களா?**

**பதில்:** அந்தக் கட்சி தேவை இல்லை என்பதால்தான் நாம் ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றோம். ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட 15க்கும் அதிகமான அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தோல்வியை தழுவினார்கள். அவர்களிடையேதான் மோசடியாளர்களும் கள்வர்களும் உள்ளார்கள். அதனலேயே மக்கள் அவர்களை நிராகரித்துள்ளார்கள்.



## 'மக்களுக்கு ஐ.தே.க தேவையில்லை. அக்கட்சி மக்களால் நிராகரிக்கப்பட்டு விட்டது'

பக்தி தர்மபிரிய மெண்டிஸ்... ✍
தமிழில்: வீ.ஆர்.வயலட்



டவர் மண்டப அரங்க அறக் கட்டளையின் 296 ஆவது நிர்வாக சபை குழுக் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில் டவர் மண்டப பணிப்பாளர் சபை உறுப்பினர்களுடன் அதிகாரிகள் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படம்..

# கல்வி நிலையங்களை திறந்தால் பொலிஸ் மூலம் நடவடிக்கை

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் தனியார் கல்வி நிலையங்களை உத்தரவை மீறி திறந்தால் பொலிசார் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் சமன்பந்துல சேன தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் தனியார் கல்வி நிலையங்கள் சில மீள திறக்கப்பட்டமை குறித்து கேட்ட போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

கொவிட்19 அச்சுறுத்தல் காரணமாக வவுனியா மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. அரச உத்தரவை மீறி தனியார் கல்வி நிலையங்கள் திறக்கப்பட்டால் பொலிசார் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும். அனுமதியின்றி திறக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். எனவே, கொவிட் 19 இன் தாக்கத்தை கட்டுப்படுத்த அனைவரது ஒத்துழைப்பும் அவசியம். இதேவேளை, வவுனியாவின் சில பகுதிகளில் உத்தரவை மீறி தற்போதும் குழு வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கல்விக் கட்டமைப்பு...

வழிகாட்டலின் கீழ், எதிர்காலத்தில் கல்விக் கட்டமைப்பில் முன்னெடுக்கப்படவுள்ள மறுசீரமைப்புகளுக்கு கிறிஸ்தவ தேவாலயங்கள் உட்பட அனைத்து கிறிஸ்தவ மக்களினதும் முழுமையான ஆதரவை பெற்றுத் தருவதாக இந்தச் சந்திப்பில் பேராயர் கார்தினால் மெல்கம் ரஞ்ஜித் உறுதியளித்தார். மதசார் நிறுவனங்கள் மற்றும் கல்விக் கட்டமைப்புக் கிடையில் தொடர்புகள் காணப்படுவது அத்தியவசியமாகுமென்றும் கல்வி அமைச்சரிடம் இச்சந்திப்பில் பேராயர் சுட்டிக்காட்டினார்.

## கட்டுநாயக்கா பொலிஸ்...

இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரால் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இன்று அதிகாலை 5.00 மணிமுதல் மறு அறிவித்தல் வரை கட்டுநாயக்க பொலிஸ் அதிகாரப் பிரிவிற்குட்ட பகுதிகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி கூறியுள்ளார். தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியில் உரிய சட்ட நடவடிக்கைகளை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன், கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலையத்தில் பணிப்புரியும் ஊழியர்கள் தமது அடையாள அட்டையை ஊரடங்கு காலத்தில் பயணிக்கும் அனுமதிப்பத்திரமாக பயன்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதிக்கு ஸ்ரீதரன்...

நடைபெற்றுவரும் சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை குறித்து பல்வேறு தரப்பிலிருந்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், நீதியான விசாரணைக்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், இது தொடர்பாக ஸ்ரீதரன் எம்.பி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

கடிதத்தில், "முல்லைத்தீவு, முறிப்புப் பகுதியில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற சண்முகம் தவசீலன், கணபதிப்பிள்ளை குமணன் ஆகிய இரு ஊடகவியலாளர்கள் மீது கடந்த 12ஆம் திகதி, திங்கட்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவர்கள் மீது மரக் கடத்தல்காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ள சம்பவம் நாட்டின் ஊடகவியலாளர்கள் பாதுகாப்பையும், ஊடக சுதந்திரத்தையும் கேள்விக்கு உட்படுத்துகின்ற செயலாகும். எனவே, தாங்கள் இந்த நாட்டின் முதல் மனிதன் என்ற வகையில் ஊடக சுதந்திரத்தையும், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் பொருட்டு இனிவரும் காலங்களிலேனும் ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இந்தக் கடிதம் வெகுசன ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவிற்கும் பிரதியிடப்பட்டுள்ளது.

## விடுதிகளில் தங்கியுள்ளோருக்கு...

நிலையங்களில் இருந்தவர்கள் எனவும் இராணுவத் தளபதி கூறியுள்ளார். மினுவாங்கொடை பிரென்டிக்ஸ் கொத்தணியில் நேற்று புதிதாக 194 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அப்துல் சத்தாருக்கு...

அப்துல் சத்தார் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான நியமனக் கடிதத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் அலரி மாளிகையில் வைத்து அப்துல் சத்தாரிடம் கையளித்தார். பிரதமர் தலைமையிலான அரசியல் பணிகளில் நீண்ட காலமாக நெருங்கி செயற்பட்டுவரும் இவர், அரச ஹஜ் குழுவின் அங்கத்தவராகவும் ஏற்கனவே கடமையாற்றி வருகிறார். இவர் குருநாகல் ஹிஸ்புல்லாஹ் மத்திய கல்லூரி மற்றும் தலைமன்னார் வி.ரி.எம்.எஸ் வித்தியாலயம் என்பவற்றின் பழைய மாணவருமாவார்.

## பிரதமரின் ஊடக ... 03ஆம் பக்கத் தொடர்...

குறிப்பிடத்தக்கது. அத்துடன் அரச ஊடக செயலாளர்கள் சங்கத்தின் தலைவராக 2006 முதல் 2014 ஆம் ஆண்டு வரைப் பதவி வகித்த இவர், ஸ்ரீலங்கா மக்கள் முன்னணி ஊடக கேந்திரத்தின் ஊட ஆலோசகராக 2016 முதல் பணியாற்றியுள்ளார். பேராதனை பல்கலைக்கழகத்தின் கலை (கௌரவ) பட்டதாரியான இவர், அதே பல்கலைக்கழகத்தில் சமூகவியலுக்கான முதுமானிப் பட்டம் பெற்றவராவார். பேராதனை பல்கலைக்கழகத்தில் மனித உரிமைக்கான பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மஹிந்த... 03ஆம் பக்கத் தொடர்...

அம்பாறை,மட்டக்களப்பு மாவட்டங்களின் இணைப்பாளராக நேற்றுமுதல் அமுலுக்கு வரும் வகையில் கருணா அம்மான், நியமிக்கப்பட்டுள்ளார்.

## தரம் 05 புலமைப்பரிசில் ... 03ஆம் பக்கத் தொடர்...

இதன் பிரகாரம் 1994ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வரும் இவ் வேலைத்திட்டத்திற்கமைய, தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய உறுப்பினர்களின்9 ஆயிரம் பேருக்கு, தலா 15 ஆயிரம் ரூபாய் வீதம் புலமைப்பரிசிலாக இந்நிதி வழங்கப்பட்டு வருகிறது.

மக்கள் வங்கியினால் செயற்படுத்தப்படும் இவ்வேலைத் திட்டம் சிசு உதான சேமிப்பு கணக்கில் வைப்பிலிடப்படும். புலமைப்பரிசில் பெறும் அனைத்து பிள்ளைகளுக்கும் கணக்கு திறக்கப்பட்டு, மக்கள் வங்கியினால் மலலசேகர சிங்கள/ஆங்சில அகராதியும் பரிசளிக்கப்படுகிறது. சிசு உதான கணக்கிற்கு வழங்கப்படும் சாதாரண வட்டி விகிதத்தை விட அதிக வீதம் இந்த கணக்குகளுக்கு பெற்றுக் கொடுக்கப்படும்.

இச்சந்தர்ப்பத்தில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தலைவர் சிறியான் டி சில்வா விஜயரத்ன மற்றும் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ உள்ளிட்ட ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் மக்கள் வங்கியின் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பிரதமரின் ... 03ஆம் பக்கத் தொடர்...

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் முன்னாள் பிரத்தியேக செயலாளராகவும் பணியாற்றியிருந்தார். கீதநாத் காசிலிங்கம் வடக்கு கிழக்கு சார்ந்த அபிவிருத்தி விடயத்திலும் பிரதமர் சார்பில் நேரடியாக வேலைத் திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாலைதீவிலிருந்து ... 03ஆம் பக்கத் தொடர்...

பின்னர், இந் நபர் முறையாக தனிமைப்படுத்தப்பட்டார்.

இவருக்கு பி.சி.ஆர் பரிசோதனையும் நடத்தப்பட்டு கொரோனா தொற்று இல்லை என அப்போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

# நாவிதன்வெளி பிரதான வீதிகளில் வாகனங்களுக்கு தொற்றுநீக்கம்

பெரியநீலாவணை விசேட நிருபர்

நாட்டில் கொரோனா தொற்றுநோய் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ள நிலையில் இதனை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தை அரசாங்கம், இராணுவத்தினர் மற்றும் சிவில் சமூக அமைப்புகள், முன்னெடுத்து வருகின்றன. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு தினங்களாக நாவிதன்வெளி பிரதேச சபையின் ஏற்பாட்டில் கல்முனை – நாவிதன்வெளி பிரதான வீதி ஊடாக பயணிக்கின்ற வாகனங்கள் அனைத்தும் தொற்று நீக்கி விசிறப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. இதேவேளை சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களில் PCR பரிசோதனைகளும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மீனவருக்கு...

முல்லைத்தீவு வரை புத்தளம் வழியாக மன்னார் மற்றும் காங்கேசன் துறையிலும் வீசுமென வானிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## கட்சித் தலைவர்களுக்கு...

பி.ப. 1.30 மணிக்கு கட்சித் தலைவர் கூட்டம் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

20ஆவது திருத்தச் சட்டத்தில் மேற்கொள்ளப் படவுள்ள திருத்தங்கள் தொடர்பில், இதன்போது விரிவாக கலந்துரையாடல்கள் நடத்தப்படுமென அரசாங்கத்தின் தகவலறியும் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதனை எதிர்வரும் 20ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக சபாநாயகர் ஏற்கனவே அறிவித்துள்ளார். இந்தப்பின்புலத்தில் கட்சித் தலைவர் கூட்டத்தில், கலந்துரையாடப்படவுள்ள திருத்தங்களையும் அன்றைய தினம் சபாநாயகர் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கவுள்ளதாகவும் அறிய முடிகிறது.

இருபதாவது திருத்தச் சட்டம் தொடர்பிலான உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை, ஐவரடங்கிய நீதியரசர் குழாம் கடந்த சனிக்கிழமை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கும் அறிவித்திருந்தது.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தை சவாலுக்குட்படுத்தி 39 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யட்டது. உயர்நீதிமன்ற நீதியரசர் ஜயந்த ஜயவிக்கிரம தலைமையிலான ஐவரடங்கிய நீதியரசர் குழாம் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு உட்படுத்தியிருந்த நிலையிலேயே கடந்த 10ஆம் திகதி 20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பிலான உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

## ரிஷாட்டை கைது செய்ய...

உள்ளதாகவும் ரிஷாட்டின் மெய்ப்பாதுகாவலர் மற்றும் சாரதிகள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார். பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடக மாநாட்டின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு மேலும் கூறுகையில், வெள்ளவத்தை பகுதியில் இரு வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து இரு துப்பாக்கிகள், நான்கு மெகசின்கள் மற்றும் 48 ரவைகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. இவை தொடர்பாக தனியான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 200 பஸ்களில் புத்தளத்திலிருந்து மன்னாருக்கு வாக்காளர்களை அழைத்துச் செல்ல புனர்வாழ்வு அமைச்சினூடாக பணம் பெறப்பட்டுள்ளது. இது தொடர்பில் சி.ஐ.டி விசாரணை முன்னெடுத்தது. இந்த விசாரணைக்கமைய சட்ட மாஅதிபர் மூன்று சந்தேக நபர்களை கைது செய்ய உத்தரவிட்டார். முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், மொஹமட் யாசீன் மற்றும் கணக்காளர் அலகரத்தினம் மனோகரன் ஆகியோரை கைது செய்ய விசாரணை முன்னெடுக்கப்பட்டது. இதில் கணக்காளர் அலகரத்தினம் நேற்று முன்தினம் கிருளப்பனையில் வைத்து கைதானார். மற்றைய இரு சந்தேக நபர்களையும் கைது செய்ய பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ரிஷாட் பதியுதீனுக்கு பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட கான்ஸ்டபிள் வெள்ளவத்தையில் வைத்து கைதானார். சந்தேகநபரை சட்டத்தில் இருந்து தப்பவைக்க உதவியதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தவிர ரிஷாட் பதியுதீன் பயன்படுத்திய இரு வாகனங்களும் வெள்ளவத்தையில் வைத்து கைப்பற்றப்பட்டன. 56 மற்றும் 45 வயதான இரு சாரதிகளும் கைதாகியுள்ளனர். இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பஸ்களில் வாக்காளர்களை கொண்டுவர அமைச்சு நிதியை பயன்படுத்திய விடயம் தொடர்பிலும் ஆயுதங்கள் மீட்கப்பட்டமை தொடர்பிலும் தனித்தனி விசாரணைகள் நடைபெறுகின்றன. ஓரிரு தினங்களில் சந்தேக நபர்களை கைது செய்ய முடியுமென எதிர்பார்கிறோம் என்றார்.

இதேவேளை கைது செய்யப்பட்ட கணக்காளரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## அரசுக்கு 'கொவிட் 20'...

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மனோ எம்பி இவ்வாறு கூறியுள்ளார்.

அரசிற்கு உள்ளே இப்போது 20 திருத்தம் தொடர்பில் பெரும் கலகம் நடைபெறுகிறது. எதிரணியில் நாம் இதை எதிர்ப்பதை போன்று அரசுக்குள்ளிருந்து பலர் இதற்கு எதிராக குரல் எழுப்ப தொடங்கி விட்டனர்.

அமைச்சர்கள் விதுர விக்கிரமநாயக்க, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச ஆகியோர் அதிருப்தி அடைந்துள்ளனர். ஜனாதிபதிக்கு நெருக்கமான எம்பி கேவிந்து குமாரதுங்கவும் இதை எதிர்க்கிறார்.

விஜயதாச ராஜபக்ஷ எம்.பி இப்போது இரண்டாவது முறை 20 திருத்தம் தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார். இதற்கு பதில் இல்லை. அரசுக்கு ஆதரவு அளித்த பல தேரர்கள், சமூக தலைவர்கள் எதிர்க்குரல் எழுப்புகின்றனர். இதுதான் இன்று அரசை பிடித்துள்ள கோவிட் 20 நோயாகும். அரசை பீடித்துள்ள இந்த "கொவிட் 20" நோய்க்கு மருந்து தேடக்கூடாது. ஏனெனில் கொவிட்19 ஐப் போல் இந்த நோய்க்கும் மருந்தில்லை என்றார்.

## விசாரணைகளை துரிதப்படுத்த...

ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார். சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்கமைய 07 விசேட அம்சங்கள் தொடர்பில், இரு குழுக்களும் விசாரணை நடத்துவதோடு உள்ளக விசாரணையொன்றும் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று (14) நடைபெற்ற விசேட ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விடயங்கள், சட்டவிரோத பணப்பரிமாற்றம், பயங்கரவாதிகளுக்கு பணம் வழங்குதல் உட்பட 07 அம்சங்களின் அடிப்படையில், விசாரணைகளை முன்னெடுக்குமாறு சட்ட மாஅதிபரினால் பதில் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவிக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் 14 ஆம் திகதி கைதான ரியாஜ் ஐந்தரை மாதங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார். இது தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஜனாதிபதியினதும் பாதுகாப்பு செயலாளரினதும் கவனத்திற்கும் இது, கொண்டுவரப்பட்டது. இந்நிலையில், சட்ட மாஅதிபரின் ஆலோசனைப்படி சி.ஐ.டி பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் கண்காணிப்பின் கீழ், இரு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், ஒரு பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் 60 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. 04 அம்சங்களின் அடிப்படையில் ஒரு குழுவும் 03 அம்சங்களின் அடிப்படையில் மற்றொரு குழுவும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

இது தொடர்பில் சட்ட மாஅதிபர்,பாதுகாப்பு செயலாளர் ஆகியோரின் பங்குபற்றலுடன் சந்திப்பொன்று நடந்தது.

விசாரணைகளை துரிதப்படுத்துமாறு இதன்போது பணிக்கப்பட்டது. விசாரணை முடிவுகளுக்கமைய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.புதிய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதோடு, புதிய பரிமாணத்துடன் விசாரணைகள் நடைபெறுவதாகும் அவர் குறிப்பிட்டார். (பா)

## கப்பலின் கெப்டனுக்கு...

விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்ற நீதிபதி நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் நட்ட ஈட்டை வழங்குமாறு பிரதிவாதிக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என சட்ட மாஅதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

கடந்த செப்டம்பர் மூன்றாம் திகதி இலங்கைக்கு அண்மித்த கடற்பரப்பில் நியூ டயமன் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டது.

இத் தீ விபத்தை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதமை மற்றும் அதன்மூலம் ஏற்பட்ட சூழல் மாசு ஆகியவற்றை கவனத்தில் கொண்டே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.இந்த மாலுமிக்கு

எதிராக,சட்ட மா அதிபர் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு மீதான விசாரணை கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது, பிரதிவாதி தம் குற்றத்தை ஏற்றுக் கொண்டதால், அவருக்கு இத்தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தார். 2008ஆம் ஆண்டு சமுத்திரவியல் மாசு தடுப்பு சட்ட மூலம் அறிமுகப்படுத்தப் பட்டதன் பின்னர், வெளிநாட்டுக் கப்பலின் மாலுமி ஒருவருக்கு எதிராக மனு தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்கு இதுவென்றும் அவர் சுட்டிக் காட்டினார்.(ஸ)

## நீதிமன்றம் நேற்று...

தாக்கல் செய்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த உத்தரவுகளை மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் ஏ.எச்.எம்.டி நவாஸ் மற்றும் நீதியரசர் சோபிதா ராஜகருணா ஆகியோர் பிறப்பித்தனர். கழிவுகள் அடங்கிய இக்கொள்கலன்கள் பிரிட்டனிலிருந்து 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன. 130 கொள்கலன்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலும், 133 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதியிலும் வைக்கப்பட்டிருந்தன.

இவற்றில் 21 கொள்கலன்கள் இதுவரை பிரிட்டனுக்கு திருப்பி அனுப்பட்டன. பிரிட்டனிலிருந்து 263 கழிவுகள் அடங்கிய கொள்கலன்களை இறக்குமதி செய்ததால் ஏற்பட்ட பாதிப்புக்கு இலங்கை அரசாங்கம் 1.69 பில்லியன் ரூபாய் இழப்பீடு கோரியது. இது தொடர்பில்,Basel சாசனத்தின் கீழ் இலங்கை வழக்கு தாக்கல் செய்துள்ளதென சுற்றாடல் அமைச்சு ஏற்கனவே அறிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்களைச் சீண்டி...

முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் ஆரம்ப வரலாற்றிலிருந்து இற்றை வரைக்கும் முஸ்லிம்கள் தேசப்பற்று உள்ளவர்களாகவே இருந்து வருகின்றனர். ஆளும் கட்சியோ அல்லது எதிர்க்கட்சியோ ஏதோ ஒரு பெரும்பான்மைக் கட்சிக்குத்தான் தங்களது ஆதரவையும் முஸ்லிம்கள் வழங்கி வருகின்றனர்.

ஆனால், தற்போதைய அரசு சிறுபான்மை மக்களுக்குக் குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு போக்கையே கடைப்பிடித்து வருகின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்கள் தங்களுக்குப் பாரியதொரு ஆதரவைத் தரவில்லை என்ற காரணத்தால், இப்போது அதற்கான பழிவாங்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனைக் கைதுசெய்வதற்கு சட்ட மாஅதிபர் ஊடாகப் பிறப்பிக்கப்பட்ட ஆணை முஸ்லிம்களைப் சீண்டிப் பார்க்கும் ஒரு செயற்பாடாகவே நோக்க வேண்டியுள்ளது.

இது ஜனநாயக நாடு. பழிவாங்கல் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# சுகாதார விதிமுறைகளை கடுமையாக பின்பற்றவும்

(மாவத்தகம நிருபர்)

கொரோனா தொற்றின் காரணமாக சுகாதார விதிமுறைகளைப் பேணி நடத்தல் அவசிமாகும். இது தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை கண்டிப்பான முறையில் முன்னெடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில் அறிவுறுத்தல் விடுத்தார்.

கொவிட் 19 தொற்றுத் தொடர்பில் இக் காலப்பகுதியில் ஊவா மாகாணத்தின் கல்வி மற்றும் பொது நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் மாகாண கல்வி செயலணியின் விசேட கலந்துரையாடலொன்று ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலின் போது ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.


அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், பொது மக்கள் பிரயாணத்தின் போது



பொது இடங்களிலும் கட்டாயமாக முகக்கவசம் அணிதல் வேண்டும், சமூக இடைவெளியை பேணுதல், கை கழுவுதல் உள்ளிட்ட சுகாதார விதிமுறைகளைப் பேணி நடப்பது அவசியமாகும். இது தொடர்பில் சுகாதாரத் துறையினரின் வழிகாட்டலுக்கமைய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவும், அவை சரியான முறையில் முன்னெடுக்கப்படுகிறதா? என்பது தொடர்பில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளைப் பாடசாலை கட்டமைப்பில் கொவிட் 19 பரவாமல் இருப்பதற்கு முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கல்வி பணிப்பாளர்களுக்குத் தெளிவு படுத்தப்பட்டதுடன், க.பொ.த உயர்த்தர பரீட்சைகள் நடைபெறும் இக்காலப்பகுதியில் பரீட்சை நிலையங்கள் மற்றும் மாணவர்களின் போக்குவரத்தில் சுகாதார நடைமுறைகளை முன்னெடுப்பது தொடர்பில் விசேட வைத்திய அதிகாரிகள் மூலம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெளிவூட்டப்பட்டது.

அந்த வகையில் ஊவா மாகாணத்தில் கல்வி நடவடிக்கை சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.



சபிரிகமக் (பூரணம் கொள்ளும் ஊர்) வேலைத்திட்டத்திற்கமைய அக்குறணைபிரதேச சபை தலைவர் ஐ.ஏப் இஸ்திஹார் தலைமையில் ரூபா. 5 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் அக்குறணைபென்டனவத்த, நாடுமலை, பங்கொல்லமடவீதிகளின் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருவதை படத்தில் காணலாம்.

(டம் உக்குவளை நிருபர்)

# கொவிட் 19 அச்சம்: 50 வயது நபர் வைத்தியசாலையில் அனுமதி

தெல்தோட்டை தினகரன் நிருபர்

இரட்டை பாதை நகரில் பொதுமக்களால் கொரோனா நோயாளர் என சந்தேகிக்கப்பட்ட ஒருவர் பிரதேசவாசிகள். பொது சுகாதார அதிகாரி மற்றும் பொலிஸாரின் உதவியுடன் 1990 ஆம்புலன்ஸ் சேவை மூலம் கம்பளை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று புதன் கிழமை காலை ஏழு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இருமலுடன் தடுமாறிக் கொன்டு இருந்த ஐம்பது வயது மதிக்கத்தக்க நபரொருவரே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர் பஸ்சில் பயணித்து கொண்டிருக்கும் போது சந்தேகத்துக்கிடமான நடத்தை காரணமாக பஸ்சில் இருந்து இறக்கிவிடப்பட்டுள்ளார். மேலும் இவர் நுவரெலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அங்கிருந்து தப்பி வந்துள்ளார் என தெரியவருகின்றது. அதன் பிறகு கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டும் அங்கிருந்தும் தப்பி வந்தவர் எனவும் தெரியவருகின்றது. இவரை சுகாதார அதிகாரிகள் கம்பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.



இலங்கைக்கான ஈரானிய தூதுவர் ஹஷெம் அஷ்ஜஸதெஹ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை நேற்று கட்சியின் தலைமையகமான "தாருஸ்ஸலாமில்" சந்தித்துக் கலந்துரையாடினார். இதில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிமும் அருகில் இருப்பதைபடத்தில் காண்க.



நுவரெலியா அங்குராங்கெத்த கபரக்கலை தோட்ட கீழ் பிரிவில் கடந்த திங்கட்கிழமை சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணனின் பனிப்புரைக்கமைய முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர். இராஜாராம் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் மத்தியக்குழு உறுப்பினர் எஸ். எஸ்.ஜெயக்குமார் உட்பட பலர் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும் வழங்கினர்.


## தபால் திணைக்களம்

2021ஆம் வருடத்திற்காக,
சேவை வழங்கும் நிறுவனமொன்றினால்,
தபால் தலைமை அலுவலக வளவை சுத்திகரிக்கும் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கான

## விலைமனு அழைப்பு (IFB)

சேவை வழங்கும் நிறுவனமொன்றினால், 2021.01.01 முதல் 2021.12.31 வரையான காலமொன்றிற்கு கொழும்பு 01000, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, இல. 310, தபால் தலைமை அலுவலக வளவை சுத்திகரிக்கும் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள், தபால் திணைக்களம் சார்பாக, திணைக்களப் பெறுகைக்குழுத்தலைவர் தற்போது அழைக்கின்றார்.

தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் ஊடாக விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.

ஆர்வங்காட்டும் தகுதியுள்ள விலைமனுதாரர்களுக்கு, வேலை நாட்களில், 09.00 மற்றும் 15.00 மணி இடையே 011-4927249/ 011-5746194 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம், கணக்காளரிடமிருந்து (பெறுகை) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரரினால் அல்லது அவரின் பிரதிநிதியால் கீழேயுள்ள முகவரிக்கு ஒரு எழுத்துருவிலான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு அஞ்சல் அதிபதி நாயகத்திற்கு ரூ. 1,000.00 மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதன் மூலம், 2020 நவம்பர் 06ஆம் திகதி 15.00 மணி வரை, ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலான ஒரு முழுமைப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

விலைமனுக்கள், 2020 நவம்பர் 09ஆம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் விலைமனுத் திறப்பில் கலந்து கொள்ள முன்வரும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் மூடப்படும் நேரத்திற்குப் பின்னர் கீழேயுள்ள முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

அனைத்து விலைமனுக்களும் 2020 டிசம்பர் 31ஆம் திகதி வரை செல்லுபடியாகும், ரூ. 60,000.00 உடைய, இலங்கை மத்திய வங்கியின் கீழாக பதிவு செய்யப்பட்ட இலங்கையில் தொழிற்படும் ஒரு வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்றைத் கொண்டிருத்தல் வேண்டும்.

பெறுகை இல. Post/pmd/04/16/2020

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**தபால் திணைக்களம்,**
**இல. 310, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

**2020.10.15**



13.10.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை **664,513**
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை **27,534,160.00**
ரூ. 2,000,000.00 பரிசுகள் **01** ரூ. 1,000,000.00 பரிசுகள் **02** ரூ. 100,000.00 பரிசுகள் **27**

www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம் 711
திகதி 2020/10/13
உத்தியோகபூர்வ முடிவுகள்

நீரோகா லக்ன ஜய

லக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 10 33 62 65

| | பரிசு கட்டமைப்பு | பரிசு தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 1,000,000/- | - |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 10,000/- | 3 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 2,000/- | 67 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 200/- | 286 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100/- | 3,307 |
| 6ம் பரிசு | 1 இலக்கத்துடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 60/- | 4,460 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20/- | 48,527 |
| 8ம் பரிசு | லக்கினம் மட்டும் பொருந்துமாயின் | ரூ. 20/- | 17,980 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசு தொகை ரூ. 2,149,640.00
அடுத்த சுப்பர் பரிசு ரூ. 18,384,902.50

ரூ. 5 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசு அரசாங்க வரி சட்ட திட்டங்களுக்கு அமைவானதாகும். பரிசுப்பணம் பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை அவசியமாகும்

வெல்லப்பட்ட லொத்தர் சீட்டு, சீட்டிழுப்பு நடைபெற்ற தினத்திலிருந்து 6 மாத காலம் மாத்திரமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
இல 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
அவசர அழைப்பு: 011 2324324, 011 4607000
இணையதளம்: www.nlb.lk

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2569 சீட்டிழுப்பு திகதி 13.10.2020
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 13 21 44 54

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 07 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 177 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 384 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 9679 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6287 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 157811 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 29157 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 203,503
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,396,740.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,192,636.40

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம் : 4274 உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத

திகதி: 13-10-2020

வெற்றி எழுத்து: O வெற்றி இலக்கங்கள்: 1 8 5 8 2 1

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 1 8 5 8 2 1 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 8 5 8 2 1 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 5 8 2 1 | ரூபா. 10,000/- | 112 |
| 4ஆம் பரிசு | 8 2 1 | ரூபா. 1,000/- | 1,096 |
| 5ஆம் பரிசு | 2 1 | ரூபா. 100/- | 11,007 |
| 6ஆம் பரிசு | 1 | ரூபா. 20/- | 109,162 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 1 8 5 8 2 | ரூபா. 10,000/- | 12 |
| 8ஆம் பரிசு | 1 8 5 8 | ரூபா. 1,000/- | 114 |
| 9ஆம் பரிசு | 1 8 5 | ரூபா. 100/- | 1,097 |
| 10ஆம் பரிசு | 1 8 | ரூபா. 50/- | 10,928 |
| 11ஆம் பரிசு | O | ரூபா. 20/- | 43,509 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 10,460,220.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,261,289.00

வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை www.nlb.lk
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 2020/10/13
சீட்டிழுப்பு இலக்கம் - 328

ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 13 28 29 74

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக் கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 61 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 164 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 3,610 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2,511 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 60,640 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 11,418 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,599,820.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 78,408

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை 118,872,411.04

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 641
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 13/10/2020

ஆங்கில எழுத்து: B சுப்பர் இலக்கம்: 16 வெற்றி இலக்கங்கள்: 15 45 57 59

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 05 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 119 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 242 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 6,199 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4,035 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 101,703 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 18,619 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ .53,349,741.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ .12,620,181.20
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ .20,081,302.80
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,927,740.00

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

# மக்கள் வங்கி
## மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

மக்கள் வங்கியின் கீழ் குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 2019.03.31 திகதி வரை ஒரு வருட காலத்திற்கு அடகு வைக்கப்பட்டு கீழ் குறித்த திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள் கீழ் குறிப்பிட்ட திகதிகளில் கீழ் குறிப்பிட்ட இடங்களில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. ஏல விற்பனை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

| கிளை | | 2019.03.31 அடகு வைக்கப்பட்ட கீழ் குறித்த திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் | ஏலமிடும் திகதி மற்றும் இடம் |
|---|---|---|---|
| ஹட்டன்<br>கினிகத்தேன<br>மஸ்கெலியா<br>பொகவந்தலாவ<br>தலவாக்கலை<br>பூண்டுலோயா | திக்கோயா<br>கொட்டகலை<br>வட்டவலை<br>அப்கொட்<br>அக்கரபத்தன<br>தவலந்தென்ன<br>அபுகஸ்தலாவ | 2020.10.25 | 2020.10.26<br>ஹட்டன் கிளை |
| ஹங்குராங்கெத்த<br>ரிகில்லகஸ்கட<br>நில்தண்டாயின்ன | பதியபெலல்ல<br>ஹேவாஹட்ட<br>அதிகாரிகம<br>வலப்பனை | 2020.10.26 | 2020.10.27<br>ஹங்குராங்கெத்த கிளை |
| இராகலை<br>உடபுஸ்ஸல்லாவ<br>நுவரெலியா | இராகலை<br>கந்தபொல<br>நானுஓயா | 2020.10.27 | 2020.10.28<br>இராகலை கிளை |

ஏலவிற்பனையில் மாற்றம் செய்தல் பிற்போடுதல், இரத்து செய்தல் போன்றவைகளுக்கு வங்கி சட்டபூர்வ அதிகாரத்தை கொண்டுள்ளது.

**பிரதேச முகாமையாளர்**
**பிரதேச பிரதான காரியாலயம்**
**மக்கள் வங்கி நுவரெலியா**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

---

### குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

## விலைகூறல்களுக்கான அழைப்பு

### குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்காக பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்

**ஒப்பந்த இல.: DIE/PRO/08/2020/27**

1. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கீழ்க் காட்டப்பட்ட அலுவலகங்களுக்காக பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால், தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்தும், பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்தும் முத்திரை பொறிக்கப்பட்ட விலைகூறல்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

2.

| | |
|---|---|
| 1. | பிரதான அலுவலகம், “சுகுறுபாயா”, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை. |
| 2. | திருகோணமலை துறைமுகத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 3. | கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 4. | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 5. | மத்தளை சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 6. | கண்டி பிராந்திய அலுவலகம். |
| 7. | வவுனியா பிராந்திய அலுவலகம். |
| 8. | குருணாகல் பிராந்திய அலுவலகம். |
| 9. | மாத்தறை பிராந்திய அலுவலகம். |
| 10. | மிரிஹான தடுப்பு முகாம். |
| 11. | யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

4. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு, இது தொடர்பான மேலதிக விபரங்களை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, “சுகுறுபாயா”, 5 ஆம் மாடி, “B” பகுதியில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன், விலைகூறல் ஆவணங்களை அதே முகவரியில் வைத்து வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை பரீட்சிக்கலாம்.

   தொடர்புகளுக்கு: தொலைபேசி இல.: 011 – 5329530/ 011 – 5329535
   தொலைநகல்: 011 - 2885358

5. மீளளிக்கப்படாத ரூபா ஐயாயிரத்து ஐந்நூறு (ரூ. 5,500/-) கட்டணத்தைச் செலுத்தி, எழுத்துமூல விண்ணப்பமொன்றை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, “சுகுறுபாயா”, 5 ஆம் மாடி, “B” பகுதியில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம், 2020.10.15 ஆம் திகதி தொடக்கம் 2020.11.06 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை, அச்சிடப்பட்ட முழுமையான விலைகூறல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விலைகூறல்களை, மூலப் பிரதி (Original), இணைப் பிரதி (Duplicate) என இரு (02) பிரதிகளில் தயாரித்து 2020.11.06 ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், 5 ஆம் மாடி, “B” பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கப்படுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைகூறல்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

7. விலைகூறல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு விலைகூறல்கள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

8. எல்லா விலைகூறல்களும், விலைகூறல் ஆவணத்தில் பந்தி 3.4 இல் காட்டப்பட்டுள்ளவாறு, விலைகூறல் காப்பீடொன்றுடன், குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பெயரில் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், விலைகூறல் காப்பீடானது ரூபா நான்கு இலட்சம் (ரூ. 400,000/-) பெறுமதியைக் கொண்டதும், 2021.02.22 ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான, இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்குகின்ற வர்த்தக வங்கியொன்றால் விநியோகிக்கப்பட்டதுமாக இருத்தல் வேண்டும்.

9. விலைகூறல் முன் சந்திப்பொன்று 2020.10.29 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, “சுகுறுபாயா”, 5 ஆம் மாடி, பகுதி “A” இல் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்தில் நடைபெறும்.

**யூ.வீ. சரத் ரூப்பசிறி**
**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்,**
**“சுகுறுபாயா”,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

### அற்றோணிதத்துவத்தை இரத்துச் செய்தல்

குளிகொட, அந்துரன்கொட, இலக்கம் 349/பீ என்ற இடத்தில் வதியும் முத்துவாஹனதி உஷாந்த குமார மற்றும் பமுணுகம, செத்தப்பாடுவ, இலக்கம் 96/3 என்ற இடத்தில் வதியும் அதிகாரி முதியன்சேலாகே நலீனா ஜானி பிரசிடா பெர்ணாந்து ஆகிய எம்மால், குளீகொட, அந்துரன்கொட, இலக்கம் 349/பீ என்ற இடத்தில் வதியும், முத்துவாஹனதி துஷாந்த குமாரவிற்கு வழங்கப்பட்ட, பிரசித்த நொத்தாரிஸ் திருமதி டி.பி. கோத்தமி மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2020.01.16 திகதிய, இலக்கம் 2602 உடைய அற்றோணி தத்துவம் இத்தால் இரத்தச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்படுகின்றது. என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். இத்தினம் தொடக்கம் அற்றோணி தத்துவதாரரால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அற்றோணி தத்துவத்தின் கீழாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை மற்றும் செயற்பாடுகளுக்கும் நாம் பொறுப்பாக இருக்க மாட்டோம்.

**முத்துவாஹனதி ஷாந்த குமார மற்றும்**
**அதிகாரி முதியன்சேலாகே நலீனா ஜானி பிரசிடா பெர்ணாந்து**
**2020 ஒக்டோபர் 12ஆம் திகதி.**

---

## காணி எடுத்தற் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் அரசிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ள கீழ்க் காணப்படும் காணிக்காக அச்சட்டத்தின் 9 ஆவது பிரிவின் கீழ் உரிமை மற்றும் நட்டஈட்டுப் பரிசீலனை 2020.10.07 ஆந் திகதி ஹிக்கடுவை பிரதேச செயலாளர் பிரிவில் என்னால் நடாத்தப்பட உள்ளதால், பொது மக்கள் இது பற்றி அறிந்து கொள்வதற்காக இத்தால் மூலம் அறிவித்துக் கொள்கின்றேன். இக்காணிகள் தொடர்பாக எந்த விதத்திலேனும் உரிமை கோருபவர்கள் இப்பரிசீலனையில் கலந்து கொள்ள வேண்டும். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2192/60 மற்றும் 2020.09.10 ஆந் திகதி கொண்ட அரச வர்த்தமானிப் பத்திரிகையினைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாவட்டம் | :- காலி |
| பிரதேச செயலாளர் பிரிவு | :- ஹிக்கடுவை |
| கிராம சேவகர் பிரிவு | :- இலக்கம் 59 ஏ, ஹிக்கடுவை நகரம் |
| நிலத் துண்டு இலக்கம் | :- கா.சி. 810105 |
| நிலத் துண்டுகளின் எண்ணிக்கை | :- 04 |
| காணியின் அளவு | :- 0.3031 ஹெக்டயார் |
| காணி அமைந்துள்ள இடம் | :- ஹிக்கடுவை |
| காணியின் பெயர் | :- படல் கேவத்தை எனப்படுகின்ற பன்சலேவத்தை கும்புர, குடாகொடவெல, துடுவேகொடவெல எனப்படுகின்ற பன்சலேவத்தை |

**பிரதேச செயலாளர்,**
**ஹிக்கடுவைப் பிரதேசப் பிரிவு,**
**2020.10.05**
**ஹிக்கடுவை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருந்து.**

---

### 1964 இலக்கம் 28 உடைய காணி சுவீகரிப்புச் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**பிரதேச செயலாளர் உசாத்துணை இல: DSO/HOM/LAC/86**
**காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் உசாத்துணை இலக்கம்: 4-3/6/2013/ஏஎச்டப்/161(எச்)**

பொதுமக்களின் வேலையொன்று தொடர்பாக கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி/காணிகளை அரசாங்கத்திற்கு சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நடாத்தப்படவுள்ள 9ஆம் பிரிவின் கீழான உரித்துரிமை பரிசீலனை தொடர்பாக காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழாக அறிவித்தலொன்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2028/7 மற்றும் 2017.07.17 உடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு அந்த வர்த்தமானி அறிவித்தலைப் பாருங்கள்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | - மேல் மாகாணம் |
| மாவட்டம் | - கொழும்பு |
| பிரதேச செயலாளர் பிரிவு | - ஹோமாகம |
| கிராம அலுவலகர் பிரிவு | - 486/ஏ ஹோமாகம நகரம் |
| கிராமம் | - ஹோமாகம |
| கடற்திரள் வரைபட இல. | - 520001-21-31 (388 முதல் 457 வரை) - ஹெக். 0.1282 |
| துண்டு இல. மற்றும் அளவு | - 520001-24-13 (310 முதல் 372 வரை) - ஹெக். 0.1053<br>520001-27-11 (143 முதல் 163 வரை) - ஹெக். 0.0678<br>520001-29-06 (102 முதல் 109 வரை)- ஹெக். 0.0195<br>520001-31-13 (234 முதல் 343 வரை) - ஹெக். 0.3215<br>520001-28-13 (314 முதல் 386 வரை) - ஹெக். 0.1125<br>520001-32-03 (20 முதல் 29 வரை) -ஹெக். 0.0732<br>520001-25-15 (293 முதல் 318 வரை) - ஹெக். 0.0633<br>520001-30-23 (434 முதல் 489 வரை) ஹெக். 0.1801<br>520001-22-21 (336 முதல் 344 வரை) - ஹெக். 0.0303 |

**புத்தி தரங்க கருணாசேன**
**பிரதேச செயலாளர்,**
**ஹோமாகம.**

---

**எனது இலக்கம்: HIK/DS/LND/04/02/63**
**காணி அமைச்சின் இலக்கம்: 4-3/4/2017/D/550**

## காணி எடுத்தற் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக்கொண்ட கீழ்வரும் காணிக்காக அச்சட்டத்தின் 9வது பிரிவின் கீழ் உரிமை மற்றும் இழப்பீட்டு விசாரணை 2020.10.14ஆம் திகதி ஹிக்கடுவ பிரதேச செயலாளர் காரியாலயத்தில் என்னால் நடாத்தப்படுகின்றமையினால் மக்களுக்கு தெரிவிப்பதற்காக இத்தால் அறிவிக்கின்றேன். இக்காணியுடன் தொடர்புடையவர்கள் இவ் விசாரணைக்கு வருகைதர வேண்டும். மேலதிக விபரங்களுக்கு இல. 2192/60 மற்றும் 2020.09.10ஆம் திகதி அரச அதி விசேட வர்த்தமானி பத்திரத்தை பார்க்கவும்.

| | |
|---|---|
| மாவட்டம் | : காலி |
| பிரதேச செயலகம் | : ஹிக்கடுவ |
| கிராம அலுவலர் பிரிவு | : 43ஏ கெதல |
| வரைபட இலக்கம் | : காணி அளவீட்டு வரைபடம் |
| துண்ட எண்ணிக்கை | : 01 |
| விஸ்தீரணம் | : 0.2251 ஹெக்டயர் |
| காணி அமைந்துள்ள ஊர் | : கெதல |
| காணியின் பெயர் | : புஸ்ஸ துரகதரக பிட்டிய |

**பிரதேச செயலாளர்**
**ஹிக்கடுவ பிரிவு**
**2020.10.05**
**ஹிக்கடுவ பிரதேச செயலகத்தில்**

---

### சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு

## CTOT இல் துருப்பிடிக்காத கதவு மற்றும் பிரித்தடுப்பை (Partition) வழங்கி மற்றும் நிறுவுதல்

### ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

**ஒப்பந்த இல: Q691/20**

1. கீழே விபரிக்கப்பட்டவாறானதும் 3.8 மில்லியன் ரூபா ஆகுசெலவென (வரிகள் மற்றும் அவசர தேவைகள் நீங்கலாக) மதிப்பீடு செய்யப்பட்டதுமான “ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, CTOT இல் துருப்பிடிக்காத இரும்பு கதவு மற்றும் பிரித்தடுப்பை வழங்கி மற்றும் நிறுவுவது தொடர்பாக, முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, உங்களிடமிருந்தும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களிடமிருந்தும், ஸ்ரீ ஜயவர்தனபுர தேசிய வைத்தியசாலை, பணிப்பாளர் சார்பாக, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, பிரிவு பெறுகைக்குழுத் தலைவர் அழைக்கின்றார்.
   குறித்த தளமானது, ஸ்ரீ ஜயவாத்னபுரம் பொது வைத்தியசாலை வளவில் அமையப் பெற்றுள்ளதுடன், “CTOT இல் துருப்பிடிக்காத இரும்பு கதவு மற்றும் பிரித்தடுப்பை வழங்கி மற்றும் நிறுவுதல்” இலான BOQ இல் விபரிக்கப்பட்டுள்ளவாறான Demolition துரும்பிடிக்காத இரும்பு கதவுகள் மற்றும் பிரித்தடுப்பை வழங்கி, நிறுவுதல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான வேலைகளாகும். ஒப்பந்தக் காலம் 91 நாட்களாகும்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை ஊடாக விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தம் கையளிக்கப்படத் தகுதி பெறுவதற்கு வெற்றியாளரான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யவும் வேண்டும் தேவைப்படும் கம்பனி பதிவு..
   **நிபுணத்துவம்** : கட்டிடம் நிர்மாணிப்பு
   **தரம்** : C8 அல்லது அதற்கு மேற்பட்டது.
4. பின்வரும் ஒப்பந்தம் கையளிக்கப்பட தேவையான தகைமை தேவைப்பாடாகும்.
   **தொழில்நுட்பம்**
   **மேற்பார்வையாளர் (சிவில்)**
   - NCT அல்லது நிகரான வேலையில் மூன்று வருடக் கள அனுபவத்துடன் அதற்குச் சமமானது.
5. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்க்கு, 0112778624 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், 09.00 மணி முதல் 15.00 மணி வரை, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் அலுவலகத்தில் விலைமனுக் கோரும் ஆவணத்தை பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைப் பணிப்பாளரிற்கு ஒரு எழுத்துருவிலான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு, 3,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம், 2020.10.15 முதல் 2020.11.04 அன்று 9.00 மணி முதல் 15.00 மணி வரை உங்களுக்கு, ஆங்கில மொழியிலான ஒரு முழுமைப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.
7. பிரதிகளிலான விலைமனுக்கள், 2020.11.05 அன்று 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக, கீழேயுள்ள முகவரிக்கு நேரடியாக அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, விரிவுரை மண்டபத்தில் விலைமனுக்கள் மூடப்பட்டதன் பின்னர் அவை உடனடியாகத் திறக்கப்படும்.
8. அனைத்து விலைமனுக்களும் 55,000.00 ரூபா (ஐம்பத்தையாயிரம் ரூபா) விலைமனுப் பிணையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 91 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனுப் பிணையானது, விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 119 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**பணிப்பாளர்.**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டி, நுகேகொடை.**



---

## கேள்வி கோரல் அழைப்பு
### பெருந்தோட்ட அமைச்சு
### தென்னை பயிர்ச்செய்கை சபை

## பொலிபேக் கொள்வனவு செய்தல் – 2020

**பெறுகை இலக்கம்: E/7/G/PB/2020**

01. தென்னை பயிர்ச் செய்கை சபை சார்பாக திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் 2020ஆம் ஆண்டிற்காக கீழ்க்காணும் பொலிபேக் தொகையை கொள்வனவு செய்தல் சார்பாக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | விபரம் | அளவு |
|---|---|---|
| 01 | பொலிபேக் | 1,500,000 |

02. கேள்விப் பத்திரங்கள் கோரல் தேசிய போட்டி கேள்வி முறைமை (NCB) இன் மூலம் நடைபெறும்.

03. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு தென்னை பயிர்ச் செய்கை சபையின் வழங்கல்கள் அதிகாரியின் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன், கீழ்க்காணும் முகவரியில் வாரத்தின் கடமை நாட்களில் **2020.10.15** முதல் **2020.11.04** வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி கோரல் படிவங்கள் உட்பட விபரப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள உற்பத்தியாளர்களுக்கு அல்லது வழங்குநர்களுக்கு மாத்திரம் கேள்விகளை சமர்ப்பிக்கலாம்.

05. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களால் கம்பனிகள் பதிவாளர் பணிமனையில் பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதியுடன் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்த பின்னர் மீளளிக்கப்படாத ரூ. 5,000.00 தொகையை தென்னை பயிர்ச்செய்கை சபையின் தலைமையகத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த கேள்வி கோரல் ஆவணத் தொகுதியை **2020.11.04** வரை பெற்றுக்கொள்ளலாம்.

06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் **2020.11.05 பி.ப. 2.00** இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். **2020.11.05 பி.ப. 2.00** இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம். சகல கேள்விப் பத்திரத்துடனும் **கேள்வியின் பெறுமதியில் 1% பெறுமதிக்குக் குறையாத** இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட எந்த வர்த்தக வங்கியிலிருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடிய கேள்விப் பிணையொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். (காப்புறுதி காப்பீடுகள் ஏற்கப்படமாட்டாது).

07. உங்களது கேள்வி ஆவணங்களை பொறியிடப்பட்ட உறையில் இட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“பொலிபேக் கொள்வனவு செய்தல் - 2020”** என்று குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2020.11.05 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு அல்லது **2020.11.05 பி.ப. 2.00** இற்கு முன் கீழ்க்காணும் முகவரியில் முதலாம் மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**தென்னை பயிர்ச்செய்கை சபை,**
**9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.**
**தொ.பே. 011-2193457, பெக்ஸ்: 011-2861332**

---




This service is now implemented Island-wide.
Lake House is proud to partner this intiative.




# மலையகத்தில் சீரற்ற காலநிலை

★பலாங்கொடை வளவ தோட்டம்: மரம் முறிந்து வீழ்ந்ததில் இரு பெண்கள் பலி
★டிக்கோயா : மரம் முறிந்து வீழ்ந்து இருவீடுகள் சேதம், கல்லூரி மாணவி படுகாயம்
★வட்டவளை கரோலினாவில் மரம் முறிந்து வீழ்ந்து இருவீடுகள் சேதம்
★ஹற்றனில் மண்சரிவு இரண்டு கடைகள் சேதம், இருவர் படுகாயம்

**ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி, பலாங்கொடை, தலவாக்கலை குறூப், இரத்தினபுரி சுழற்சி நிருபர்கள்**

மத்தியமலை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக இரவு வேளைகளில் பலத்த காற்று வீசுவதுடன் அடிக்கடி பலத்த மழையும் பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்து மின்சார தடை ஏற்பட்டுள்ளதுடன், போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி மண்திட்டுகள் சரிந்து விழும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

பலாங்கொடை பின்னவலை வளவ தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தொழிலாளர்கள் மீது பாரிய மரமொன்று நேற்று காலை முறிந்து விழுந்ததில் சுமார் 45 வயது மதிக்கத்தக்க இரு பெண்கள் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் பலத்த காயங்களுடன் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை டிக்கோயா பட்டல்கெலே தொழிற்சாலைப் பிரிவில் பாரிய மரமொன்று நேற்றுமுன்தினம் (13) இரவு 9.55 மணியளவில் சரிந்து வீழ்ந்ததில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், கல்வியியல் கல்லூரி மாணவியொருவர் காயமடைந்து டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வீழ்ந்ததில் சுவர் இடிந்து கட்டிலில் வீழ்ந்ததில் அதில் உறங்கிக்கொண்டிருந்த கல்வியியல் கல்லூரி மாணவி காயமடைந்துள்ளார். மரம் வீழ்ந்ததன் காரணமாக வீட்டு உடைமைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

வட்டவளை கரோலினா பகுதியில் நேற்று அதிகாலை 4.00 மணியளவில் கித்துள் மரம் ஒன்று சரிந்து வீழ்ந்து இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை. எனினும்

இரு வீடுகளிலும் காணப்படும் பொருட்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஹற்றன் நகரில் எம்.ஆர் டவுன் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு எதிர்ப்பக்கமாக நேற்று (14) அதிகாலை நான்கு மணியளவில் ஏற்பட்ட மண்சரிவில் இரண்டு கடைகள் சேதமடைந்துள்ளதுடன் ஒரு கடையில் உறங்கிக் கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் காயமடைந்தள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மண்சரிவு ஏற்படும் போது மலிவு விற்பனை கடையில் ஐந்து பேர் உறங்கிக்கொண்டிருந்தனர். இவர்களில் இருவர் சிறிய காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். கடைக்கு பின்புறமாக இருந்த பாரிய மண்திட்டே இவ்வாறு சரிந்து வந்துள்ளது. இதனால் கடையில் உள்ள பொருட்களுக்கும் மற்றைய கடையில் ஒரு சமையலறைக்கும் சேதம் ஏற்பட்டுள்ளன.

மண்சரிவு காரணமாக மலிவு விற்பனை கடையொன்றும் இரும்பு பொருட்கள் சேகரிக்கும் கடை ஒன்றுமே சேதமடைந்துள்ளன. இந்த மண்திட்டு சரியக்கூடிய அபாயம் காணப்படுவதாக முன்கூட்டியே அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. கடையில் தங்கியிருக்க வேண்டாம் எனவும் மண் திட்டுக்கு மேல் உள்ள வீட்டில் வசிப்பவர்களுக்கும் அங்கிருந்து வேறு பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது,

இது குறித்து ஹற்றன் நகரசபையின் தலைவர் எஸ். பாலசந்திரன் கருத்து தெரிவிக்கையில்.

கடும் மழை காரணமாக மண் சரிவு ஏற்பட்டுள்ளது.மண்சரிவு அபாயம் ஏற்படும் நிலை இருப்பதனால் கடைகளில் யாரும் தங்க வேண்டாம் என முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தோம். அத்தோடு மேல் பகுதியில் வசிக்கும் ஒரு குடும்பத்தையும் அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். தற்போது மழை தொடர்ந்து பெய்துவருவதனால் மண் அகற்றுவது ஆபத்தானது. எனவே மழை குறைந்த பின்னர் மண் அகற்றுவதற்கான நடவடிக்கை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். இதனால் மலைகளுக்கும் மண்திட்டுக்களுக்கும் சமீபமாக வாழ்பவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.













## சமாதான நீதவான்

**மடுல்சீமை, பசறை நிருபர்கள்**



லுணுகலை, சோலண்ட்ஸ் தோட்ட மேற்பிரிவைச் சேர்ந்த எம். சத்தியமூர்த்தி அகில இலங்கை சமாதான நீதவானாக பதுளை மஜிஸ்ட்ரேட் நீதவான் ஆர்.எம். எஸ்.நயனத சமரதுங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் பசறை கல்வி வலயத்திலுள்ள சோலண்ட்ஸ் மேல் தமிழ் வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றுவதோடு, லுனுகலை பிரதேசத்தில் பல ஆன்மீக, சமூக மேம்பாட்டு செயற்பாடுகளில் இவர் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஊவா மாகாண புதிய கல்விப் பணிப்பாளராக டி.எம். ரத்நாயக்க கடந்த திங்கட்கிழமை ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலிடம் தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

## டிக்கோயா– பட்டல்கெலே அனர்த்தத்தை பார்வையிட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் விஜயம்



நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட டிக்கோயா பட்டல்கெலே தொழிற்சாலைப் பிரிவில் நேற்றிரவு பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் கல்வியியற் கல்லூரி மாணவியொருவர் காயமடைந்து டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனை கேள்வியுற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று சம்பவ இடத்துக்கு நேரில் சென்றார். பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களுக்கும் தேவையான உதவிகளையும் , குடியிருப்புகளை விரைவில் புனரமைத்து கொடுக்குமாறும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் அதிகாரிகளுக்கும், தோட்ட நிர்வாகத்திற்கும் பணிப்புரை விடுத்தார். அத்துடன், காயமடைந்த மாணவியை இராஜாங்க அமைச்சர் வைத்தியசாலைக்கு நேரில் சென்று பார்வையிட்டு நலம் விசாரித்தார்.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் முன்னாள் தலைவர் பாரத் அருள்சாமி ,நோர்வூட் பிரதேச சபைத்தலைவர் குழந்தைவேல் ரவி ஆகியோரும் உடனிருந்தனர்.

## பண்டாரவளையில் ஆடைத்தொழிற்சாலை தீக்கிரை



**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பண்டாரவளைப் பகுதியின் ஆடைத் தொழிற்சாலையொன்று விஷமி ஒருவரினால் தீ மூட்டப்பட்டதால் தொழிற்சாலை முற்றுமுழுதுமாக தீக்கிரையாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை மூன்றுமணியளவில் பண்டாரவளையைச் சேர்ந்த கெபில்லவெல என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆடைத் தொழிற்சாலையிலிருந்து தைத்து நிறைவு செய்யப்பட்டு வெளிநாடொன்றிற்கு ஏற்றுமதி செய்யப்படவிருந்த இலட்சக்கணக்கான ரூபா பெறுமதிமிக்க உடைகள் மற்றும் ஆடைகள் உள்ளிட்ட உபகரணத் தொகுதிகள் அனைத்துமே தீக்கிரையாகியுள்ளன. பலகோடி ரூபா பெறுமதியான ஆடைகள் சேதமாகியிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளன.

கடந்த 2016ம் ஆண்டு ஆடைத் தொழிற்சாலை வர்த்தக அமைச்சினால் நிருமாணிக்கப்பட்டிருந்தது. நூற்றுக் கணக்கான தமிழ்,சிங்கள இளைஞர்,யுவதிகள் ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றி வந்திருந்தனர்.

ஆடைத் தொழிற்சாலை சுவாலை விட்டு எரிந்துகொண்டிருந்ததை அப்பகுதியின் ஒருவர் கண்டு, மக்களிடம் தெரியப்படுத்தியதையடுத்து அயலவர்கள் அங்கு கூடினர். அவ்வேளையில் தீப்பந்தத்துடன் தப்பியோடிய நபரொருவரை மக்கள் வலைத்துப் பிடித்து பண்டாரவளைப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நபர் அட்டாம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த அரச ஊழியரொருவரென்பதும் குறிப்பிடத்தக்கது. பண்டாரவளைப் பொலிசார், மேற்படி சம்பவம் குறித்து தீவிரபுலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தனிப்பட்ட குரோதமே, இச்சம்பவத்திற்கு காரணமென்று தெரியவந்துள்ளது.

## வலேபொட கிராமிய வைத்தியசாலையில் வைத்தியர் இன்மையால் பொதுமக்கள் அசௌகரியம்

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

பலாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட எகொட வலேபொட கிராமிய வைத்தியசாலை திறந்து மூன்று வருட காலம் கடந்துள்ள போதிலும் சுகாதார பிரிவுக்கு வைத்தியர் ஒருவர் நியமனம் செய்யப்படவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சுகாதார மேம்பாட்டினை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கத்தில் கிராமிய சுகாதார வசதிகள் அபிவிருத்தி செய்யும் வேலை திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக சப்ரகமுவ மாகாண சபை நிதி ஒதுக்கீட்டில் வலேபொட கிராமிய வைத்தியசாலை கடந்த 2017ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர். இந்த இரண்டு மாடிக் கட்டிடத்திற்கான ஒன்றரை கோடி ரூபாய் அளவில் நிதி ஒதுக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். இந்த இரண்டு மாடி கட்டிடத்தில் தாய் சேய் சிகிச்சை பிரிவு மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் உள்ளபோதிலும் அவை மாதத்துக்கு ஒரு முறை பயன்படுத்தப்பட்ட பின்னர் மற்ற நாட்களில் அவை மூடப்பட்டு விடுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். எனவே இந்த கிராமிய வைத்தியசாலைக்கு துரிதமாக வைத்திய அதிகாரி ஒருவரை நியமனம் செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வெளிநாட்டில் இருந்து வந்தவருக்கு 2 ஆவது பரீட்சிப்பில் கொரோனா

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

காவத்தை வெல்லந்துர துணை நகரப் பிரதேசத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் அவரது குடும்பத்தினர் உட்பட அவர் தொடர்பு வைத்திருந்த அயலவர்கள், வியாபார நிலையங்களைச் சேர்ந்த 50 பேர் நேற்று முன்தினம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பிரதேச பொது சுகாதார சேவைகள் பரிசோதகர் நிமல் விஜேசிரி தெரிவித்தார். வெளிநாடொன்றிலிருந்து வருகை தந்த இவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு பி.சீ.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் இவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கவில்லை. எனவே இவர் மீண்டும் வெளிநாடு செல்ல முயற்சித்த போது தனியார் வைத்தியசாலையொன்றில் நேற்று முன்தினம் மேற்கொண்ட பி.சீ. ஆர் பரிசோதனையின் போது கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவருக்கான கொரோனா தொற்று வேறொருவர் மூலம் ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இதன் மூலத்தை அறிவதற்காக முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. இவர் தொடர்பு வைத்திருந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக தென்படுவதால் பி.சீ.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

### வெல்லந்துர நகரில் 12 வீடுகள் கடைகளைச் சேர்ந்த 50பேர் தனிமைப்படுத்தல்

## முகக்கவசங்கள் அன்பளிப்பு

**(எம்.ஏ.அமீனுல்லா)**

கண்டி மாவட்டத்தில் கொவிட் 19 தொற்றுநோய் தடுப்பு கடமையில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு 'ஈஸ்டன் இன்ரநெஷனல் லங்கா' என்ற அமைப்பினால் ஒரு தொகை முகக் கவசங்கள் உட்பட வைத்திய உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இந்த அன்பளிப்பு பொருட்களை கண்டி மாவட்ட பதில் செயலாளர் ஜே.சீ.ரனேபுர கண்டி மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் வைத்து அண்மையில் பெற்றுக் கொண்டார்.

## இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 8 பேர் கைது

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பலாங்கொடை கல்தோட்டை பொலிஸ் பிரதேசத்தில் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வளவை கங்கையின் துணை ஆறுகளில் ஒன்றான கொங்கங் ஓயாவி ல் நேற்று முன்தினம் இவர்கள் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்ந்து கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது இரத்தினக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தரங்க ஹபுகஸ்வத்த தெரிவித்தனர்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2020 ஒக்டோபர் 15
வியாழக்கிழமை

# யாழில் 501 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலில்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

யாழ்ப்பாணத்தில் 501 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 98 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்போதைய கொரோனா நிலைவரம் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், யாழ். மாவட்டத்தில் தற்போது கொரோனா நிலைவரம் கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும்கூட, அபாயமான சூழல் இன்னும் விலகவில்லை.

எனவே. அனைவரும் கவனமாகச் செயற்பட வேண்டும். யாழ்.மாவட்டத்தில் 501 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 98 பேர் இதுவரை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

மேலும், கட்டாய தனிமைப்படுத்தலில் இருந்தவர்களின் எண்ணிக்கை 28 ஆக இருந்து தற்போது 18ஆக குறைவடைந்துள்ளது. பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் தொற்று இனங்காணப்படாதவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

ஒருவருக்கு மாத்திரமே யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தினுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை முன்னிட்டு எடுக்கப்படுகின்ற முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அனைவரும் சுகாதார வழிகாட்டல்களை கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் நீண்டதூர போக்குவரத்தில் ஈடுபடுவோர் தங்களைப் பற்றிய விபரங்களை சுகாதாரப் பிரிவினருக்கு கட்டாயமாக தெரியப்படுத்த வேண்டும்.

தேவைப்படின், அவர்களுக்குரிய PCR பரிசோதனைகளை மேற்கொள்ள சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுப்பார்கள். எனவே, அனைவரும் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

# கரைச்சி பிரதேச செயலகம் மக்களுக்கு உரிய காணிகளை வழங்க வேண்டும்

## வடமாகாண ஆளுநர் பணிப்பு

கரைச்சி பிரதேச செயலகம் மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு முன்னர் அவர்களுக்கு உரித்தான காணிகளை முறைப்படி உரிய காலத்தில் வழங்கியிருத்தல் வேண்டும். அதன் பின்னரே அப் பிரதேச மக்களுக்கு வீட்டுத் திட்டத்தை வழங்கியிருக்க வேண்டும் என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

தற்போது காணிகளின் உரித்து முறையாக வழங்கப்படாத சூழலில் வீட்டுத் திட்டத்தினை எவ்வாறு உள்ளூராட்சி சபையூடாக சம்பந்தப்பட்ட மக்கள் முன்னெடுக்க முடியும். எனவே கரைச்சி பிரதேச செயலகத்தினால் வீட்டுத் திட்டம் வழங்கியவர்களுக்கான காணி உரிமையினை உடன் நடைமுறைப்படுத்தி முழுமையாக வழங்க முன்வர வேண்டும்.

அதன் பின்னர் வீட்டுத்திட்ட பெயர்ப் பதிவினை உள்ளூராட்சி சபையூடாக உடன் முன்னெடுத்து வீட்டுத் திட்டத்தினை ஆரம்பிக்க வேண்டும்.

மேற்படி விடயத்தில் வீட்டுத் திட்டம் கிடைத்த சாதாரண பொதுமக்களை அலைக்களியாது கரைச்சி பிரதேச செயலகம் பிரதேச சபை என்பன ஒருங்கிணைந்த வகையில் மக்களுக்கு உரிய காலத்தில் வீடு கிடைத்திட பணியாற்ற வேண்டும் என்றார்.

(ஏஸ்.ரமேஸ்)

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல் தொடர்வது கண்டனத்துக்குரியது

## த.தே.ம.முன்னணி

வவுனியா விசேட நிருபர்

தமிழ் தேசத்தின் இருப்புக்காகவும், தமிழ் தேசத்தின் வளப் பாதுகாப்புக்காகவும் குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் இலங்கைதீவில் தொடர்ந்து கொண்டிருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் தமது பூர்வீக நிலங்களில் வாழ்ந்து வரும் நிலையில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் அத்துமீறல்கள், நில அபகரிப்புக்கள், ஆக்கிரமிப்புக்கள் தொடர்பாகவும், தமிழர் தாயகப் பிரதேசத்தின் இயற்கை வளங்களின் பாதுகாப்புக்காகவும் தொடர்ச்சியாக பல ஊடகவியலாளர்கள் குரல் கொடுத்து வருகின்றார்கள்.

அவ்வாறான ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக இலக்கு வைக்கப்பட்டு கொல்லப்படுகின்றமை, கடத்தப்படுகின்றமை, தாக்குதலுக்குள்ளாகின்றமை போன்ற சம்பவங்கள் தொடர் நீட்சியாக இந்த நாட்டில் இடம்பெற்று வருகின்றது. அவர்களுக்கான நீதியான விசாரணைகள் இன்று வரை முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

# தூக்கில் தொங்கிய நிலையில் குடும்ப பெண் சடலமாக மீட்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா கற்பகபுரம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட புதிய கற்பகபுரம் பகுதியில் இரு பிள்ளைகளின் தாய் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று காலை 7.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன் 27 வயதான முத்துக்குமார் கஜனி என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வீட்டிலிருந்து காலை 6.30 மணியளவில் 3 வயது மற்றும் 7 வயது பிள்ளைகளுடன் கணவர் அவரது தாயார் வீட்டிற்கு சென்றுள்ளார். இதன்போது இப் பெண் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார். காலை 8.45 மணியளவில் வீடு திரும்பிய கணவர் வீட்டிற்குள் சென்றபோது மனைவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் விசாரணைகளை மேற்கொண்டார்.

இதேவேளை தான் கடன் தொல்லையினால் தற்கொலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இப் பெண் அவரது தாயாரிடம் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தெரிவித்திருந்ததாக மரணித்த பெண்ணின் தாயார் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வீட்டில் பதுக்கி வைக்கப்பட்ட 50 சாராயப் போத்தல்கள் மீட்பு

பருத்தித்துறை விசேட நிருபர்

இளவாலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பண்டத்தரிப்பு பகுதியில் வீடு ஒன்றில் சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 50 சாராயப் போத்தல்களை இளவாலைப் பொலிசார் நேற்றிரவு கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பண்டத்தரிப்பு நகரப் பகுதியிலுள்ள வீடொன்றில் சாராய போத்தல்கள் சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும் அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் பொலிசாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிசார் மேற்கொண்ட விசாரணையில் பண்டத்தரிப்பு நகரப் பகுதியில் உள்ள வீடு ஒன்று முற்றுகையிடப்பட்டது. குறித்த வீட்டினை பொலிசார் சோதனையிட்ட போது அங்கு 180 மில்லிலீற்றர் சாராயப் போத்தல்கள் 50 மீட்கப்பட்டன.

மேலும் சாராயப் போத்தல்களை பதுக்கி வைத்த வீட்டின் உரிமையாளரான 48 வயதுடைய சந்தேக நபரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் இருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு பக்கச்சார்பற்ற நீதி வழங்க வேண்டும் என வலியுறுத்தி யாழ். ஊடக மன்றம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் அது தொடர்பான மகஜரினை யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் கையளித்த போது... (படம் சுண்டுக்குளி குறூப் நிருபர்)

# போதிய வசதிகள் அற்ற நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலை

பரந்தன் குறூப் நிருபர்

மாங்குளம் வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டாலும் அதற்கான அடிப்படை வசதிகள் கூட இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை என மாங்குளம் பிரதேச அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஏ9 வீதியில் அமைந்துள்ள ஒரு வைத்தியசாலையாகவும் வவுனியாவில் இருந்து 45 கிலோ மீற்றர் தொலைவிலும் கிளிநொச்சியிலிருந்து 29 கிலோ மீற்றர் தொலைவிலும் அதேபோல் முல்லைத்தீவிலிருந்து 48 கிலோ மீற்றர் தொலைவிலும் இவ் வைத்தியசாலை அமைந்துள்ளது,

ஏ9 வீதியிலும் ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதி, மாங்குளம் மல்லாவி வீதி ஆகியவற்றில் அடிக்கடி ஏற்படுகின்ற விபத்துக்களில் காயமடைபவர்கள் உடனடியாக மாங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகின்ற நிலையில் அங்கு அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்படுத்தப்படாமை நோயாளர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது. இவ் வைத்தியசாலையில் குடிநீர் வசதியின்மை, அவசர சிகிச்சைப் இபிரிவு இன்மை, இரத்த வங்கியின்மை, போதிய வைத்தியர் வசதியின்மை என பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுகின்றன. இங்கு அனுமதிக்கப்படும் நோயாளர்கள் ஏனைய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு ஏற்ற வகையில் ஒரேயொரு நோயாளர் காவுவண்டி மாத்திரமே காணப்படுகின்றது என்றும் அதுவும் அடிக்கடி பழுதடையும் நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியாலாளர் மீது தாக்குதல்

# இருவருக்கு விளக்கமறியல்; ஒருவருக்கு ஆட் பிணை

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரை நாளைய தினம் வரை விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் இச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவரை பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற இரண்டு ஊடகவியலார்கள் கடத்தல்காரர்களால் தாக்கப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் மூவரை கைது செய்தனர்.

இவர்களில் இருவரை திங்கட்கிழமை கைது செய்த நிலையில் நேற்று முன்தினம் மற்றுமொருவரை கைது செய்தனர். இவர்களில் ஊடகவியலாள்களிடம் பறிக்கப்பட்ட மெமறிக் காட் படங்களை மனைவியிடம் கொடுத்து வைத்திருந்த நிலையில் அப் பெண்ணும் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட மூவரில் பெண்ணை ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் மற்றைய இருவரையும் நாளைய தினம் வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

# துவிச்சக்கரவண்டி திருத்தகம் எரிப்பு; சந்தேகநபர்கள் கைது

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் துவிச்சக்கர வண்டி திருத்தகத்தை எரித்த குற்றச் சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா சாந்தசோலை வீதியில் அமைந்துள்ள துவிச்சக்கர வண்டி திருத்தகம் ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை இனந்தெரியாத நபர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டது. இது குறித்து துவிச்சக்கர வண்டி திருத்தக உரிமையாளரால் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இவ் முறைப்பாடு குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் சம்பவம் தொடர்பில் அப் பகுதியைச் சேர்ந்த மூவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதுடன், தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வவுனியாவில் 141 குளங்கள் இந்த ஆண்டு புனரமைப்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா மாவட்டத்தில் இவ்வாண்டு 141 சிறிய குளங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

வவுனியா மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகளை மேலும் விருத்தி செய்து விவசாயிகளின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு அமைவாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அதன் ஒரு கட்டமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களை புனரமைத்து அதனை விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், வவுனியா மாவட்டத்தில் இவ்வாண்டு 29.4 மில்லியன் ரூபாய் செலவில் 141 சிறிய குளங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், 105 சிறிய குளங்களில் திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு 34 மில்லியன் ரூபாய் தேவைப்படுகின்றது. அந்நிதியை அரசாங்கத்திடம் இருந்து பெற்று குறித்த குளங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், விவசாயிகளும் குளங்களை பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# பட்டப்பகலில் வீடு உடைத்து நகைகள், பணம் கொள்ளை

பருத்தித்துறை விசேட நிருபர்

இணுவில் மஞ்சத்தடி பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தரின் வீடு பட்டப்பகலில் உடைக்கப்பட்டு நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன. இந்த சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இணுவில் மஞ்சத்தடி பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர் தனது கடமைகளுக்காக சென்றுள்ளார். அவ்வாறான நிலையில் வீட்டில் ஒருவரும் இல்லாத சமயத்தில் பட்டப்பகலில் வீட்டின் கதவை உடைத்து திருடர்கள் நுழைந்துள்ளனர்.

உள்நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்த தங்க நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். வீட்டின் கதவு உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த 5 பவுண் தங்க நகைகளும் 20 ஆயிரம் ரூபாய் பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற கோப்பாய் பொலிசார் திருட்டு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பரீட்சை அனுமதி அட்டையில் தீ பற்றியதால் மாணவி மயக்கம்

**கந்தர்மடம் நிருபர்**

முல்லைத்தீவில் பரீட்சை அனுமதி அட்டையை சுவாமித் தட்டில் வைத்து வணங்கிய மாணவி பட விளக்கின் தீ பட்டதனால் பரீட்சை அனுமதி அட்டையை இழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பாலிநகர் பகுதியில் க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றும் மாணவி ஒருவர் தனது பரீட்சை அனுமதி அட்டையை வழிபாட்டிற்காக சுவாமித் தட்டில் வைத்துள்ளார்.

இதன்போது விளக்கும் ஏற்றப்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டத்தில் நெருப்பு பட்டு அனுமதி அட்டை தீ பிடித்து எரிந்துள்ளது.

இதனால் மாணவி நேற்று முன்தினம் ஆரம்பமான க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு அச்சத்துடன் சென்றபோதும் உடனடியாகவே பாடசாலை நிர்வாகம் மற்றும் பரீட்சை மேற்பார்வையாளர்களின் துரித செயற்பாட்டின் மூலம் மாணவியின் சுட்டிலக்கம் ஆள் அடையாளங்கள் என்பன உறுதி செய்யப்பட்டு பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

இவ்வாறு மாற்று ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொண்டு பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டபோதும் இது தொடர்பில் ஆழ்ந்த சிந்தனையில் இருந்த மாணவி மயக்கமுற்று வீழ்ந்தமையினால் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

## ஊடகவியலாளர் பொலிஸ் மாஅதிபருடன் சந்திப்பு

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்ட விடயம் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி கிளிநொச்சி ஊடக அமையம் நேற்று கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபரை சந்தித்து கலந்துரையாடினர். இரணைமடுவில் அமைந்துள்ள கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபர் காரியாலயத்தில் இச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி ஊடக அமையம் மகஜர் ஒன்றினையும் கையளித்திருந்தது.

## தாக்குதலுக்கு சிவகரன் கண்டனம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை கண்டிப்பதாக தமிழரசு கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணி தலைவர் சி.சிவகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

உண்மையை உலகுக்கு வெளிப்படுத்த முயன்ற தினகரன் ஊடகவியலாளர்களான சண்முகம் தவசீலன் கணபதிப்பிள்ளை குமணன் ஆகிய இருவரும் சட்டத்திற்குப் புறம்பான முறையில் கடத்தல் செயற்பாட்டில் ஈடுபட்ட கும்பலால் தாக்கப்பட்டதை தாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

தாக்குதல் செயற்பாடு தொடர்பில் காவல் துறையினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## வாழ்வாதார கடன் திட்டம்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் முசலி பிரதேச செயலகப் பிரிவில் மருதமடு என்னும் கிராமத்தில் 'கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்' வாழ்வாதாரத்துக்கான சுழற்சி முறையிலான கடன் வழங்கப்பட்டது.

முசலி பிரதேச செயலாளர் இக் கடனினை இரண்டாம் கட்டமாக வழங்கி வைத்தார். இந் நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் யூட் மைக்கல்ராஜ் அபிவிருத்தி திட்டப் பணிப்பாளர் எம்.ராவீவ், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் இக் குழு அங்கத்துவர்களும் கலந்துகொண்டனர்.

## பாதுகாப்பாக நகர்த்தப்பட்ட மூத்தறிஞர் உருவச் சிலை

**கரவெட்டி தினகரன் நிருபர்**

பருத்தித்துறையையும் கொடிகாமத்தையும் இணைக்கும் புலோலி கொடிகாமம் கச்சாய் பிரதான வீதியை அகலப்படுத்தும் செயற்பாட்டுக்கு வசதியாக மந்திகை எரிபொருள் நிலையச் சந்தியடியில் அமைக்கப்பட்டிருந்த புலோலியூர் மூத்தறிஞர் கந்தையா முருகேசனாரின் திருவுருவச் சிலை நவீன இயந்திர வாகனத்தின் உதவியுடன் பின் நோக்கி நகர்த்தி பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

திருவுருவச் சிலையை பின்நோக்கி நகர்த்தி நிறுவுவதற்கு காணித்துண்டை அருகில் உள்ள எரிபொருள் நிலையம் வழங்கியது. பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதி, பருத்தித்துறை கொடிகாமம் வீதி ஆகியவற்றை இணைக்கும் மந்திகை முச்சந்தியில் இருந்தே புலோலி கொடிகாமம் கச்சாய் வீதி புனரமைப்புப் பணி ஆரம்பமாகி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

## சங்க கூட்டம் ஒத்திவைப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று அசாதாரன சூழ்நிலை காரணமாக கட்டைவெலி நெல்லியடி ப.நோ. கூட்டுறவு சங்கத்தால் சனிக்கிழமை நடத்தப்படவிருந்த பொதுக்கூட்டம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (அலதாஸ்)

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என மீனவர்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. நாட்டில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதனால் இன்று காலை வரை கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்று மீனவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த காற்று வீசக்கூடும் என்பதுடன், கடல் கொந்தளிப்பாக காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வரை காற்று வீசக்கூடும் என வளிமண்டளவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# அதிக விலைக்கு விற்பனை செய்தால் உடனடியாக முறைப்பாடு செய்யவும்

## யாழ். அரச அதிபர்



**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க அதிக விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டால் உடனடியாக யாழ்.மாவட்ட செயலகத்தின் முறைப்பாட்டு பிரிவுக்கு முறைப்பாடு செய்ய முடியும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் சூழ்நிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் நெருக்கடியான நிலைமைகள் காணப்படுகின்றன.

எனினும் இன்று வரை எவ்வித அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படவில்லை.

அதுமட்டுமின்றி நாட்டு மக்களின் நன்மை கருதி அரசாங்கம் தற்போது அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகளை குறைத்துள்ளது.

எனவே அரசாங்கத்தினால் நிர்னயிக்கப்பட்ட விலைக்கு அதிகமான விலையில் பொருட்கள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் அந்த வியாபாரிகள் மீது உடனடியாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் தாங்கள் வாங்கும் பொருட்களில் அதிக விலையில் விற்கப்பட்டால் உடனடியாக யாழ் மாவட்ட செயலகத்தின் முறைப்பாட்டு பிரிவு தொலைபேசி இலக்கமான 021 222 5000 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தகவலைத் தர முடியும்.

பொதுமக்களினால் முறைப்பாடு வழங்கப்பட்டால் உடனடியாக குறித்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நாம் நடவடிக்கைகளை எடுப்போம். எனவே பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## கொரோனா அபாய காலத்தில் விவசாயிகளை ஒன்றுகூட வைக்கும் கமநல திணைக்களம்

### விவசாயிகள் விசனம்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

கிளிநொச்சி கமநல சேவை நிலையங்களில் விவசாயிகளை ஒன்றுகூட வைப்பது தொடர்பாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கொரோனா அபாயம் காரணமாக மாவட்டச் செயலகம் மற்றும் பொலிஸ், இராணுவம் ஊடாக ஒன்றுகூடல்களை தவிர்த்துவரும் நிலையில் கமநலசேவை நிலையங்களில் பாதுகாப்பற்ற முறையில் இலவச பசளைகள் விநியோகிக்கப்படுகின்றன.

ஒரே நேரத்தில் விவசாய அடையாள அட்டைக்கான படம் பிடித்தல், கமக்கார அமைப்பின் பண அறவீடுகள், கமக்கார அடையாள அட்டைக்கான பண அறவீடுகள் என மேற்கொள்ளப்பட்டே இலவச பசளை வழங்கப்படுகின்றது. படப் பிடிப்புகள், பணஅறவீடுகள் என்பன ஏற்கனவே மேற்கொண்டிருக்க முடியும்.

ஆனால் ஒரேநாளில் அனைத்து விவசாயிகளையும் கமநல சேவை நிலையங்களுக்கு வாருங்கள் என ஒன்றுகுவிப்பதால் கொரோனா அபாயத்திற்கு மத்தியிலும் விவசாயிகள் ஒன்றுகூடி இலவச பசளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

## மடு வீதியின் பற்றைகளால் யானை நிற்பது தெரியவில்லை

### பிரதேச செயலரிடம் முறைப்பாடு

**கந்தர்மடம் நிருபர்**

மன்னார் மடுப் பிரதேச செயலாளர் பிரிவில் வீதிகளின் இருமருங்கிலும் உள்ள பற்றைகளை துப்பரவு செய்யாமையினால் யானைகள் வீதியோரம் நிற்பதனைக்கூட கண்டறிய முடியவில்லை என பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மடுப் பிரதேசத்தின் சின்னப்பண்டிவிரிச்சான், மடு, பள்ளமடு வீதிகளில் வீதியின் இரு மருங்கும் பற்றைகள் வளர்ந்து பாதையை மூடி நிற்கின்றன. இதன் காரணமாக யானைகள் வீதியின் இருமருங்கும் நிற்பதை அவதானிக்க முடியவில்லை.

இதன் காரணமாக அண்மை நாட்களில் பலர் யானைகளிடம் அகப்படும் அவலம் நிகழ்கின்றது. எனவே இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தி வீதிகளின் இருமருங்கும் மண்டியுள்ள பற்றைகளை அகற்றி யானைகளிடம் இருந்து பாதுகாப்பளிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதோடு வீதியின் பெரும்பகுதியை சுயமாக சிரமதானம் மூலமும் துப்பரவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக மடுப் பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கையில், மேற்படி விடயத்தை வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் பிரதேச சபைகளிற்கு அறிவிக்கப்பட்டபோதும் உரிய தீர்வு கிடைக்கவில்லை என்றார்.

## வவுனியா நகர சபைக்கு முன் முச்சக்கர வண்டி சாரதிகள் கூடியதால் பரபரப்பு



**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா நகரசபை தமக்கு அநீதி இழைத்துள்ளதாக தெரிவித்து 30க்கு மேற்பட்ட முச்சக்கரவண்டிகள் வவுனியா நகரசபை முன்பாக ஒன்றுகூடியதால் அவ்விடத்தில் சற்று பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

வவுனியா நகரசபைக்கு முன்பாக நேற்று முன்தினம் மதியம் 1.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரின் அபிவிருத்தியினை கருத்தில் கொண்டும் ஏனைய சில மாவட்டங்களில் நடைமுறையில் உள்ள வாடகைக்கார் பயன்பாட்டினையடுத்து வவுனியா நகரசபைக் குட்பட்ட பகுதியில் வாடகைக் கார் செலுத்துவதற்கு நபர் ஒருவருக்கு வவுனியா நகரசபையினரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் வாடகைக் காருக்கான அனுமதியினை இரத்து செய்யக்கோரியே முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் ஒன்றுகூடியிருந்தனர். அதன் பின்னர் வவுனியா நகரசபை தவிசாளர் காரியாலயத்தில் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினருக்கும் வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் மற்றும் நகரசபை செயலாளர் ஆர். தயாபரன் ஆகியோருக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

வாடகைக்காருக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினை தற்காலிகமாக நிறுத்துவதாகவும் எதிர்வரும் நகரசபை கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதாகவும் வவுனியா நகரசபை தவிசாளர் மற்றும் நகரசபை செயலாளர் தெரிவித்தமையினையடுத்து அவர்கள் அவ்விடத்தினை விட்டு கலைந்து சென்றனர்.

## புதிய மீன் சந்தை கட்டடம் திறப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

பருத்தித்துறை நகரில் மீன் சந்தை வளவில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட நவீன பொது மீன் சந்தைக் கட்டடம் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகர சபையினால் 56 இலட்சம் ரூபா சபை நிதியில் இம் மீன் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இச் சந்தையை பருத்தித்துறை நகரசபைத் தலைவர் யோசப் இருதயராஜா கடந்த வெள்ளிக்கிழமை மாலை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். மறுநாள் சனிக்கிழமை மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டது.

இப் பொது மீன் சந்தையில் முன்னர் வியாபாரம் செய்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் 46 மீன் வியாபாரிகளுக்கும் 7 கருவாட்டு வியாபாரிகளுக்கும் 5 மீன் வெட்டிக் கொடுப்போருக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஒரு வருடமாக வைத்தியர் இல்லாத வன்னேரிக்குளம் மருத்துவமனை

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

கிளிநொச்சி வன்னேரிக்குளம் வைத்தியசாலையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து வைத்தியர்கள் பணிக்கு வருவதில்லை என கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் இருந்தே வாரத்தில் இரு நாட்கள் வைத்தியர்கள் இவ் வைத்தியசாலைக்கு பணிக்கு வந்ததாகவும் ஆனால் கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து வைத்தியர்கள் வருவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் கிராமத்தில் தற்போது 500 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன. இவ் வைத்தியசாலையினை நம்பி வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராமங்களைச் சேர்ந்த 1000 குடும்பங்கள் வரை வாழ்கின்றன.

தற்போது வைத்தியர்கள் பணியில் இல்லாததன் காரணமாக பத்து கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கே இரு கிராம மக்களும் செல்ல வேண்டி உள்ளனர்.

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாத வன்னேரிக்குளம் வீதி வழியாக அக்கராயனுக்கு செல்லும் போது இடைவழியில் உயிரிழப்புகளும் மகப்பேறுகளும் அடிக்கடி நிகழ்ந்துள்ளன.

இந்நிலையில் வன்னேரிக்குளம் வைத்தியசாலைக்கு வைத்தியரை நியமிப்பதற்கு கிளிநொச்சி பிரதி சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராம அலுவலர் பிரிவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### மன்னாரில்:

## இதுவரை 1418 பேருக்கு கொரோனா பரிசோதனை

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

**தலைமன்னார் விஷேட நிருபர்**


மன்னார் பெரியகடை மற்றும் பட்டித்தோட்டம் பகுதிகளில் எவருக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லை என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார். மன்னாரில் இதுவரை 1418 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

மன்னாரில் கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட ஒன்பது பேருடன் முதலாம் மற்றும் இரண்டாம் நிலை கொண்ட சந்தேகநபர்களுக்கு மன்னார் பட்டித்தோட்டம் மற்றும் பெரியகடை பகுதியிலுள்ள 81 பேருக்கு திங்கட்கிழமை பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதற்கான முடிவுகள் செவ்வாய்கிழமை கிடைக்கப்பெற்றுள்ளது. இம் முடிவுகளின் அடிப்படையில் இரண்டாம் நிலை பி.சி.ஆர். பரிசோதனையில் உள்ள 81 பேருக்கும் தொற்று இல்லை என்பது தெரியவந்துள்ளது. மன்னாரில் கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட முதல் அதாவது கடந்த மார்ச் மாதம் தொடக்கம் இன்றுவரை 1418 நபர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

## விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கிருமித் தொற்று நீக்கல்



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்று அச்சுறுத்தல் காரணமாக முடக்கப்பட்ட பகுதிகள் மீளத் திறக்கப்பட்ட நிலையில் அப் பகுதிகளில் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நேற்று முன்தினம் காலை 7.30 மணி முதல் இக் கிருமித் தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்று காரணமாக இரண்டு கிராமங்கள் மூடப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் மீண்டும் குறித்த கிராமங்கள் திறந்து விடப்பட்டன.

மன்னார் பொலிசார், விசேட அதிரடிப்படையினர், பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் மன்னார் நகர சபை ஆகியவை இணைந்து கிருமி தொற்று நீக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மன்னார் பெரியகடை பகுதியில் மூடப்பட்ட வர்த்தக நிலையம், அதனை சார்ந்த பகுதிகள், மன்னார் புதிய பேருந்து தரிப்பிடம் மற்றும் பட்டித்தோட்டம் ஆகிய பகுதிகளில் கிருமி தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க, மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.கிருஸாந்தன், மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கில்றோய் பீரிஸ் உட்பட விசேட அதிரடிப் படை அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.





# பூநகரியின் விவசாயத்துக்கான நீர் தேவை பூர்த்தியாகுமா?

கற்கால பண்பாடும் வரலாற்றுத் தொன்மையும் பூர்வீகச் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட பூநகரிப் பிரதேசத்தில் நீர் வளத்தை பேணும் வகையில் பூனகரிக்கான குளம் அமைக்கப்படவுள்ளது.

பெருங் கற்காலப் பண்பாடு தொடக்கம் மக்கள் வாழ்ந்து வருவதாக தொல்லியச் சான்றுதலுடன் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்ற மிகவும் தொன்மையான ஒரு பிரதேசமாக பூநகரிப் பிரதேசம் காணப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் பூநகரியின் கரையோரப் பகுதிகளில் வர்த்தக தொடர்புடன் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இதைவிட, கரையோரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் விவசாயத்தோடு பின்னிப்பிணைந்த மக்கள் சமூகமும் அங்கு வாழ்ந்ததாக வரலாற்று சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது.

இவ்வாறு தொன்று தொட்டு மக்கள் வாழும் இப் பிரதேசத்தில் வருடம் முழுவதும் குடிநீர் ஒரு பாரிய பிரச்சினையாகவுள்ளது. காரணம் அதிகப்படியான பிரதேசங்களில் உவர்நீர் ஆக்கிரமிப்புக்களால் குடிநீர் உவர் நீராக மாற்றமடைந்துள்ளன.

இது இவ்வாறிருக்க இப் பிரதேசத்தில் தொன்று தொட்டு விளைவிக்கப்படுகின்ற பாரம்பரிய நெல்லினங்களின் அரிசிக்கு இலங்கையில் மட்டுமல்ல ஆசிய, ஐரோப்பிய நாடுகளிலும் மதிப்பும், கிராக்கியும் காணப்படுகின்றது.

அதிகளவான சிறு சிறு குளங்கள் காணப்பட்டாலும், வான் பார்த்த பூமியாக மழையை நம்பி மானாவாரியாக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு பயிர்ச் செய்கையின் மூலமுமே இங்கு விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிலத்தின் நீர் வளத்தை பேணும் வகையில் ஒரு பாரிய நீர்த் தேக்கம் ஒன்றினை அமைக்கலாம் என ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 2012ம் ஆண்டின் ஆரம்பத்தில் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீரப்பாசனத் திணைக்களத்தினால் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தை ஊடறுத்து செல்கின்ற மற்றும் அதிக நீர்வரத்தைக் கொண்ட கனகராயன் ஆறு போன்ற பாரிய ஆறுகள் மறிக்கப்பட்டு கிளிநொச்சியின் கிழக்குப் பிரதேசத்தில் இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், பிரமந்தனாறுக்குளம் மற்றும் கனகாம்பிகைக்குளம், போன்ற பாரிய குளங்கள் அமைந்துள்ளன.

கிளிநொச்சியின் மேற்குப் பிரதேசத்தில் உள்ள பாரிய நீப்பாசனக் குளமாக அக்கராயன்குளமும் அதற்கு அடுத்தாற்போல் குடமுருட்டிக்குளம், கரியாலை, நாகபடுவான்குளம், வன்னேரிக்குளம் போன்ற குளங்கள் அமைந்துள்ளன.

மேற்குப் பகுதியில் இந்தக் குளங்களுக்கு ஒப்பான பாரிய நீர்த்தேக்கம் ஒன்றினை கிளிநொச்சியின் பூநகரிப் பிரதேசத்தில் அமைக்கலாம் என்ற



யோசனைகள் முன்வைக்கப்பட்டு இது தொடர்பான ஆய்வுகள் நீர்ப்பாசனத் திணைகளத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட ஒரே நேர் கோட்டில் அமைந்துள்ள மாழாப்புக்குளம், கொக்குடையான் குளம், உள்ளிட்ட சிறு குளங்களை உள்ளடக்கி இக் குளத்தினை அமைக்கலாம் என்றும் திட்டங்கள் வரையப்பட்டுள்ளன.

இலங்கையில் சுமார் 103ற்கும் மேற்பட்ட ஆற்றுப் படுக்கைகள் காணப்படுகின்றன. இதில் கனகராயன் ஆறு, மண்டைக் கல்லாறு, அக்கராயன் ஆறு, உள்ளிட்ட ஏழு ஆறுகள் கிளிநொச்சி மாவட்டத்தின் கரையோரங்களில் சங்கமிக்கின்றன.

அக்கராயன் ஆற்றுக்கும் மண்டைக்கல்லாற்றிக்கும் இடைப்பட்ட பகுதியில் இக்குளம் அமைவதனால் இவ்விரு ஆறுகளின் ஊடாக வருகின்ற நீர் மற்றும் இக்குளத்தின் மேற் பகுதிகளில் உள்ள பிரதேசங்களில் இருந்து வருகின்ற நீர் என்பவற்றால் இக் குளத்தின் நீர்வரத்து அதிகமாக இருக்கும். இதன் மூலம் பூநகரியில் உள்ள கிட்டத்தட்ட மூவாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் இரு போகங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியும் என்பதுடன், இக்குளம் ஆழம் குறைந்த குளமாக இருப்பினும் அதிகளவான நீரேந்துப் பிரதேசமாகவும் அமையலாம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்ற இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், அக்கராயன்குளம், என்பவற்றை புனரமைப்பது அல்லது குளத்தின் அணைக்கட்டுக்களை உயர்த்தி நீர்க் கொள்ளளவை அதிகரித்தல், என்பதற்கு அப்பால் இவ்வாறு புதிய குளம் ஒன்றை அமைப்பது என்பது மிகக் கடினமான விடயமாகும்.

அதாவது பூநகரியில் இக்குளம் அமையுமானால் இங்குள்ள வளங்கள் சிறப்படையும்.

இன்று உவர் நீர்க் கிணறுகளாக இருக்கின்ற கிணறுகள் நன்னீராக மாற்றடையும். கணிசமான நிலங்களில் இரண்டு போகங்கள் பயிர்செய்ய முடியும். நல்ல மண் வளம் இருக்கின்ற போதும் நீர் வளம் இல்லாதது பாரிய பிரச்சினையாகும்.

பூநகரி மண்ணானது மனித சுவாத்தியத்திற்கு சிறந்த மண்ணாக இருக்கின்ற போதும் இங்கு தண்ணீர் ஒரு பிரச்சினையாக அமைந்துள்ளது. இக் குளம் அமையப்பெறுமானால் பூநகரியின் தலைவிதியே மாற்றம் பெறும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு ஒரு குளம் அமையவேண்டும்.

இதன் மூலம் இப் பிரதேசங்கள் வளமான பிரதேசங்களாக மாறும்.

இங்கே காணப்படுகின்ற வளமான நிலங்களில் பயிர்செய்து வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியும் என்ற நம்பிக்கை துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் உள்ளது.

வரலாற்றுத் தொன்மையும் பூர்வீகச் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட பூநகரிப் பிரதேசத்தின் வளத்தை பெருக்கும் வகையில் இக்குளம் அமையப் பெற வேண்டும் என்பது எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.

சு. பாஸ்கரன்
பரந்தன் குறூப் நிருபர்

# மங்கையர் முற்றம்

சுகந்தி

# மார்பகப் புற்றுநோய்

## விழிப்புணர்வால் வெல்வோம்!



பெண்களைத் தாக்கும் புற்றுநோய்களில் மார்பகப் புற்றுநோய் முதன்மையானது. பெண்களிடையே புற்றுநோயால் ஏற்படும் மரணங்களில் மார்பகப் புற்றுநோயால் ஏற்படும் மரணங்கள் கணிசமானவை. காரணம், பெண்களின் தயக்கம். அந்தரங்கப் பிரச்சினைகளை வெளியே சொல்வதில் பெண்களுக்கு எப்போதும் தயக்கம் இருக்கும். ஆனால், இந்தத் தயக்கம் உயிருக்கே ஆபத்தானதாக முடியும் என்பதைப் பலரும் அறிவதில்லை. அதனால்தான் பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக அக்டோபர் மாதத்தை மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்திருக்கிறது. இந்த மாதத்தை 'பிங்க் மாதம்' என்றும் அழைக்கிறார்கள்.

எல்லாப் புற்றுநோயும் மரணத்தை ஏற்படுத்துவதில்லை. மார்பகப் புற்றுநோயை தொடக்க நிலையிலேயே கண்டறிந்துவிட்டால், அதிலிருந்து முழுமையாக மீண்டுவிடலாம்.

மார்பகப் புற்றுநோயைச் சுயபரிசோதனை மூலம் நாமே எளிதில் கண்டறியலாம். 18 முதல் 30 வயதுக்குட்பட்ட பெண்கள் மாதம் ஒரு முறையாவது மார்பக சுயபரிசோதனை செய்துகொள்வது அவசியம். முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மார்பக சுயபரிசோதனையுடன், தேவை எற்பட்டால் மருத்துவமனைக்குச் சென்று முறையான பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கு குறிப்பிட்ட காரணம் எதையும் வரையறுக்க முடியாது. இளம் வயதில் பூப்படைந்தவர்கள், 50 வயதுக்கும் மேல் மாதவிடாய்ச் சுழற்சி நடைபெறுவது, 30 வயதுக்குப் பிறகு முதல் குழந்தை பிறப்பது, இரத்த உறவுகளில் யாருக்காவது மார்பகப் புற்றுநோய் இருப்பது, உணவுப் பழக்கம், உடல் பருமன், உடலில் கொழுப்பு அதிகரித்தல், உடலுழைப்பும் உடற்பயிற்சியும் இல்லாதிருப்பவர்கள் போன்றோருக்கு மார்பகப் புற்றுநோய் வருவதற்கான சாத்தியம் அதிகம். ஆனால், இவர்களுக்குப் புற்றுநோய் வந்தே தீரும் என்பதில்லை. மரபணுக்களில் ஏற்படும் மாற்றங்களாலும் புற்றுநோய் வரக்கூடும்.

### அறிகுறிகள்

மார்பில் வலியில்லாத அல்லது வலியுடன் கூடிய கட்டி, மார்பகம் தடிப்பது, மார்புக் காம்பிலிருந்து இரத்தம் அல்லது திரவம் கசிதல், மார்புக் காம்பு உள்ளிழுத்துக் கொள்ளுதல், அக்குளில் வீக்கம் போன்றவை மார்பகப் புற்றுநோய்க்கான அறிகுறிகளாகவும் இருக்கலாம். அதேநேரம், மார்பில் வலி ஏற்பட்டாலே அது மார்பகப் புற்றுநோயாக இருக்க வேண்டும் என்பதில்லை. சிலநேரம் மார்பகப் புற்றுக்கட்டி தொடக்க நிலையில் மட்டுமல்ல, முற்றிய நிலையிலும் வலிக்காது. அது நெஞ்சுடன் ஒட்டிச் சுருங்கும் நிலையில்தான் வலிக்கும். இப்படி நோயை முற்றவிடுவது ஆபத்தானது. கையால் லேசாக அழுத்தினாலே மார்பில் கட்டியிருப்பதைக் கண்டறியலாம். மார்பின் வடிவம், நிறம் போன்றவற்றில் சிறு மாற்றம் ஏற்பட்டாலும் மருத்துவரைச் சந்திக்க வேண்டும்.

சிலர், தாய்ப்பால் கொடுத்தால் மார்பகப் புற்றுநோய் வராது என நினைப்பார்கள். அது முற்றிலும் உண்மையல்ல. தாய்ப்பால் கொடுத்தால் மார்பகப் புற்றுநோய் வருவதற்கான சாத்தியம் குறைவுதானே தவிர, வராது என்று சொல்வதற்கில்லை. அதேநேரம், தாய்ப்பால் கொடுக்காவிட்டால் மார்பகப் புற்றுநோய் ஏற்படுவது அதிகரிக்கக்கூடும்.

### சிகிச்சை முறைகள்

மார்பகப் புற்றுநோய் வந்தால் மார்பை அகற்றிவிட வேண்டும் என்பதில்லை. சிலருக்குக் கட்டியை மட்டும் நீக்குவதன் மூலம் அது உடலின் மற்ற பாகங்களுக்குப் பரவுவதைத் தடுக்க முடியும். அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்கச் சிகிச்சை போன்றவற்றின் மூலம் மார்பகப் புற்றுநோயைக் குணப்படுத்தலாம். அதனால், பெண்கள் மார்பக சுயபரிசோதனை செய்துகொள்வதுடன் எவ்விதத் தயக்கமும் இல்லாமல் மருத்துவர்களைச் சந்தித்து ஆலோசனை பெற வேண்டும்.

# Jump Suits

Ladies Fashion







# நோயற்ற சமையல்

## பூசணிக்காய் ஜூஸ்

**தேவையான பொருட்கள்**

பூசணிக்காய் சிறிய துண்டு
தேங்காய் சிறிது
கறிவேப்பிலை சிறிது
இஞ்சி சிறிய துண்டு
உப்பு தேவையான அளவு

**செய்முறை**

பூசணிக்காயை தோல் நீக்கி சிறிய துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். மிக்சியில் நறுக்கிய பூசணிக்காய், தேங்காய், கறிவேப்பிலை, இஞ்சி, உப்பு தண்ணீர் சேர்த்து அரைத்து வடிகட்டி பருகவும்.

**வெள்ளை பூசணிக்காயில் வைட்டமின் பி, சி, கல்சியம், இரும்புச்சத்து என பல்வேறு சத்துக்கள் நிறைந்துள்ளன. கல்சியம், இரும்பு சத்துக்கள் நிறைந்து இருப்பதால் எலும்பு வலுவடையும், உடல் ஆரோக்கியம் உயரும்.**





# தூக்கமின்மையை போக்கும் இயற்கை உணவுகள்

தூக்கமின்மை பிரச்சினைக்கு பல காரணங்கள் இருக்கின்றன. மன அழுத்தம், மனச் சோர்வு, செரிமான பிரச்சினை போன்றவையும் தூக்க சுழற்சி முறையை சிதைக்கக்கூடியவை. சிலவகை இயற்கை உணவுகள் தூக்கத்தைத் தூண்டும் தன்மை கொண்டவை.

தூங்க செல்வதற்கு முன்போ அல்லது பகல் வேளையிலோ சிறிதளவு பாதாம் சாப்பிட்டுவந்தால் தூக்கத்தை மேம்படுத்தும் என்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. தூக்கத்தை ஒழுங்குபடுத்தும் ஹார்மோனான 'மெலடோன்' மற்றும் தூக்கத்தை ஊக்குவிக்கும் கனிமமான 'மெக்னீசியம்' இதில் ஏராளம் இருக்கிறது. அவை நீண்ட நேரம் மற்றும் ஆழமான தூக்கத்திற்கு வழிவகை செய்யும். மேலும், மூளை மற்றும் நரம்புகளில் இனிமையான விளைவுகளை ஏற்படுத்தும் டிரிப்டோபன் அமினோ அமிலத்தின் செயற்பாட்டையும் மேம்படுத்தும். அதன் காரணமாக தூக்கம் தடைபடுவது தவிர்க்கப்படும்.

தூக்கமின்மை பிரச்சினைக்கு ஆளாகுபவர்கள், வாழைப்பழத்தையும் சாப்பிடலாம். அதிலும் டிரிப்டோபன் அமினோ அமிலம் நிறைந்திருக்கிறது. இது மூளைக்கு சமிக்ஞை கொடுத்து தூக்கத்தை வரவழைக்கும் வேதிப்பொருட்களை உருவாக்க உதவும்.

தூக்கத்தை ஊக்குவிக்கும் தன்மை பாலுக்கும் இருக்கிறது. வெறுமனே பாலை பருகாமல் அதில் சிறிதளவு மஞ்சள், குங்குமப்பூ கலந்து பருகினால் நன்றாக தூக்கம் வரும். அதிலும் டிரிப்டோபன் அமினோ அமிலம் நிறைந்திருக்கிறது. நடைப்பயிற்சி, யோகா செய்பவர்கள் பால் பருகி வந்தால் எந்த இடையூறுமின்றி நன்றாக தூங்கலாம்.

இரவு குறைவாக சாப்பிடுவதே நல்லது. ஓட்ஸ் உணவை சாப்பிட்டுவந்தால் ஆரோக்கியம் மேம்படுவதோடு ஆழ்ந்த தூக்கத்தையும் தூண்டும். அதில் மன அழுத்தத்தை குறைக்கும் விட்டமின் பி6 சத்தும் நிறைந்திருக்கிறது.



# மன அழுத்தத்தை குறைக்கும்

## ருத்ர முத்திரை





யோக முத்திரைகளில் மிகவும் சக்தி வாய்ந்தது ருத்ர முத்திரை. வயதானவர்களுக்கு இம்முத்திரை ஒரு வரம்.

### ருத்ர முத்திரை செய்யும் முறை

கட்டை விரல், ஆள்காட்டி விரல், மோதிர விரல்களின் நுனியைச் சேர்த்து வைக்க வேண்டும். நடுவிரலும் சுண்டுவிரலும் நீட்டி இருக்க வேண்டும். நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து, கால்களைத் தரையில் பதித்தோ, விரிப்பின் மீது சப்பளங்கால் போட்டு நிமிர்ந்த நிலையில் அமர்ந்தோ, 10 முதல் 40 நிமிடங்கள் வரை இம் முத்திரையைச் செய்யலாம்.

சோர்வு, களைப்பு, தலைசுற்றல் உணர்வு, வயோதிபத்தில் ஏற்படும் கிறக்கம் ஆகியவற்றைச் சரிசெய்யும். உடலுக்கு ஆற்றலைத் தரும்.


தலைக்கு இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தும். நினைவாற்றல், கவனம் அதிகரிக்கும். இம் முத்திரையை மாணவர்களை அவசியம் செய்யச் சொல்லலாம்.

பார்வைத்திறனைக் கூர்மைப்படுத்தும். இரத்த அழுத்தப் பிரச்சினை சுவாசப் பிரச்சினைகளைச் சீர்செய்யும். சிலர், ஒரு பக்கமாக சாய்ந்து நடப்பர், வலது பக்கம் மட்டும் நன்றாகக் கை வரும், இடது பக்கம் வராது. இதுபோன்ற சமநிலைத் தன்மை இல்லாதவர்களுக்கு இந்த முத்திரை நல்ல பலனைத் தரும்.

மன அழுத்தத்தால் ஏற்படும் இறுக்கம், கழுத்து, முதுகு, இடுப்பு மற்றும் மார்பக வலி ஆகியவற்றை இந்த முத்திரை குறைக்கும். இரத்த நாளங்களில் உள்ள அடைப்புகள், கட்டிகள் ஆகியவற்றைச் சரிசெய்யும்.

காலில் உள்ள இரத்த நாளங்கள் சுருண்டுகொள்ளும் வெரிகோஸ் வெயின் பிரச்சினைக்கான வாய்ப்பைக் குறைக்கும். வயோதிபத்தில் ஏற்படும் நினைவாற்றல் பாதிப்பு நோய்களான நடுக்குவாதம் (Parkinson), அல்சைமர் பாதிப்பு உள்ளவர்கள் மூன்று மாதங்கள் தொடர்ந்து செய்துவர முன்னேற்றம் காணலாம்.





# கிழக்கின் குரல்



## சமஷ்டிக்கு ஒப்பான ஆட்சிமுறை இருந்தால் போராட்ட குழப்ப நிலைகளை தடுக்க முடியும்

மண்டூர் குறூப் நிருபர்

இரு மொழி பேசும் பல்லின மதம் வாழும் இந்நாட்டில் சமஷ்டிக்கு ஒப்பான அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட ஆட்சி முறை உருவாகுமாக இருந்தால் எதிர்காலத்தில் போராட்ட குழப்ப நிலைகள் ஏற்படாமல் இருப்பதை தடுக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்லின மத மொழி பேசுகின்ற உலக நாடுகளில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு சமஷ்டிக்கு ஒப்பான ஆட்சி நடைபெறும் நாடுகளில் குழப்பங்கள், பிரச்சினைகள் இல்லாமல் இருக்கிறது.



13ஆவது திருத்தம் இரு நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்டது. இலங்கையரசு நினைத்தது போல அகற்றிவிட முடியாது.

எங்களைப் பொறுத்தமட்டில் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு இந்தியாவின் ஆதரவு தேவையினை வேண்டி நிற்பதோடு, இந்தியா எக்காரணம் கொண்டும் இலங்கை தமிழ் மக்களை கைவிடாது என்று நம்பியிருக்கின்றோம்.

சில வேளை புதிய அரசியலமைப்பு உருவாகும்போது 13 ஆவது திருத்தச் சட்டம் அதாவது மாகாண சபைகளுக்கு ஒப்பான ஒரு தீர்வு வரும்போது அதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் இந்திய அனுசரணையுடன் அதை மாற்றியமைக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படலாம்.

13 ஆவது திருத்தச் சட்டம் இருக்கும் போதே காணி அதிகாரங்கள் கொடுக்கப்படாமல் வடகிழக்கில் சிங்கள குடியேற்றங்கள் தாராளமாக இடம்பெற்று வருகிறது.

13 ஆவது திருத்தச்சட்டம் இல்லாமல் போனால் சட்டத்தை மீறாமல் சட்டரீதியாக சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தி வடகிழக்கில் தமிழ்மக்களை குறைப்பதற்கான முயற்சிகளை நீண்ட காலமாக எடுத்து வருகின்றார்கள் என்றார்.

## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் எந்த பிரிவும் மூடப்படவில்லை

### டாக்டர் திருமதி கே.கலாரஞ்சனி

புதிய காத்தான்குடி தினரகன் நிருபர்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் எந்தவொரு சிகிச்சைப் பிரிவும் மூடப்படவில்லையென மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் திருமதி கே.கலாரஞ்சனி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடமிருந்து என வெளியிட்டுள்ள அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,...

எமது வைத்தியசாலையில் கடமையாற்றும் கம்பஹா மாவட்டத்தை சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளது அவர் தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் செய்யப்பட்ட PCR பரிசோதனையின் போது கண்டறியப்பட்டுள்ளது.

இதன் மூலம் எமது வைத்தியசாலையில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று வரவும் வாய்ப்புக்கள் மிக குறைவாக உள்ள பொழுதும் மேலதிக கலந்துரையாடலின் பின்னர் அந்த பிரிவில் வேலை செய்யும் உத்தியோகத்தர்களுக்கு PCR பரிசோதனை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே எமது வைத்தியசாலையில் எந்த ஒரு சிகிச்சை பிரிவும் மூடப்படவில்லை என்பதோடு எமது வைத்தியசாலையின் நடவடிக்கைகள் வழமைபோலவே முன்னெடுக்கப்படுகின்றன.

இது சம்பந்தமான நிலைமைகள் மிக கவனமாக அவதானிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்கப்படும். எனவே சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை பரப்புவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டு–அம்பாறையில் கடும் வெப்பத்தோடு அனல்காற்று

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடும் வெப்பத்துடன் கூடிய அனல்காற்று வீசுகின்றது. இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதோடு தோல் நோய்களின் தாக்கத்திற்கும் உள்ளாகி வருகின்றனர்.

தற்போது நிலவும் கடும் வெயிலுடன் கூடிய காலநிலையினால் சிறுவர்கள், முதியோர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், நோயாளிகள் பல்வேறு உடல் உபாதைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். இங்குள்ள வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளில் வெப்பத்தினால் ஏற்படும் தோல் நோய்களுக்கு மக்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். கடும் உஷ்ணத்தால் தலையிடி, வயிற்றோட்டம், தொண்டைநோவு, மஞ்சள் காமாலை, காய்ச்சல், தோல்நோய், கண்நோய் என்பவற்றினால் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

## அம்பாறை மாவட்டத்தில் பலத்த காற்றால் கடற்றொழில் பாதிப்பு

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் பலத்த காற்று வீசுவதனால் இம்மாவட்டத்தின் மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் மாலை வேளையில் பலத்த காற்று வீசி வருகின்றது. பிரதான வீதியோரத்தில் உள்ள பாரிய மரங்களின் கிளைகள் முறிந்து வீழ்ந்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பிரதான வீதியோரத்தில் உள்ள பாரிய விளம்பர கம்பங்கள், வர்த்தக நிலையங்களின் பெயர்ப்பலகைகள் உள்ளிட்ட வீட்டுக் கூரைகளும் காற்றின் தாக்கத்தினால் சிதைவடைந்து வருகின்றன.

கடற்றொழிலை நம்பி தமது வாழ்வாதாரத்தினைக் நகர்த்திச் செல்லும் மீனவர்கள் கடந்த சில தினங்களாக தொழில் வாய்ப்பற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடற் பிராந்தியம் கொந்தளிப்புடன் காணப்படுவதனால் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, திருக்கோவில், பொத்துவில், நிந்தவூர், சாய்ந்தமருது, காரைதீவு, கல்முனை மற்றும் மருதமுனை பிரதேசங்களில் உள்ள மீனவர்கள் தமது கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதனை அவதானிக்க முடிந்தது.

அம்பாறை மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் மாலை வேளைகளில் வீசுகின்ற பலத்த காற்றின் காரணமாக சில பிரதேசங்களில் கடல் அலை சுமார் பத்தடிக்கு மேல் உயர்வதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.





கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து அக்கரைப்பற்று பிரதேச சபை மற்றும் மாநகர சபை, மக்களையும் பாடசாலை மாணவர்களையும் பாதுகாக்கும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (படங்கள் அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

## சிறுமி துஷ்பிரயோகம்; வயோதிபருக்கு 20 வருட கடூழிய சிறை தண்டனை

றொட்டவெவ குறூப் நிருபர்

கிண்ணியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சூரங்கள் பகுதியில் வீட்டின் கூரையை கழற்றி 16 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த வயோதிபருக்கு 20 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று (14) இத்தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

கிண்ணியா சூரங்கள் பகுதியில் 2012 ஆம் ஆண்டு ஏழாம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2012 எட்டாம் மாதம் 21ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சிறுமி உறங்கிக் கொண்டிருந்த வேளையில் அவரது வீட்டின் கூரையை கழற்றி வீட்டுக்குள் இறங்கி சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்து அவரை கர்ப்பமாக்கி அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது என்பதை குறிக்கப்பட்ட இரத்த பரிசோதனை DNA செய்தபோது பிறந்த பெண் குழந்தையின் தந்தையாக 99.999 வீதம் எதிரியாகிய சேகு மதார் தையூப் என DNA அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை இரசாயன பகுப்பாய்வாளர் நீதிமன்றில் ஆஜராகி நேரடியாக சாட்சியம் அளித்து எதிரிதான் நியதி சட்ட கற்பழிப்பு குற்றத்திற்கு பிறந்த குழந்தைக்கு 99.999 வீதம் தந்தை என உறுதிப்படுத்தி சாட்சியமளித்துள்ளார்.

இந்நிலையில் 16 வயதுக்கு குறைந்த வயது சிறுமி நீதிமன்றில் சாட்சியமளித்த போது, எதிரி மன்றில் ஆஜராகி இருந்தார். அதன் பின்னர் தலைமறைவாகி விட்டார். 13 வயது சிறுமியை தாயாக்கிய அந்த சிறுமிக்கு ஒரு குழந்தை பெறுவதற்கு காரணமாக இருந்த எதிரிக்கு சட்ட புத்தகத்தில் உள்ள அதிகூடிய தண்டனையை வழங்குவது பொருத்தமானது என மன்று தீர்ப்பளிக்கின்றது.

2019ஆம் ஆண்டு 8ம் மாதம் எட்டாம் திகதி 22 ஆம் இலக்க 1995 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட தண்டனைச் சட்டத்தின் கோவை பிரிவு 364 (02) உப பிரிவு 16 வயதுக்கு குறைந்த பெண் பிள்ளையை நியதிச்சட்ட கற்பழிப்பு புரிந்ததாக 2019ஆம் ஆண்டு எட்டாம் மாதம் எட்டாம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் குற்றப் பகர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் குறித்த எதிரிக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவருக்கு எதிராக திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்று இன்றைய தினம் இக்குற்றவாளி என தீர்ப்பு பகிரங்கமாக திறந்த நீதிமன்றில் வாசித்துக் காட்டப்பட்டது.

இருந்தபோதிலும் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றத்திற்காக குற்றவாளி என குற்றம் சாட்டப்பட்ட குறித்த நபர் கடந்த சில வழக்கு தவணைகளுக்கு தொடர்ச்சியாக சமுகமளிக்காமையால் எதிரி இன்றி வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டு நேற்று குற்றத்திற்கான தீர்ப்பு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் திறந்த நீதிமன்றில் வாசித்துக் காட்டப்பட்டது.


குறித்த எதிரி நீதிமன்றத்திற்கு நேற்று சமுகமளிக்காதமையினால் அவருக்கு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அந்த குற்றவாளிக்கு எதிரான திறந்த பிடியாணை பிரதி பொலிஸ் மாஅதிபர் கிழக்கு மாகாணம், சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர், உதவிப் பொலிஸ் மாஅதிபர் திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பொறுப்பதிகாரி,

மற்றும் கட்டுப்பாட்டாளர், குடிவரவு குடியகல்வு திணைக்களம் கொழும்பு ஆகியோருக்கு பிடியாணை பிரதிகளை உடனடியாக அனுப்பி வைக்குமாறும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார். இதேவேளை குறித்த குற்றவாளிக்கு 20 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 1200000/= நஷ்ட ஈடாக வழங்குமாறும் அதனை வழங்காவிட்டால் 15 வருட கால கடூழிய சிறைத் தண்டனை வழங்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அத்துடன் அரச செலவாக 3 குற்றச்சாட்டிற்கும் தலா 25,000 ரூபாய் வீதம் 75,000 ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் 18 மாத கால கடூழிய சிறைத் தண்டனை வழங்குமாறும் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளையிட்டார்.

## பொத்துவில் ஏத்தம் கிராமத்தில் யானைகள் அட்டகாசம்





திருக்கோவில் தினகரன் நிருபர்

அம்பாறை பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இன்ஸ்பெக்டர் ஏத்தம் கிராமத்துக்குள் நேற்று முன்தினம் இரவு காட்டு யானைகள் அட்டகாசம் புரிந்துள்ளன. காட்டு யானைகள் நேற்று முன்தினம் இரவு கிராமத்துக்குள் நுழைந்து வீதி வழியாக சென்று சுமார் ஆறுக்கு மேற்பட்ட வீட்டு மதிகளை உடைத்து தென்னைகள் மற்றும் வாழைகளை நாசம் செய்துள்ளன

பொத்துவில் பிரதேசத்தில் ஏத்தம், செங்காமம், றோட்டை, ஊரணி கோமாரி ஆகிய காட்டை அண்மித்த கிராமங்களில் இரவு வேளைகளில் காட்டு யானைகள் தொடர்ச்சியாக படையெடுத்து வாழைகள், தென்னை மரங்கள் மதில்கள் மற்றும் வீடுகள் என்பவற்றை சேதமாக்கி வருவதாகவும் தாம் உயிர் அச்சுறுத்தலுடன் இருப்பதாக கிராம மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இவ் ஏத்தம் கிராமத்தின் மேற்குப் பக்க எல்லையில் யானை வேலி அமைக்கப்பட்டு இருந்த போதும் முறையான பராமரிப்பு இல்லாத நிலையில் மின்சார வேலியின் கட்டைகள் மற்றும் கம்பிகள் இல்லாது சேதமடைந்து இருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சுகாதார விதிமுறைகள் கடுமையாக்கம்

அம்பாறை சுழற்சி நிருபர்

கொவிட்19 வைரஸ் தொற்றின் தாக்கத்திலிருந்து பொது மக்களை பாதுகாப்பதற்கான சுகாதார நடவடிக்கைகளை அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கடுமையாக அமுல்படுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேசத்திற்கான கொரோன தடுப்பு செயலணிக் கூட்டம் அட்டாளைச்சேனை பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற போதே மேற்படி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் நடைபெற்றது. பொது மக்களை, கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான பல யோசனைளும், கருத்துக்களும் இதன் போது முன்வைக்கப்பட்டன. முகக்கவசம் அணிதல், தனிநபர் இடைவெளியை பேணுதல், வெளி மாவட்டங்கள், வெளிநாடுகளிலிருந்து வருவோர் பற்றிய தகவல்களை உடன் அறிந்து அவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்தல், அலுவலகங்கள், பொது இடங்கள், வணக்கஸ்தலங்களில் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடவடிக்கைகளை வலியுறுத்தல் மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வுகளை தொடர்ந்தும் முன்னெடுத்தல் தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் இதன் போது மேற்கொள்ளப்பட்டன.



மட்டக்களப்பு – கொம்மாதுறை ஸ்ரீதேவி அம்பாள் ஆலய வருடாந்த திருச்சடங்கு ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.பா.மணிவண்ணன் குருக்கள் தலைமையில் மிகவும் சிறப்பானமுறையில் இடம்பெற்ற போது. (படம்: பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

## கல்முனை வடக்கில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.85,000 வழங்கல்

பெரியநீலாவணை விசேட நிருபர்

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட அல்லது செயலிழந்த நபர்களுக்கு ரூபா 5000 கொடுப்பனவு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று பிரதேச செயலாளர் ரி. ஜெ.அதிசயராஜ் வழிகாட்டலின் கீழ் நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஜீவராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சமூக சேவைகள் திணைக்களத்தினால் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட 17 நோயாளர்களுக்கு தலா 5,000 ரூபா வீதம் 85,000 ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த நிதியானது பாதிக்கப்பட்ட நோயாளர் மரணிக்கும் வரை வழங்கப்படவுள்ளது. அரசாங்கத்தினால் முதல் தடவையாக இந்த கொடுப்பனவு தற்போது வழங்கப்படுகின்றன.

இந்த நிகழ்வில் சமூகசேவைகள் உத்தியோகத்தர்களான எம்.ஐ.எம். முர்ஸித், கே. சிவகுமார், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எல்.சபாஸ்கரன் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கின் குரல்



## மட்டு.போதனா வைத்தியசாலையில்

# எவருக்கும் கொரோனா தொற்றில்லை தனிமைப்படுத்தல் அவசியமில்லை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் கே.கலாரஞ்சினி தெரிவித்தார்.

நேற்று மாலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமைபுரிந்து வந்த கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு கம்பஹா மாவட்டத்தில் வைத்து கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவர் கடமைபுரிந்த வைத்தியசாலை பிரிவு மூடப்பட்டதாக ஊடகங்களில் வந்த செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை எனவும் குறிப்பிட்டார்.

(13) செவ்வாய்க்கிழமை குறித்த தாதியருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து அவரினால் இவ்வைத்தியசாலைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வைத்தியசாலை கொவிட் செயலணிக் குழுமம், தேசிய தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவின் நிபுணர்களுடன் ஆலோசித்தபோது நோய்த் தொற்றுக்கான ஆபத்து மதிப்பீடு சாத்தியம் மிகக்குறைவாக இருந்த போதிலும் மக்கள் நலன்கருதி குறித்த தாதிய உத்தியோகத்தர் கடமைபுரிந்த பிரிவில் பணியாற்றும், பணியாற்றச் செல்லும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் PCR பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து இவர்கள் எவருக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லையென உத்தியோக பூர்வ பரிசோதனை முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும் எந்த ஒரு வைத்தியசாலை உத்தியோகத்தரும் தனிமைப்படுத்தப்படவுமில்லை எனவும், மக்கள் வதந்திகளை நம்பி அச்சங்கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அனைத்து வைத்திய சேவைகளும் எவ்வித இடையூறுமின்றி தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும், பொதுமக்கள் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களை தொடர்ச்சியாகப் பின்பற்றி நடப்பதுடன் நோயாளர்களைப் பார்வையிட வைத்தியசாலைக்கு வருபவர்கள் மட்டுப்படுத்திக் கொள்ளுமாறும், அத்தியாவசிய மருத்துவத் தேவைகளுக்கு தமது வதிவிடத்திற்கு அண்மையிலுள்ள வைத்திய சாலைகளை நாடுமாறும் கேட்டுக் கொண்டார்.



இது தவிர மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தொடர்பாக தகவல்கள் பணிப்பாளரான என்னால் வெளியிடப்படாமல் வேறு நபர்களாலோ அல்லது ஊடகங்களாலோ அல்லது வேறு வழிகளினாலோ வெளியிடப்பட்ட செய்திகளுக்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் பொறுப்புக்கூற முடியாது என அவர் இதன் போது மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு எல்லைப்பகுதிகளில் அத்துமீறி சேனைச்செய்கை

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட எல்லைப்பகுதியில் அமைந்துள்ள மயிலத்தமடு, மாதவணை கிராம சேவகர் பிரிவுகளில் அம்பாறை மற்றும் பொலன்னறுவ மாவட்ட விவசாயிகள் சுமார் மூவாயிரம் ஏக்கர் காணியில் அத்துமீறி குடியேறி காடுகளை வெட்டி சேனைப் பயிர்ச் செய்கைக்குத் தயாராகி வருகின்றனர்.

இதனால் பெரும்போக நெற்செய்கையின் போது இம்மாவட்டத்தின் செங்கலடி, கிரான், பட்டிப்பளை, வெள்ளாவெளி போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட சுமார் ஆயிரம் கால்நடை வளர்ப்பாளர்களின் இரண்டு இலட்சம் கால்நடைகளை பாரம்பரியமாகக் கொண்டு செல்லும் நடவடிக்கை தடைப்பட்டுள்ளது.

இக்கால்நடை வளர்ப்பாளர்களின் முறைப்படுகளையடுத்து மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையிலான உயர்மட்டக்குழு களவிஜயம் ஒன்றை (12) மாந்திரி ஆறு பிரதேசத்திலிருந்து மயிலத்தமடு மற்றும் மாதவணை பிரதேசங்களுக்கு மேற்கொண்டது.

இதன்போது சேனைச் செய்கைக்காக காடுகள் வெட்டப்பட்டுள்ள பகுதிகளையும், அத்துமீறி குடியேறியுள்ள இடங்களையும் பார்வையிட்டதுடன் இச்செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்கள், கால்நடை பண்ணையாளர்களையும் சந்தித்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்ட விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

சேனைச் செய்கைக்கான காணி தமக்கு இல்லாத காரணத்தினாலேயே தாம் இங்கு வந்து காணிகளைப் பிடிப்பதாகத் தெரிவித்தனர். இவர்கள் சுமார் 1000 விவசாயிகள் 3000 ஏக்கர் காணியில் காடுகளை வெட்டி சேனைச் செய்கைக்கு தயார்படுத்தியுள்ளனர். எனினும் இவர்கள் அத்துமீறி தயார்படுத்தியுள்ள காணிக்கு சமமானதும் சேனைச் செய்கைக்கு உகந்த காணிகள் அம்பாறை எல்லைப் பகுதியில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த அத்து மீறல் செயற்பாட்டினால் இம்மாவட்டத்தின் பெரும்போகச் செய்கையின் போது பாரம்பரியமாக கால்நடைகளை கொண்டு செல்லும் மேய்ச்சல் தரைகள் அபகரிக்கப்படுகின்றன. இதனால் இம்மாவட்டத்தில் செய்கை பண்ணப்படும் ஒரு இலட்சத்து 56 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்படுகின்றது.

இதனைக் கருத்திக் கொண்டு இவ்வத்துமீறல் காரர்களின் செயற்பாடுகளை உடனடியாக தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களை மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா கேட்டுக் கொண்டார்.



மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பகுதியான வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மண்டூர் கணேசபுரத்தில் பிரதான வீதியை சுமார் ஒரு கிலோ மீட்டருக்கு கொங்ரீட் வீதியாக அமைக்கும் புதிய வீதி அபிவிருத்தி திட்டம் நேற்று இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். படங்கள் மட்டக்களப்பு சுழற்சி நிருபர்

# அம்பாறை மாவட்ட உணவகங்களை பரிசோதனை செய்ய வேண்டுகோள்

**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**

அம்பாரை மாவட்டத்தில் இயங்கிவரும் உணவகங்கள் முறையான ஆரோக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது செயற்பட்டு வருவதனால் இலகுவாக தொற்றக்கூடிய கொரோனா வைரஸ் பரவ வாய்ப்புள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் பல பாகங்களிலும் கொரோனா வைரஸ் பரவிவரும் இச்சூழ்நிலையில் அம்பாரை மாவட்ட உணவகங்களில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

சில உணவகங்களின் முன்னால் கை கழுவுவதற்கான முன் ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தாலும், உணவுகளை கையாளும் ஊழியர்கள் எவ்வித தடுப்பு முறைகளையும் கடைப்பிடிக்கவில்லை. குறிப்பாக முகக் கவசம் போடாமலும், கைகளை அடிக்கடி சுத்தப்படுத்தாமலும் உணவுகளை பொதுமக்களுக்கு வழங்குவதனை அனைத்து உணவகங்களிலும் காணக்கூடியதாகவுள்ளது.

சுகாதார அறிவுறுத்தல்கள் பல்வேறுபட்ட முறைகளிலும் வழங்கப்பட்டுவரும் வேளையிலும் குறிப்பாக உணவு உண்ணக்கூடிய வர்த்தக நிலையங்களை நடாத்தி வரும் நிறுவன உரிமையாளர்கள் எவ்விதத்திலும் அறிவுறுத்தல்களை கடைப்பிடித்ததாக தெரியவில்லை.

எனவே பொதுமக்களின் ஆரோக்கியத்தை கருத்திற் கொண்டு சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அம்பாரை மாவட்ட உணவகங்களுக்கு விஜயம் மேற்கொண்டு, பரிசோதனை செய்து அவ்வாறு சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் நிறுவன உரிமையாளர்களை சட்டத்தின்முன் நிறுத்தி நடவடிக்கை எடுக்குமாறு அம்பாரை மாவட்டத்தில் வாழும் பொதுமக்கள் சுகாதார அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் தாக்குதல்;

# சிலோன் மீடியா போரம் கண்டனம்

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

முல்லைத்தீவு பகுதியில் சட்ட விரோத மரக்கடத்தல் தொடர்பான செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு, அவர்களது ஊடக உபகரணங்கள் பறிக்கப்பட்டதை வன்மையாக கண்டித்து சிலோன் மீடியா போரம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதேவேளை சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர்களைத் தாக்கிய கும்பலை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி ஊடகவியலாளருக்கான நியாயத்தை பெற்றுக்கொடுக்குமாறு பொலிஸ் மாஅதிபருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ. மஜீத் மற்றும் பொதுச் செயலாளர் ஏ.எஸ். எம்.முஜாஹித் ஆகியோர் ஒப்பமிட்டு குறித்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதானது,

நாட்டில் நடக்கும் குற்றச் செயல்கள், அபிவிருத்தி மற்றும் இன்னோரன்ன செய்திகளை சமூகத்திற்கும் மக்களுக்கும் வெளிக்கொண்டு வர வேண்டிய பொறுப்பு வாய்ந்த பணியை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஊடகவியலாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

உண்மைகளை வெளியே கொண்டு வருவதற்காக அர்ப்பணிப்புடன் உயிராபத்தைக் கூட பொருட்படுத்தாது செயற்பட்ட ஊடகவியலாளர்களான தவசீலன் மற்றும் குமணன் ஆகியோரின் தைரியத்தை பாராட்டுவதோடு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு அவமதிக்கப்படுகின்ற இச்செயற்பாடுகளை தொடர விட முடியாது.

ஊடகவியலாளர்கள் மீது இவ்வாறான கோழைத்தனமான தாக்குதல் மேற்கொள்வதானது ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்கும் செயலாகும்.

இவ்வாறான தாக்குதல்களில் ஈடுபடுவோரை எதுவித தயவு தாட்சனியம் அந்தஸ்து பாராது சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய தார்மீக பொறுப்பு அரசாங்கத்திடம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு மாவட்ட

# புதிய அரசாங்க அதிபராக கே.கருணாகரன் நியமனம்

**பெரியபோதீவு தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்திற்கான புதிய அரசாங்க அதிபராக இலங்கை நிருவாக சேவை விசேட தரத்தை சேர்ந்தவரும் , தற்போதைய கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சின் செயலாளராக கடமையாற்றும் கே. கருணாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் அதற்கான அமைச்சரவை நியமன கடிதத்தினை அவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

தற்போதைய அரச அதிபராக கடமையாற்றும் திருமதி. கலாமதி பத்மராஜா பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சிற்கு உடனடியாக அமுலாகும் வரையில் இணைக்கப்பட்டுள்ளார்.



சவளக்கடை பொலிஸ் நிலையத்தினால் சிறுவர் தினத்தை முன்னிட்டு அண்ணமலை சன்முகா பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றம்சீன் பக்கீர் தலைமையில் வழங்கப்பட்ட போது. படம்: சவளக்கடை குறூப் நிருபர்

# கிண்ணியா நடுஊற்று கிராமிய வைத்தியசாலையில் வைத்தியர் இல்லை

**திருமலை மாவட்ட விசேட நிருபர்**

கிண்ணியா நடுஊற்று கிராமிய வைத்தியசாலையில் வைத்தியர் இன்மையால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இங்கு கடமையாற்றி வந்த வைத்தியர் கடந்த 03 வாரங்களுக்கு முன்பிருந்து பிரசவ லீவில் சென்றுள்ளார்.

இதனால் சுங்கான்குழி, கல்லரப்பு, குரங்கு பாஞ்சான், நடுஊற்று, குட்டியாகுளம் போன்ற கிராம மக்கள் மருந்து எடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக மாகாண சுகாதார வைத்திய அதிகாரியோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, உரிய அதிகாரிகள் பதில் வைத்தியர் ஒருவரை இவ்வைத்தியசாலைக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# முதலைக்குடா, மகிழடித்தீவில் இறால், மீன் வளர்ப்புத் திட்டங்கள்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு பட்டிப்பளைப் பிரதேச செயலாளர் பிரிவில் இறால் மற்றும் மீன் வளர்ப்பு திட்டங்களை அரச காணியில் ஆரம்பிப்பது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் செவ்வாய்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் இறால் செய்கை பண்ணப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட இப்பகுதியானது இறால் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பிற்கு உகந்த இடம் என ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபையினால் (நெக்டா) ஏற்பாட்டில் முதலைக்குடா மற்றும் மகிழடித்தீவிலுள்ள சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டத்தினை மேற்கொள்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

கடந்த காலங்களில் இறால் வளர்ப்புத் திட்டத்தினை முறையாக மேற்கொள்ளாததால்அப்பிரதேசமக்களின் குடிநீர் மற்றும் விவசாய நிலங்கள் உவர்நிலை அடைந்துள்ளதாகவும்



விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் மற்றும் பொது அமைப்புக்கள் சார்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது நவீன முறையில் மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டத்தினூடாக சுற்றாடலுக்கும் மக்களுக்கும் பாதிப்புகள் ஏற்படாமலிருப்பதை உறுதி செய்து கொள்ளவும், அவ்வாறு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்ந்து கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பரிந்துரை செய்வதற்குமான விசேட நிபுணர்குழுவொன்று காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்ஜினி முகுந்தன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினது அறிக்கையின் பிரகாரம் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தீர்மாங்களை இவ்வுயர்மட்டக்குழு எடுக்கவுள்ளது.

# நகர்வலம்



பலலுவெள, நெல்லியாகம பிரதேச;

## மக்கள் எதிர்நோக்கும் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்

**ஹொரவபொத்தான விஷேட நிருபர்**

குடிநீர் வசதி இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்ற பலலுவெள, நெல்லியாகம பிரதேசங்களை சேர்ந்த 350 குடும்பங்களுக்கு விரைவில் குடிநீர் வசதியை பெற்றுத் தருவதாக அமைச்சர் எச்.எம். சந்திரசேன உறுதியளித்துள்ளார்.

இப்பிரதேச மக்கள் நீண்ட காலமாக குடிநீர் வசதி இன்றி பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மேலும் இப்பிரதேசத்தில் காணப்படும் கிணறுகளும் நீண்ட காலமாக வற்றியிருப்பதால் குழாய் கிணறுகள் மூலமே மக்கள் தமக்கு தேவையான குடிநீரை பெற்றுக்கொள்கின்றனர்.

எனினும் இக்குழாய் கிணறுகள் நீண்ட காலமாக திருத்தப்படாத நிலையில் காணப்படுவதால் அவை துருப்பிடித்து காணப்படுவதுடன் அதிலிருந்து பெறப்படும் நீரானது துர்நாற்றம் வீசுவதுடன் இந்நீரை வீட்டுவேலைகளுக்கு மாத்திரமே பயன்படுத்தக்கூடியதாகவுமுள்ளது. இக்கிராமங்களுக்கு அண்மைய கிராமமான கலாவெவைக்கு கலாவெள குளத்தின் மூலம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் பாரிய குடிநீர் திட்டம் மூலம் நீர் வழங்கப்படுவதுடன் கலாவெளயிலிருந்து சுமார் 30 கிலோமீற்றர் வரையுள்ள தம்புள்ளை, கெகிராவை, மரதன்கடவல ஆகிய பகுதிகளுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.இருந்தபோதிலும் கலாவெவயின் அண்மைய கிராமங்களான பலலுவெள, நெல்லியாகம பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்கப்படவில்லை. இது குறித்து பிரதேச மக்கள் காணி அமைச்சர் எச்.எம்.சந்திரசேனவிடம் முறையிட்டதை அடுத்து, நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கலாவெள பிரிவின் இரண்டாம் கட்ட வேலைத் திட்டத்தின் போது சிறிமாகம, மதவெச்சிய ஆகிய நகரங்களுக்கு குடிநீர் திட்டத்தை பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளதால் பலலுவெள, நெல்லியாகம கிராமங்கள் ஊடாக குழாய்களை பொருத்தி இக்கிராமங்களுக்கு நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் இதன்போது உறுதியளித்தார்.



ஹம்பாந்தோட்டையில்

## தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஆறு பேருக்கு கொரோனா

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து திஸ்ஸமகாராமை மற்றும் தங்காலை பிரதேச ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலில் ஈடுபட்டிருந்த ஆறு பேருக்கு 'கொவிட் 19' கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதன் பின்பு ஹம்பாந்தோட்டை பொதுவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் விசேட கொரோனா பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சுரங்க ஒபேசேகர தெரிவித்தார்.

டுபாயிலிருந்து வருகை தந்து மேற்படி ஹோட்டல்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நான்கு நபர்களும் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து வருகை தந்து தங்காலை ரெகவ பிரதேச ஹோட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நபர் ஒருவருமே கொரோனா தொற்றாளர் என இனங் காணப்பட்டுள்ளதோடு அவரோடு ஒரே அறையில் தங்கியிருந்த ஒருவருமாக மொத்தம் ஆறு பேர் ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இவர்களோடு மொத்தம் 101 பேர் தற்பொழுது ஹம்பாந்தோட்டைபொதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக விசேட கொரோனா பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சுரங்க ஒபேசேகர மேலும் தெரிவித்தார்.

## 10 வயது மாணவியை தாக்கிய ஆசிரியர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பத்து வயது பாடசாலை மாணவியொருவரை தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய 48 வயதுடைய ஆசிரியர் ஒருவரை அண்மையில் கைது செய்துள்ளதாக மொரகொட பொலிஸார் தெரிவித்தனர்.

கெக்கிராவ பிரதேச பாடசாலை ஒன்றில் கடமையாற்றிவரும் ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவராவர்.

குறித்த மாணவி மாணவனொருவருடன் காதல் தொடர்பை ஏற்படுத்தியுள்ளதன் காரணமாக மாணவியின் வீட்டுக்கு அருகாமையில் வைத்தே சந்தேக நபரான ஆசிரியர் மாணவியை தாக்கியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மாணவியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டிற்கமைய சந்தேக நபரான ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மொரகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தும்மோதர பாலம் இடிந்து விழும் அபாய நிலையில்

**புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை**

**புத்தளம் தினகரன் விசேட நிருபர்**



நாத்தாண்டிய தங்கொடுவ வீதியில் காணப்படும் தும்மோதர பாலம் மிகவும் சேதமடைந்த நிலையில் இடிந்து விழும் அபாய நிலையில் இருப்பதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒல்லாந்தர் காலத்தில் கொழும்பிலிருந்து புத்தளம் வரை ஹெமில்டன் கால்வாய் நிர்மாணிக்கப்பட்ட போது இந்த பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அன்றிலிருந்து இன்று வரை இந்த பாலம் பல சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக திருத்தப்பட்டுள்ளது. எனினும் புதிய பாலமொன்று அமைப்பது தொடர்பாக அவதானம் செலுத்தப்படவில்லை என்றும் மக்கள் கருத்து தெரிவிக்கினறனர்.

பல சந்தர்ப்பங்களில் பாலத்தின் அடிப்பகுதியில் ஏற்பட்ட வெடிப்புக்கள் காரணமாக போக்குவரத்து மேற் கொள்ளப்பட முடியாத நிலை ஏற்பட்டது. பாலம் உடைந்து விழாது இருப்பதற்கு தீர்வாக இந்த பாலத்தினூடாக 10 டொன்னுக்கு கூடிய பாரம் கொண்ட வாகனங்கள் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்ற அறிவித்தலும் அவ்விடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அதிக எடையுள்ள பாரிய கொள்கலன்களும் இந்த பாலத்தினூடாக பயணிப்பதை காணக்கூடியதாக உள்ளது.

எனவே, புதிய பாலமொன்றினை நிர்மாணிக்குமாறு பொது மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

உல்லாசப் பயணிகளை கவரும் வகையில்

## மாத்தறையில் முதலைப் பண்ணை நிர்மாணப்பணிகள் விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை



**வெலிகம தினகரன் நிருபர்**

மாத்தறையில் முதலைப் பண்ணை அமைப்பதன் மூலம் இங்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளை கவர முடியுமென மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், மாத்தறையின் எதிர்காலம் முதலை தான். இலங்கை வரும் உல்லாசப்பயணிகளுல் ஐந்து பேரில் மூன்று பேர் பின்னவல யானை சரணாலயத்துக்கு யானைகளைப் பார்வையிடச் செல்கின்றனர். அதே போல் நாம் தெற்கு அபிவிருத்தி அதிகார சபையை அமைத்த வேளையில் முதலை பண்ணையை மாத்தறையில் அமைக்க முதலாவது யோசனையாக முன்வைத்தோம்.

மாத்தறைக்கு வரும் உல்லாசப் பயணிகளை கவரக் கூடிய சிறந்த செயற்திட்டம் இது வென நான் நம்புகிறேன். எமக்கு முதலையுடனான கலாசாரம் உண்டு. இந்த முதலைப் பண்ணையை அமைப்பதனூடாக மீண்டும் எமது கலாசாரம் புதுப்பிக்கப்படுகின்றது. அப்படியானால் மாத்தறைக்கு முதலைப் பண்ணை அவசியம்தான்.

இவ்வாறான முதலைப் பண்ணையொன்று தெற்கு ஆசியாவின் தாய்லாந்து நாட்டில் உள்ளது.

உல்லாசப் பயணிகளைக் மிகவும் கவரக் கூடியதொன்றுதான் முதலைப்பண்ணை.

இதில் மாத்தறை மாவட்ட இணைப்புக்குழுத் தலைவரும் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நிபுண ரணவக்கவும் உரையாற்றினார்.

## பாதாள தலைவருடன் தொடர்பு வைத்த ஒருவர் சந்தேகத்தில் கைது

**களுத்துறை சுழற்சி நிருபர்**

பாதாள உலக தலைவர் கொஸ்கொட தாரக்க என்பவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்தவர் என நம்பப்படும் நபர் ஒருவரை உள்நாட்டு துப்பாக்கி ஒன்றுடன் எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வைத்து அழுத்கம விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் கனேகொடை, ஓபாத்த, கனத்தவத்தை பகுதியில் வசிக்கும் ஒருவரின் வீட்டில் மறைத்து வைத்திருந்த நிலையில் மேற்படி துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

## புத்தளம் சாஹிராவில் விழிப்புணர்வு திட்டம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் உயர்தர பிரிவு மாணவர்களுக்கான விஷேட விழிப்புணர்வு திட்ட நிகழ்ச்சி கல்லூரியின் ஏ.எச்.எம். அஸ்வர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதான வளவாளராக புத்தளம் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் பொலிஸ் அதிகாரி திரு. கயந்த கலந்து சிறப்பித்தார்.

வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிகள், போதை ஒழிப்பு செயற்பாட்டில் இளைஞர்களது பங்களிப்பு, பாடசாலை சட்ட திட்டங்களை மதித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான அம்சங்கள் இதன்போது வளவாளரால் அறிவூட்டப்பட்டன.

இனிவரும் காலங்களில் பாடசாலை சட்டதிட்டங்களை மீறும் மாணவர்கள் தொடர்பாக பொலிஸ் திணைக்களத்தின் ஊடாக எடுக்கப்பட இருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது தெளிவாக விளக்கம் அளித்தார்.



நொச்சியாகம அரச வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவுக்கு 25 இலட்சம் ரூபா பெறுமதியான ஈ.சீ.ஜீ.இயந்திரங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.இந்நிகழ்வில் ஔடத உற்பத்திகள் வழங்கல் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன கலந்து கொண்டு வழங்கி வைத்தபோது எடுத்த படம்.

படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்

## ரூ. 90 இலட்சம் பெறுமதியான கஞ்சாவுடன் பெண் உட்பட மூவர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாத்தளை சந்தி மற்றும் குருந்தம்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 90 இலட்சம் ரூபா பெறுமதிமிக்க 22 கிலோ 400 கிராம் கஞ்சாவுடன் பெண்ணொருவருடன் மேலும் இருவரையும் கைது செய்துள்ளதாக அநுராதபுரம் பொலிசார் தெரிவித்தனர்.

மாத்தளை சந்தி குருந்தம் குளம் பகுதியைச் சேர்ந்த 65 வயது, 19 வயது ஆண்களும் விஜேபுர பகுதியைச் சேர்ந்த 48 வயது பெண்ணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 48 வயது பெண் மோட்டார் சைக்கிளில் 1 கிலொ 100 கிராம் கஞ்சாவை கொண்டு சென்ற வேளையில் குருந்தம்குளம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

19 வயது இளைஞன் முச்சக்கர வண்டியில் 20 கிலோ 200 கிராம் கஞ்சாவை கொண்டு சென்ற வேளையில் நிவத்தகச்சத்திய பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 1 கிலோ 100 கிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த நிலையில் குருந்தம்குளம் பகுதியில் வைத்து 65 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டியினை பொலிசார் கைப்பற்றியுள்ளனர். மேலதிக விசாரணைகளுக்காக இவர்கள் மிஹிந்தலை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## கடற்றொழில் திணைக்கள சிலாபம் அலுவலகம் தற்காலிகமாக பூட்டு

**புத்தளம் விசேட நிருபர்**

கடற்றொழில் திணைக்களத்தினால் மஹவெவ நகரில் நடாத்திச் செல்லப்பட்ட சிலாபம் உதவி கடற்றொழில் பணிப்பாளர் அலுவலகம் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீனவப் படகின் மூலம் கடலுக்கு மீன்பிடி நடவடிக்கைகளுக்காகச் சென்றிருந்த போது சுகயீனமுற்று மீண்டும் கரைக்கு அழைத்து வரப்பட்டு ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அம்பந்தவில மீனவர், கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக சுகாதாரத் துறையினரால் இனங்காணப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது குறித்த மீனவர் மஹவெவ கடற்றொழில் அலுவலகத்திற்கு வருகை தந்து சில சில பணிகளை செய்து கொண்டு சென்றுள்ளமை தெரிய வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சுகாதாரத் தரப்பினரின் உத்தரவுக்கு அமைய இவ்வலுவலகத்தை தற்காலிகமாக மூடி அங்கு பணியாற்றிய அதிகாரிகளை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதி கடற்றொழில் பணிப்பாளர் அனுர ஜயசேகர தெரிவித்தார்.

இவ்வலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதோடு அங்கு பணியாற்றிய அதிகாரிகள் தத்தமது வீடுகளில் தங்கியிருந்து சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## நாச்சியாதீவு பகுதியில்; நடமாடும் இனந்தெரியாத வியாபாரிகளால் பொதுமக்கள் அச்சம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

'Covid 19' கொரோனா தொற்றையும் பொருட்படுத்தாது வீடு வீடாகச் சென்று வியாபாரம் செய்யும் இனந்தெரியாத நடமாடும் வியாபாரிகளால் அச்சமடைந்துள்ள பொதுமக்கள், இவர்கள் பற்றி பொலிசாரும்,சுகாதாரப் பிரிவினரும் கூடுதல் கவனமெடுத்து செயற்பட வேண்டுமென ஹிதோகம பொலிஸ் பிரிவின் நாச்சியாதீவு பகுதி பிரதேச பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஈசல்கள் மொய்த்து விடுவதைப் போல் நாச்சியாதீவு கிராமத்தை சூழ்ந்துள்ள இவ்வாறான இனந்தெரியாத வியாபாரிகள் எந்த விதமான சுகாதார வழி முறைகளையும் பின்பற்றாது, ஒலி பெருக்கி சாதனங்களை பயன்படுத்தி, அனுமதிப் பத்திரமின்றி, மக்களை குறிப்பாக பெண்களை ஒன்று கூடச் செய்து தமது வியாபாரத்தை முன்னெடுத்துச் செல்வதால் இவ்வாறானவர்கள் எங்கு சென்று வந்தார்கள்? எவ்வாறானவர்களுடன் பழகினார்கள்? என்ற எந்த விபரமும் இல்லாமல் சர்வ சாதாரணமாக, நோய்க்காவிகளாக நடமாடும் இவர்களால் பொது மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கை கழுவுதல்,கையுறை பாவித்தல், ஒரு மீற்றர் இடைவெளி பேணல் போன்ற எவற்றையும் பின்பற்றாது, வியாபாரம் செய்யும் இவர்களால் தரமற்ற பொருட்கள் மற்றும் காலாவதியான பொருட்களை இவர்கள் பொது மக்களுக்கு விநியோகித்து வருகின்றனர்.

## கொழும்பு மாவட்ட ஜம்இய்யதுல் உலமா கிளையின் புதிய நிர்வாகிகள்

**மாத்தளை சுழற்சிநிருபர்**

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கொழும்புமாவட்டக் கிளையின் அடுத்து மூன்றாண்டுகளுக்கான புதியநிர்வாகத் தெரிவுக் குழுக் கூட்டம் கொழும்பு, ஜம்இய்யதுல் உலமா தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்றது. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபைத்தலைவர் அஷ் ஷைக் எம்.ஐ.எம். ரிஸ்வி முஃப்தி விசேட உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் கொழும்பு மாவட்ட கிளையின் நடப்பு வருட புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் இரகசிய வாக்கெடுப்பின்போது தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக அஷ்ஷைக் முக்ஸித் அஹ்மத், செயலாளராக அஷ்ஷைக் இர்பான் முபீன், பொருளாளராக அஷ்ஷைக் ரிப்கான் ரம்ஸான், உப தலைவர்களாக அஷ்ஷைக் ஏ.எம்.எம். அனஸ் மற்றும் அஷ்ஷைக் ஸபீர், உப செயலாளராக அஷ்ஷைக் அப்துர் ரஹ்மான், அஷ்ஷைக் பாஸில், அஷ்ஷைக் அப்துல்லாஹ் பாயிஸ், அஷ்ஷைக் ஹாஷிம், அஷ்ஷைக் நௌபல், அஷ் ஷைக் அப்துல் கரீம், அஷ் ஷைக் இர்ஷாத், அஷ்ஷைக் பாவா முஹ்யித்தீன், அஷ்ஷைக் ஹாரிஸ், அஷ்ஷைக் ஸியாத், அஷ்ஷைக் ரம்ஸான், அஷ்ஷைக் பிர்தௌஸ், அஷ்ஷைக் ஷுகுர்தீன், அஷ்ஷைக் ஸல்மான், அஷ்ஷைக் நபீல், அஷ்ஷைக் அர்ஷத் ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

## சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர்களுக்கான விசேட வைத்தியசாலை (போதனா) பேராதனை

## 2021ஆம் வருடத்திற்காக வழங்குநர்கள் கராஜ் மற்றும் சேவை நிலையங்களைப் பதிவு செய்தல்

2021ஆம் வருடத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர்களுக்கான விசேட வைத்தியசாலைக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக இலங்கை பிரஜைகள், உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள், அரச கூட்டுத்தாபனம் மற்றும் அரச நிறுவனங்கள், பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01) வழங்கல்**

- I. அனைத்து வகையான காகிதாதிகள் மற்றும் பாவனைப் பொருட்கள் (Toner, Cartridges போன்றன)
- II. வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் (பலகை/உருக்கு/ பிளாஸ்திக்)
- III. அனைத்து வகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி இயந்திரம் உட்பட உதிரிப்பாகங்கள்
- IV. அனைத்து வகையான வைத்தியசாலை உபகரணங்கள்
- V. தும்பு மெத்தை மற்றும் இறப்பர் கலந்த தும்பு மெத்தை மற்றும் தலையணை
- VI. அனைத்து வகையான காபோலிக் சவர்க்காரம், சலவைத் தூள்/ பார் சவர்க்காரம்/ சுத்தப்படுத்தும் திரவம் மற்றும் தூள்
- VII. அனைத்து வகையான துணிகள், நுளம்பு வலை மற்றும் தைத்து முடிக்கப்பட்ட ஆடைகள் (கட்டில் விரிப்பு, தலையணை உறை, கட்டமிட்ட துணி மற்றும் சத்திர சிகிச்சை உடை/ பிஜாமா உடை)
- VIII. அலுமினியப் பொருட்கள்/ பீங்கான் பொருட்கள்/ கண்ணாடிப் பொருட்கள்/ பிளாஸ்திக் பொருட்கள்
- IX. அனைத்து வகையான குப்பை பைகள். பொலித்தீன் மற்றும் பொலித்தீன் பைகள் (சூழலுக்கு இசைவானவை)
- X. டயர், டியுப் மற்றும் வாகன பற்றரி மற்றும் வாகன உதிரிப்பாகங்கள்
- XI. அனைத்து வகையான கனரகப் பொருட்கள் (உலோகப் பொருட்கள்/ ட்ரொலிச் சக்கரம்/ ஆணி/ பிணைச்சல்/ இறப்பர் கையுறை, தோற்பொருட்கள் மற்றும் இறப்பர் கால்துடைப்பம்)
- XII. பெயர்ப் பலகைகள், இறப்பர் முத்திரை திகதி முத்திரை
- XIII. அச்சு வேலைகள் (மருந்துகள் இடும் உறை/ கதிரியக்கப் படங்கள் இடும் உறை/ சான்றிதழ்கள் போன்றன)
- XIV. அனைத்து வகையான மின்சார துணைப்பாகங்கள் (டோர்ச் பெற்றறி வகைள் / மின் குமிழ்கள்/ வயர்கள் போன்றவை)
- XV. மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள்
- XVI. ஆய்வுகூட உபகரணங்கள்
- XVII. எலும்பியல் சத்திர சிகிச்சை பாவனைப் பொருட்கள்
- XVIII. சத்திர சிகிச்சை பாவனைப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
- XIX. ஆய்வுகூட பாவனைப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்
- XX. கதிரியல் பாவனைப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்
- XXI. பற்சிகிச்சை உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
- XXII. பிராந்திய மருந்துகளைக் கொள்வனவு செய்தல்
- XXIII. கிருமிகள் கட்டுப்பாட்டுக்குத் தேவையான கிருமி நாசினிகள்
- XXIV. உபசார நடவடிக்கைகளுக்கான உணவு பானங்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
- XXV. ஏனைய பல்வேறு வகையான பாவனைப் பொருட்கள் (தீப்பெட்டி / சவர அலகு / ஊசி / நூல் வகைகள் என்பன)

**02) ஒப்பந்தக்காரர்கள்**

நீர்க்குழாய் திருத்தவேலைகள்/ மின்னியலாளர்கள்/ சாக்கடை வேலைகள்/ நிறப்பூச்சு வேலைகள்/ கொங்கிறீட் / செங்கல்/ அலுமினிய நிர்மாணங்கள் / நீர்க் கசிவுகளை சீர்படுத்தல் போன்றன

**03) சேவைகள்**

- I. தையல் இயந்திரங்களின் திருத்தவேலைகள்
- II. ஆடை தைத்தல் (திரைச்சீலை/கட்டில் விரிப்பு/ பிஜாமா உடை போன்றன)
- III. உரிமை கோரப்படாத சடலங்கள் மற்றும் உடற் பாகங்களைப் புதைத்தல்
- IV. அனைத்து வாகனங்களையும் சேர்விஸ் செய்தல்
- V. அனைத்து மின்சார உபகரணங்கள், குளிரூட்டி, வளிச் சீராக்கி என்பவற்றின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
- VI. வாகன திருத்தவேலைகள் (இதற்காக இந்நிறுவனத்தினால் தரப்படும் விஷேட விண்ணப்பத்திற்கு அமைய விண்ணப்பித்தல் வேண்டும்.)
- VII. வாகன மின்னியல் / வளிச்சீராக்க திருத்தவேலைகள்
- VIII. மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் / ஆய்வுகூட உபகரணங்கள் / பல் வைத்திய உபகரணங்கள் மற்றும் பல் சத்திரசிகிச்சை உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்.
- IX. மருத்துவ வாயுக்கள் வழங்குதல் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல்
- X. தீயணைப்பு உபகரணங்களை மீள் நிரப்புதல் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல்
- XI. வீட்டுப் பாவனைப் பொருட்களை புதுப்பித்தல் (பிரம்பு நாற்காலி பின்னல் / அலுவலக நாற்காலிகளின் திருத்தவேலைகள் போன்றன.)
- XII. குஷன் வேலைகள் / திருத்த வேலைகள்
- XIII. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சர்விஸ் செய்தல் (கணனி இயந்திரம்/ தொலைநகல் இயந்திரம்/ புகைப்படப் பிரதி இயந்திரம்/ ரோணியோ இயந்திரம்/ நகல் பிரதி இயந்திரம்)
- XIV. ஊழியர்களின் அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
- XV. நீராவி கொதிகலன் இயந்திரத்தின் திருத்தவேலைகள்

**04. அறிவுரைகள் மற்றும் நிபந்தனைகள்**

- I. ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களுக்கு வழங்குநர்களாக பதிவாகலாம்.
- II. 02ஆம் இலக்க உருப்படிக்காக இந்த நிறுவனத்தினால் வழங்கப்படும் விசேட விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பித்தல் வேண்டும். ICTAD C9 அல்லது அதற்கு மேற்பட்ட தரப் பதிவு அவசியம் என்பதுடன் மத்திய மாகாணத்தினுள் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- III. பின்வரும் மாதிரி விண்ணப்பத்துக்கு அமைய முறையாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை வியாபாரப் பதிவு சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி மற்றும் பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு சகிதம் 2020.11.12ஆம் திகதிக்கு பி.ப. 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பொது வைத்தியசாலை, பேராதனை'' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது இந்நிறுவனத்தின் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- IV. ஒவ்வொரு பொருளுக்காகவும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பதிவுக் கட்டணத்தை இவ்வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவுக்கு வாரத்தின் வேலை நாட்களில் 2020-10-16ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2020-11-11ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் செலுத்த முடியும் என்பதுடன் அவ்வாறு செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். காசுக் கட்டளைகள் மற்றும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அரச நிறுவனங்களுக்கு பதிவுக் கட்டணம் விலக்களிக்கப்படும்.
- V. ஒன்றுக்கு மேற்பட்டவைகளுக்கு பதிவு செய்து கொள்வதாயின் ஒவ்வொரு அம்சத்திற்காகவும் வெவ்வேறான விண்ணப்பம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பங்களையும் ஒரே கடித உறையில் இட்டு அனுப்பலாம். ஒரு விண்ணப்பப் படிவத்தில் பல உருப்படிகளுக்கு விண்ணப்பித்திருந்தால் அதில் முதலாவதாக உள்ள உருப்படிக்கு மாத்திரமே பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
- VI. விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் உறையின் இடப்பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களை பதிவு செய்தல் - 2021'' என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
- VII. பொருட்கள் மற்றும் சேவைகளை கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
- VIII. வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் விலைமனு கோரப்பட்டிருப்பினும் பதிவு செய்யப்படாத வெளி வழங்குநர்களிடம் விலைமனு கோரும் உரிமையை இவ்வைத்தியசாலை பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
- IX. இந்த நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிரூபிக்க முடியாத சந்தர்ப்பங்களில் எவ்வித முன்னறிவித்தலும் இல்லாமல் பதிவு செய்வதற்கான எந்தவொரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமை வைத்தியசாலை பணிப்பாளரைச் சாரும்.
- X. தருவித்தற் கட்டளையில் வழங்கப்படும் அனைத்துப் பொருட்களையும் முறையாக களஞ்சியசாலைக்கு வழங்கியதன் பின் மற்றும் சேவைகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
- XI. கட்டணம் அறவிடாமல் போக்குவரத்து வசதிகள் வழங்குதல் வேண்டும்.
- XII. விலைமனு கோரி அனுப்பும் போது விலை மனுக்கள் சமர்ப்பிக்காத மற்றும் சமர்ப்பிக்கின்ற விலை மனுவுக்கு பொருட்கள் வழங்காத நிறுவனங்கள் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு (Black List) உட்படுத்த நேரிடும்.
- XIII. உங்களது E-mail முகவரி மற்றும் Fax இலக்கங்களைச் சரியாகக் குறிப்பிடவும்.
- XIV. மேற்குறிப்பிடப்பட்ட வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்கும்போது அண்மையில் வழங்கப்பட்ட தேசிய பெறுகை முகவரகத்தின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலுக்கு கவனத்தைச் செலுத்துமாறு மேலும் தெரிவிக்கப்படுகிறது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர்களுக்கான விசேட வைத்தியசாலை,**
**பேராதனை.**

**விசாரணைகள்: 081-2389119 நீடிப்பு 110/114**

### மாதிரி விண்ணப்பப் படிவம்
### வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2021ஆம் வருடம்
### சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர்களுக்கான விசேட வைத்தியசாலை (போதனா) பேராதனை

01. உற்பத்தி நிறுவனம் / வியாபாரம் / வழங்குநரின் பெயர்:

02. முகவரி:

03. (i) தொலைபேசி இலக்கம்:
    (ii) தொலைநகல் இலக்கம்:
    (iii) மின்னஞ்சல் முகவரி:

04. வியாபாரத்தின் தன்மை: (தனியுரிமை/ வரையறுக்கப்பட்ட நிறுவனமா என்பது பற்றி)

05. வியாபாரப் பதிவிலக்கம்:

06. VAT பதிவிலக்கம்:

07. பிரதான வியாபாரம்: (எவ்வகையான வழங்கல்/ உற்பத்திக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுங்கள்)

08. வழங்கக்கூடிய கடன் வசதிகள்:

09. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் பொருள் மற்றும் சேவை இலக்கம்:

10. பதிவுக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம்

வழங்கல் இல. ....................... சேவை இல................... கொள்வனவு இலக்கம்.............. பொருட்டு பதிவு செய்து கொள்ளும்படி வேண்டுகிறேன். .................. ரூபா பெறுமதியான பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

மேற் கூறப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஏதாவது பிழையான தகவல்கள் வழங்கியிருப்பின் பதிவு நிராகரிக்கப்படும் என்பதை நான் அறிவேன். இவற்றுடன் வியாபாரப் பதிவின் பிரதியொன்றும் இணைக்கப்பட்டுள்ளது. VAT பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் இணைக்கவும்.

.............
**திகதி**

....................................................
**விண்ணப்பதாரரின் கையொப்பம்**
**உத்தியோகபூர்வ முத்திரை**

## கேள்விப்பத்திர அறிவித்தல்

## அகலவத்த பிரதேச சபை

பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் உப அட்டவணையில் தரப்பட்டுள்ள சொத்துக்களின் உரித்தை 2021.01.01ஆம் திகதி தொடக்கம் 2021.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்காக திறந்த கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது. இதற்கான கேள்விப் பத்திர விண்ணப்பப்படிவங்களை பிரதேச சபையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திர படிவங்கள் வழங்கப்படுதல் - 2020.10.14 தொடக்கம் 2020.11.04 பி.ப. 3.00 மணி வரை.

கேள்விப்பத்திர படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் - 2020.11.05 மு.ப 10.00 மணி.

கேள்விப்பத்திரம் திறந்துவைக்கப்படும் திகதி மற்றும் நேரம் - 2020.11.05, மு.ப.10.01.

கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளும் பொழுது விண்ணப்பதாரி தனது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

**உப அட்டவணை**

| தொ. இல. | விபரம் | ஆகக் குறைந்த விலை ரூபா சதம் | கேள்விப் பத்திர பிணைப்பணம் ரூபா சதம் | விண்ணப்பப் படிவக்கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 01 | அகலவத்த மாட்டு இறைச்சிக் கடையில் தினந்தோறும் மாட்டு இறைச்சி விற்பனை செய்யும் உரித்தை குத்தகைக்கு வழங்குதல் | 2,987,500.00 | 40,000.00 | 1,500.00 |
| 02 | அகலவத்த மீன் கடையில் தினந்தோறும் மீன் விற்பனை செய்யும் உரித்தை குத்தகைக்கு வழங்குதல் | 242,755.00 | 11,000.00 | 1,300.00 |
| 03 | அகலவத்த இறைச்சிக் கடையில் தினந்தோறும் கோழி இறைச்சி, ஆட்டு இறைச்சி விற்பனை செய்யும் உரித்தை குத்தகைக்கு வழங்குதல் | 75,200.00 | 5,500.00 | 1,300.00 |
| 04 | யட்டியன மயான பூமியில் உள்ள தேங்காய் அறுவடையை குத்தகைக்கு வழங்குதல் | 3,090.00 | 750.00 | 750.00 |
| 05 | பிம்புர மயான பூமியில் உள்ள தேங்காய் அறுவடை மற்றும் தேயிலை அறுவடையை குத்தகைக்கு வழங்குதல் | 15,850.00 | 1,100.00 | 750.00 |
| 06 | மாகஸ்வத்த விளையாட்டு மைதானத்தில் உள்ள தேங்காய் அறுவடையை குத்தகைக்கு வழங்குதல் | 9,450.00 | 1,000.00 | 750.00 |
| 07 | யட்டியன மக்குருவலலந்த காணியில் உள்ள வெற்றிலை மற்றும் மிளகு பயிர்ச்செய்கையை குத்தகைக்கு வழங்குவதல் | 4,600.00 | 750.00 | 750.00 |

கேள்விப்பத்திர நிபந்தனைகள் தொடர்பான மேலதிக விபரங்களை கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளும் வேளையிலோ அல்லது தொ.பே.இல. 034-2243236 மற்றும் 034-2247477 ஊடாக தொடர்புகொண்டும் பெற்றுக்கொள்ளலாம்.

**ஜயசேன கம்புராவல,**
**தவிசாளர்.**
**அகலவத்த பிரதேச சபை**

2020.10.13ஆம் திகதி
**அகலவத்த பிரதேச சபை அலுவலகத்தில்.**

## பெறுகை அறிவித்தல்

## 2021ஆம் வருடத்தில சொத்துக்களைக் குத்தகைக்கு விடல்

## வெல்லவாய பிரதேச சபை

கீழே அட்டவணை இலக்கம் 01 இல் காணப்படும் வெல்லவாய பிரதேச சபைக்குரிய சொத்துக்களின் விற்பனை உரிமையை 2021ஆம் வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறாக என்னால் பெறுகை, வெல்லவாய பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து மாத்திரம் அழைக்கப்படுகின்றன.

**பெறுகை விபரம் மற்றும் நிபந்தனைகள்**

1. அலுவலகத்திலிருந்து இலவசமாக வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி சமர்ப்பிப்பதன் மூலம் பெறுகைப் படிவங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.
2. அபகீர்த்தியான விலைமனுதாரர் பெயர்ப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது 2020ஆம் வருடத்தில் அல்லது அதற்கு முன்னர் சொத்துக்களைக் குத்தகைக்குப் பெற்று ஒப்பந்தப் பிரகாரம் குத்தகைத் தொகையை உரிய முறையில் செலுத்தத் தவறிய குத்தகைகாரர்களுக்கு பெறுகைப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது.
3. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த சொத்துக்கள் தொடர்பாக உரித்தான மீளளிக்கப்படும் பெறுகை பிணை வைப்புத் தொகை மற்றும் மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும்.
4. பெறுகைப் படிவங்களுக்காக விண்ணப்பிக்கும் போது வதிவிடத்தை உறுதிப்படுத்தும் மற்றும் அடையாளத்தை உறுதி செய்வது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
   i. கிராம அலுவலரினால் வழங்கப்படும் ஜீஎஸ் பதிவுச் சான்றிதழ்
   ii. தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் போட்டோ பிரதியொன்று.
5. உரிய முறையில் விண்ணப்பித்ததன் பின்னர், மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென பெயரிடப்பட்டு, உங்களுக்கு வழங்கப்படும் பெறுகைப் படிவங்கள் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டு, ஒப்பமிடப்பட்டு, உங்களுக்கு வழங்கப்படும் தபாலுறைகள், அறிவுரை பிரகாரம் தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, அந்த பிரதிகள் இரண்டும் உங்களுக்கு வழங்கப்பட்ட பெரிய தபாலுறை ஒன்றினுள் சேர்க்கப்பட்டு, குறித்த நேரம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, பதிவுத் தபாலில் அனுப்பப்படவோ அல்லது இந்த சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் நேரில் வந்து சேர்க்கப்படவோ வேண்டும். தபாலிடும் போது காணாமல்போகும் அல்லது காலதாமதமாகும் அல்லது குறித்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் பெறுகை விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்பட மாட்டாது.
6. குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட உத்தேசிக்கப்படும் சொத்து பிரதேச சபையின் அனுமதி பிரகாரம் விலைமனுதாரர்க்கு அங்கு வந்து பரீட்சிக்கலாம்.
7. ஆகக் குறைந்த விலைமனுவிற்குக் குறைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அல்லது குறித்த நேரத்திற்கு முன்னதாக சமர்ப்பிக்கப்படாத பெறுகை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக வைக்கப்பட்ட பெறுகை பிணை வைப்புத் தொகை மீளளிக்கப்படாததுடன், குறித்த பிணை வைப்புத் தொகை சபையுரிமையாக்கப்படும்.
8. சொத்துக்கள் பலவற்றுக்காகவும் பெறுகை விண்ணப்பங்கள் பெற்றுத்தரப்படும் போது, ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் வெவ்வேறாக பெறுகை விண்ணப்பங்களைக் கோருவதற்கு நடடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.
9. பெறுகை விலைமனு திறக்கப்படுவது, நியமிக்கப்பட்ட பெறுகைச் சபையொன்றின் முன்னிலையில். வெல்லவாய பிரதேச சபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், அச்சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்க்கு அல்லது அவரின் எழுத்து மூல அதிகாரத்தை கொண்டுள்ள பிரதிநிதியொருவருக்கு கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும்.
10. பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்படும் பெறுகை, விலைமனுதாரர்கள் அது தொடர்பில் எழுத்து மூலம் அறிவிப்பது மேற்கொள்ளப்படுவதுடன், மேற்படி கடந்த தினம் தொடக்கம் 14 நாட்கள் உள்ளிட்டதாக விதிக்கப்படும் ஒப்பந்த பிணை வைப்பு மற்றும் அது தொடர்பான முத்திரைக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர், குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விதிக்கப்படும் தினம் அல்லது அதற்கு முன்னர், ஒப்பந்த பிணை வைப்பு மற்றும் அது தொடர்பான முத்திரைக் கட்டணத்தை செலுத்தி, ஒப்பந்தம் கைச்சாத்திடத் தவறும் பெறுகை விலைமனுதாரர்கள் நிராகரிக்கப்படுவதுடன், அவர்களின் பெறுகை பிணை வைப்பு மீளளிக்கப்படாததுடன் குறித்த தொகையானது சபையுரிமையாக்கப்படும். மேலும் அவர்களின் பெயர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
11. பெறுகை விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டு பெறுகை விலைமனுவைச் சமர்ப்பிக்காதவர்களின் பெறுகை பிணை வைப்பு மீளளிக்கப்படாததுடன், குறித்த பிணை வைப்பும் சபையுரிமையாக்கப்படும். மேலும், அவர்களின் பெயர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படும்.
12. அந்தந்த சொத்துக்களைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பெறுகை விலைமனுதாரர்கள், ஒப்பந்த பிணை வைப்பைச் செலுத்தி, ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் பின்னர், அந்தந்த பெறுகைக்குரிய ஏனைய பெறுகை விலைமனுதாரர்களின் பெறுகை பிணை வைப்பு மீளளிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அது தொடர்பாக அவர்களால் குறித்த பற்றுச்சீட்டுடன் சபை செயலாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.
13. வருடமொன்றிற்காக குத்தகைக்கு வழங்கப்படும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பெறுகை விலைமனுதாரர், மாதாந்த தவணை மூன்றிற்கு சமமான கட்டணத்தை ஒரே தவணையில் வைப்பிலிட வேண்டும்.
14. பெறுகை விலைமனு தொடர்பாக, இறுதித் தீர்மானமொன்றை எடுக்கும் உரிமை, பெறுகைச் சபைத் தலைவரிற்குரியதாகும்.
15. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் விளம்பரப்படுத்தும் இந்த பெறுகை அறிவித்தல்களில் காணப்படும் மொழி பெயர்ப்புகளில் முரண்பாடுகள் ஏற்படும் போது, சிங்கள மொழி அறிவிப்பு கவனத்திற் கொள்ளப்படும்.
   i. பெறுகை விண்ணப்பங்கள் வழங்கப்படுவது - 2020.10.15 முதல் 2020.10.29 அன்று மு.ப. 10.00 மணி வரையான அலுவலக நேரங்களில் மாத்திரமேயாகும்.
   ii. பெறுகை விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படுவது - 2020.10.15 முதல் 2020.10.29 அன்று பி.ப. 1.00 வரை மாத்திரமேயாகும்.
   iii. பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படுவது - 2020.10.29 அன்று பி.ப. 1.00 மணிக்கு வெல்லவாய பிரதேச சபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும்.

**அட்டவணை இலக்கம் - 01**

**2021 வருடம் தொடர்பாக குத்தகைக்கு விடப்படும் சொத்துக்கள்**

| தொடர் இலக்கம் | சொத்தின் விபரம் | பெறுகை பிணை வைப்புத் தொகை ரூ. சதம். | படிவக் கட்டணம் ரூ. சதம் | ஆகக் குறைந்த விலைமனு ரூ. சதம் |
|---|---|---|---|---|
| 01 | ஊவா குடா ஓயா வாரச் சந்தை | 30000.00 | 750.00 | 700000.00 |
| 02 | அந்திலி வெவ மற்றும் வெஹெரயாய வாரச் சந்தை | 40000.00 | 750.00 | 800000.00 |
| 03 | பலஹருவ வாரச்சந்தை | 1200.00 | 750.00 | 20000.00 |
| 04 | வெல்லவாய உவர் நீர் நன்னீர் மீன் கடை | 30000.00 | 750.00 | 700,000.00 |

**ஆர்.டீ. ஹரமாணிஸ்**
**தலைவர்**

**2020.10.15**

**வெல்லவாய பிரதேச சபை அலுவலகம்,**
**தொலைபேசி இலக்கம்: 055-2274875**
**வெல்லவாய பிரதேச சபை**

# ஊவா மாகாண சபை

## பிரதி பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகம்

## 2021ஆம் வருடத்திற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2021ஆம் வருடத்திற்காக ஊவா மாகாண சபையில், பிரதி பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்திற்கு மற்றும் ஏனைய அலுவலகங்களுக்காக, கீழே காணப்படும் மூலங்கள் கீழாக பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக, வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கு தகுதியுள்ள நிறுவனங்கள் மற்றும் ஆட்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. 2020.10.15 முதல் 2020.11.06 அன்று மு.ப. 8.30 முதல் பி.ப. 2.30 வரையான அலுவலக நேரங்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு உருப்படி தொடர்பாகவும் மீளளிக்கப்படாத ரூ. 750.00 தொகையைச் செலுத்தி, (காசுக் கட்டளை அல்லது காசோலைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.) கீழே முகவரி குறிப்பிடப்பட்டுள்ள இடத்திலிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| 01 | பண்டங்களை வழங்கல் | 02 | சேவைகளை வழங்கல் |
|---|---|---|---|
| 01.01 | அலுவலக காகிதாதிகள், டோனர் மற்றும் ரிபன் மற்றும் பாவனைப் பொருட்கள் | 02.01 | அலுவலக உபகரணங்கள், கணனி மற்றும் மின்சார உபகரணங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் |
| 01.02 | அலுவலக உபகரணங்கள் (கணனி இயந்திரம், போட்டோக் கொப்பி இயந்திரம் போன்றவை) | 02.02 | மின் மாற்றி மற்றும் நீர்க்குழாய் மற்றும் நீர் பம்பிகளைப் பழுதுபார்த்தல் |
| 01.03 | மின்சார உபகரணங்கள் | 02.03 | மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் |
| 01.04 | மின் விளக்கு உள்ளிட்ட மின்சார துணையுறுப்புக்கள் | 02.04 | அச்சிடும் வேலைகள் மற்றும் நிறுவன அடையாள அட்டைகளைத் தயாரித்தல் |
| 01.05 | அலுவலக மரத்தினாலான மற்றும் உலோக வீட்டுத் தளபாடங்கள் | 02.05 | பயிற்றப்பட்ட பயிற்றப்படாத தொழிலாளர்களை வழங்கல் |
| 01.06 | துணி வகைகள், சீருடைகள் மற்றும் திரைச் சீலைகள் | 02.06 | போக்குவரத்து வசதிகளை வழங்கல் |
| 01.07 | கட்டிடப் பொருட்கள் | 02.07 | வளிச்சீராக்கி இயந்திரங்களைப் பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் |
| 01.08 | வாகன உதிரிப் பாகங்கள் | 02.08 | உள்ளக தொலைபேசி வலையமைப்பைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் |
| 01.09 | சுத்திகரிப்பு தொடர்பாகத் தேவைப்படும் பாவனைப் பொருட்கள் | 02.09 | மின் பிறப்பாக்கி இயந்திரங்களைப் (ஜெனரேட்டர்) புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் |
| 01.10 | இறப்பர் மற்றும் தும்பு தொடர்பான மெத்தை மற்றும் கார்பட் போன்றவை. | 02.10 | மின்னுயர்த்திகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். |
| 01.11 | புத்தகங்கள், பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் | 02.11 | தீயணைக்கும் உபகரணங்களை மீள் நிரப்பல் மற்றும் பழுதுபார்த்தல் |
| 01.12 | சமையலறை உபகரணங்கள் | 02.12 | உணவு பானங்களை வழங்கல் |
| 01.13 | தீயணைக்கும் இரசாயணப் பதார்த்தங்கள் மற்றும் உபகரணங்கள் | 02.13 | மரவேலை, இரும்பு வார்க்கும் வேலை, அலுமினிய வேலை, குஷன் வேலை மேசன் வேலை |
| 01.14 | அனைத்து வகையான விளையாட்டு தைக்கப்பட்ட ஆடைகள், விளையாட்டு சப்பாத்து | 02.14 | மரம் மற்றும் கிளைகளை வெட்டுதல் |
| 01.15 | அனைத்து வகையான விளையாட்டுப் பொருட்கள், பதக்கங்கள் மற்றும் நினைவுப் படிவங்கள் | 02.15 | ஏனைய சேவைகள் |
| 01.16 | புடவைக் கைத்தொழில் நிலையங்களுக்குத் தேவைப்படும் நூல் வகைகள், சாயம் மற்றும் இரசாயணப் பொருட்கள் | | |
| 01.17 | சுயதொழில் முயற்சிகளுக்குத் தேவைப்படும் இயந்திராதிகள் | | |
| 01.18 | ஏனைய பண்டங்கள் | | |

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், 2020.11.09 அன்று பி.ப. 3.00 வரை பொறுப்பேற்கப்படும். மேலதிக விபரங்கள், 055-2229393 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொண்டு இந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது www.up.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம், பிரதி பிரதான செயலாளரிற்குரியதாகும் (நிர்வாகம்)

**ஆர்.எச்.சீ. பிரியந்தி**
**பிரதி பிரதான செயலாளர் (நிர்வாகம்)**

**பிரதி பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகம்,**
**ஊவா மாகாண சபை, பதுளை.**

**2020.10.12**

# இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபா) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6106(MAR) | Shaft for Masada Windless System of M/T/ Airawana | 16,000.00 | 1,000.00 | 2020.11.12 மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/PT/6109(MAR) | Stern Tube Seals for Dredger Hansakawa | 60,000.00 | 1,000.00 | 2020.11.12 மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/PT/6110(MAR) | Spares for main engine Wartsila 41.20 of M/T Velusumana & M/T Therapuththabaya | 40,000.00 | 1,000.00 | 2020.11.12 மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/PT/6114(MAR) | Spares for (Yanmar 6HAL2 – HTN Two main generator engines of M/T Nandimithra | 36,000.00 | 1,000.00 | 2020.11.17 மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/PT/6116(MAR) | Spares for Aquamaster US 3001 Cp Units of Tug Nandimithra | 240,000.00 | 3,500.00 | 2020.11.17 மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/PT/6117(MP) | 01 No. Honing Machine | 80,000.00 | 1,000.00 | 2020.11.17 மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/20/PT/13/20 | Airless Spray Machine 01 No. | 15,000.00 | 1,000.00 | 2020.11.04 பி.ப 1.30 மணிக்கு |
| CMS/LP/20/PT/16/005 | 01 No. HAZ MAT Pump with accessories | 140,000.00 | 3,500.00 | 2020.11.04 பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/20/PT/04/020 | Prime Mover with Manual Transmission | 80,000.00 | 1,000.00 | 2020.11.04 பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/20/PT/16/052 | 5000 packets of photocopy paper A4 size 80 GSM (500 sheets/packet) | 30,000.00 | 1,000.00 | 2020.11.05 பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/20/PT/04/053 | Trouser Black, Blue & White 1700 Nos. | 30,000.00 | 1,000.00 | 2020.11.05 பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/19/PT/04/059 | Trouser Blue Drill (Track Bottom) – 7000 Nos. | 55,000.00 | 1,000.00 | 2020.11.06 பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/20/PT/15/052 | Spares for Scania Engines of Launch Pilot 11 & 13 | 19,000.00 | 1,000.00 | 2020.11.06 பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுமென விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தத்தின் முழுமையான காலப்பகுதியிலும் கூறப்பட்ட சட்டத்திற்கு கண்டிப்பாக அமைந்தொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளருக்காக மற்றும் அவர் சார்பாக அல்லது வழங்குநரொருவருக்கு முகவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்பட விரும்பினால், அவர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவை மேற்கொண்டு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

3. ஆகக் குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்களில் மேலே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் விலைமனுதாரர் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பிரதான முகாமையாளரிடமிருந்து (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்) பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 04 ஆம் நிரலில் வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2020 ஒக்ரோபர் 16 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் இறுதித் திகதிக்கு முன்னைய நாள் வரை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இறுதி நேரத்தில் கீழேயுள்ள முகவரியில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல் |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 21, தம்புள்ளை வீதி, குருநாகல் |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமாகம |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 69 தெஹிவளை வீதி, மஹரகம |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹரகம |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 124/A, துடுகெமுனு வீதி, கொஹுவல |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 7 |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 18, கெசெல்வத்தை, பாணந்துறை |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 508, காலி வீதி, பாணந்துறை |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரணை |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 534, காலி வீதி, வாத்துவ |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர் |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 175/A, காலி வீதி, பேருவளை |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 185, காலி வீதி, அளுத்கம |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 124, காலி வீதி, .தெஹிவளை |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 676, காலி வீதி, கொழும்பு 3 |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 150, பிரதான வீதி, காலி |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொடை |
| 04/11/18/25 நவம்பர் 2020 | இல. 598E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 56,57, எட்வின் விக்ரமரத்ன கடைத்தொகுதி, புதிய நகரம், மஹியங்கனை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 44/1, புதிய பஸ் நிலைய வீதி, மொனராகலை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 10/2, இலங்கை வங்கியின் எதிரே, புதிய நகரம்,தெஹியத்தகண்டி |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 226, டீ.எஸ். சேனாநாயக்க வீதி, கண்டி |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 153, மடவல வீதி, கடுகஸ்தோட்டை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 55, கீழ் வீதி, பதுளை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 3, நுவரெலிய வீதி, வெலிமடை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 26, வங்கி வீதி, பதுளை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 71, குயீன் எலிசபத் மாவத்தை, நுவரெலியா |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 473, நுவரெலிய வீதி, புசல்லாவை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 22, நுவரெலிய வீதி, கம்பளை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 115, கொட்டுகொடல்ல வீதி, கண்டி |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 52, டன்பார் வீதி, ஹட்டன் |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 66, நாவலபிட்டி வீதி, கம்பளை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 03A, நகர சபை வீதி, நாவலபிட்டி |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 395, கிரான்ட்பாஸ் வீதி, கொழும்பு 14 |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 367/1, அளுத்மாவத்தை, கொழும்பு 15 |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 81, முகத்துவாரம் வீதி, கொழும்பு 15 |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 03, புனித லூசியாஸ் வீதி ,கொட்டாஞ்சேனை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 3/729, பண்ணை வீதி, கொழும்பு 15 |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 47, கிரான்ட்பாஸ் வீதி, கொழும்பு 14 |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரில், ,அம்பாறை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 9 |
| 05/12/19/26 நவம்பர் 2020 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி கல்முனை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை |
| 05/12/19/26 நவம்பர் 2020 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 05/12/19/26 நவம்பர் 2020 | பிரதான வீதி, பொத்துவில் |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 25, எட்டியாந்தோட்டை வீதி, அவிசாவளை |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 49 சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராம |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 43, பிரதான வீதி, எம்பிலிப்பிட்டி |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொடை |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 275, மத்திய வீதி, திருகோணமலை |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 301, மொகமட் அலியார் கட்டிடம், பிரதான வீதி, காத்தான்குடி 01 |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா |
| 06/13/20/27 நவம்பர் 2020 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 06/13/20/27 நவம்பர் 2020 | சந்தை எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 06/13/20/27 நவம்பர் 2020 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி |
| 06/13/20/27 நவம்பர் 2020 | சந்தைத் தொகுதிக்கு எதிரில், பிரதான வீதி, செங்கலடி |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 406, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 187, பிரதான வீதி, மன்னார் |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா |
| 06/13/20/27 நவம்பர் 2020 | 1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு |
| 06/13/20/27 நவம்பர் 2020 | PW வீதி, முல்லைத்தீவு |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 55, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய் |
| 06/13/20/27 நவம்பர் 2020 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 06/13/20/27 நவம்பர் 2020 | பிரதான வீதி, மல்லாவி |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ⁖பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம் உள்ளது

LB FINANCE
சிரேஷ்ட முகாமையாளர் - தங்க கடன் பிரிவு எல்.பீ. ⁖பினான்ஸ் பி.எல்.சி
275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை, (OPA கட்டடம்) கொழும்பு 07.

---

மாணிக்கம் மற்றும் ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு
மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்

# வாகனங்களை விற்பனை செய்வதற்கான கேள்வி கோரல்

இல. 73/5ஏ, ருவன் செவன. வெலிவிட்ட, கடுவளையில் அமைந்துள்ள மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனத்திற்கு சொந்தமான பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கீழேயுள்ள இலக்கம் கொண்ட வாகனத்தை விற்பனை செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

## மைக்ரோ கெப் வண்டி SG PB-7848

**கேள்வி கோரல் அறிவுரைகள்:-**

01. வாகனத்தைப் பரீட்சிப்பதற்காக 2020.10.15 முதல் 2020.10.27 வரை சகல வார நாட்களிலும் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக வளாக பிரதேசத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
02. கேள்விதாரர்களால் இவ் வாகனத்திற்காக மீளளிக்கப்படாத ரூ. 1,000/- தொகையை இல. 73/5ஏ, ருவன் செவன, வெலிவிட்ட, கடுவளையில் அமைந்துள்ள மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனத்தின் கணக்குப் பிரிவின் காசாளரிடம் காசாக செலுத்தி கேள்வி விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், மீளளிக்கப்படும் ரூபா 10,000/- பிணை வைப்பை செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (கேள்விப் பத்திரங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பிணை வைப்புச் செய்தல், 2020.10.27 பி.ப. 3.00 இற்கு முடிவுறும்)
03. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 2020.10.28 மு.ப. 10.00 இற்கு முடிவடைவதுடன் அன்றே மு.ப. 10.00 இற்கு கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் நிறுவனத்தின் கேள்வி திறக்கும் சபையினால் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.
04. மேலதிக விபரங்கள் கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்படுவதுடன் எந்தக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உரித்தாவதுடன் கேள்விச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**பணிப்பாளர் நாயகம்**
**மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்**
**இல. 73/5ஏ, ருவன் செவன, வெலிவிட்ட, கடுவளை.**
**011-2579187/ 011-4324679**

---

# கேள்வி அறிவித்தல்
## தம்புள்ள பிரதேச சபை
## குத்தகைக்கு வழங்குதல் – 2021

தம்புள்ள பிரதேச சபைக்கு உட்பட்ட சீகிரிய புதிய நகரத்திலுள்ள வாகனத் தரிப்பிடத்தில் தரித்து நிற்கும் வாகனங்களுக்கான கட்டணத்தை அறவிடும் உரிமையை 2021.01.01ஆம் திகதி தொடக்கம் 2021.12.31ஆம் திகதி வரையிலான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2020.11.06ஆம் திகதி பி.ப. 1.30 மணி வரை முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 'கௌரவ தலைவர், தம்புள்ள பிரதேச சபை, சீகிரிய' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலோ இடப்படலாம்.

பிரதேச சபைக்கு கொடுக்கப்பட வேண்டிய குறைவு தொகையை செலுத்த வேண்டியவர்களுக்கும் பிரதேச சபையினால் தடை செய்யப்பட்ட நபர்களுக்கும் மற்றும் அவர்களது இரத்த சொந்தங்களுக்கும் விண்ணப்பிக்க முடியாது. அவவ்வாறானவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**கேள்வி கோரல்கள் விண்ணப்பங்கள் வெளியிடுதல்:**

2020.10.15ஆம் திகதி முதல் 2020.11.05ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை (அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை)

கேள்வி கோரல்கள் 2020.11.06ஆம் திகதி பி.ப. 01.30 மணியுடன் முடிவடையும்.

கிடைக்கப்பெற்ற கேள்வி விண்ணப்பங்கள் 2020.11.06ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு பிரதேச சபை கேட்போர் கூடத்தில் கேள்வி அறிவித்தல் குழு மூலம் திறக்கப்படும்.

**கட்டணங்கள் பற்றிய விபரம்**

| விபரம் | வருடாந்த ஆகக் குறைந்த குத்தகை | மீண்டும் செலுத்தப்படும் குத்தகை பிணை வைப்புத் தொகை | கேள்விப் பத்திரங் களுக்கான கட்டணங்கள் |
|---|---|---|---|
| சீகிரிய புதிய நகரத்திலுள்ள தரிப்பிடத்தில் தரித்து நிற்கும் வாகனங்களுக்கான கட்டணத்தை அறவிடுதல் | ரூ. 2,815,000.00 | ரூ. 10,000.00 | ரூ. 1,000.00 |

(மேற்குறிப்பிட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக அரசின் வரி அறவிடப்படும்)

◆ மேலதிக விபரங்களுக்கு - 066-2053250 (காரியாலயம்)

**கே.ஜீ. சோமதிலக**
**கௌரவ தலைவர்**
**தம்புள்ள பிரதேச சபை, சீகிரிய.**

**2020.10.13**

---

# வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்
## வழங்கல் அறிவித்தல்

**மீன்பிடித்துறைமுகங்கள் 05ற்காக CCTV கெமரா தொகுதிகளை வழங்கல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்**

கொழும்பு 15, ரொக்ஹவுஸ் லேன், இல.15 இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் 2020 நவம்பர் 10 ஆம் திகதி பி.ப 02.00 மணி வரை உற்பத்தியாளர்கள், முகவர்கள் அல்லது அங்கீகாரம்பெற்ற விற்பனையாளர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்காக முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | மனு இலக்கம் | வேலைத்திட்டம் தொடர்பான தகவலகள் | மனுப்பிணையின் பெறுமதி (ரூபா.) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா.) | மனுக்கோரல் முடிவுத்திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | CFHC/SD/T/ CCTV/ FH/2020/24 (I - V) | மீன்பிடித்துறைமுகங்கள் 05ற்காக CCTV கெமரா தொகுதிகளை வழங்கல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் **மீன்பிடித்துறை முகங்கள் 05 :** வாழைச்சேனை, மிரிஸ்ஸ, கொட்பே (திருகோணமலை), காலி, புராணவெல்ல | 15,000/= வங்கிப்பிணை/ ரொக்கப் பணம் ஏற்றுக்கொள்ளப் படும் (ஒரு மனுக்கோரலுக்காக) | 1000/= (ஒரு மனுக்கோரலுக்காக) | 2020.11.10 பி.ப 02.00 |

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2020 ஒக்டோபர் 15 ஆம் திகதி தொடக்கம் 2020 நவம்பர் 09 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 03.30 மணி வரை மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத மனுக்கட்டணத்தை செலுத்துவதன் மூலம் எழுத்து மூல விண்ணப்பத்தை கொழும்பு 15, ரொக்ஹவுஸ் லேன் இல.15 இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் முகாமையாளருக்கு கையளிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணபப்த்தை பெற்றுக்கொள்ள முடியும்.

ஒரு நிறுவனத்திற்கு / விநியோகஸ்தருக்கு ஐந்து துறைமுகங்களுக்குமான மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதுடன் ஒவ்வொரு மனுக்களுக்கும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன் படி மனுக்கட்டணம் மற்றும் மனுப்பிணை வேறு வேறாக செலுத்தப்பட வேண்டியதுடன் குறித்த நிறுவனம் அல்லது விநியோகஸ்தர்கள் CCTV கெமரா வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பாக 05 வருடத்திற்கு குறையாத முன் அனுபவத்தை பெற்றிருக்க வேண்டியதுடன் நிறுவனத்தில் அல்லது நிறுவனத்தின் கிளையொன்று துறைமுகங்கள் அமைந்துள்ள மாவட்டத்தில் அல்லது பிரதேசத்தில் அமைந்திருத்தல் தெரிவை மேற்கொள்ளும் போது முன்னுரிமையாக கருதப்படும்.

மனு ஆவணத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் அடிப்படையில் ஒழுங்குப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட மனுக்கள் 2020 நவம்பர் 10 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன் முகாமையாளர், வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல 15, ரொக் ஹவுஸ் லேன், கொழும்பு 15 எனும் விலாசத்திற்கு பதிவுத்தபால் ஒன்றின் மூலம் அனுப்புதல் அல்லது வழங்கல் பிரிவில் மனுக்களை சேகரிப்பதற்காக இடப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். மனுக்களை முன்வைக்கவேண்டியது இரண்டு பிரதிகளுடன் 2020 நவம்பர் 10 ஆம் திகதி பி.ப 02.00 இன் பின்னர் கிடைக்கும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அதன் பின் மனுக்கள் உடனடியாக திறக்கப்படும். மனுதாரருக்கோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு மனுக்கள் திறக்கும் சந்தரப்பத்தில் கலந்துகொள்ள முடியும். மனு தொடர்பான கூட்டம் 2020 ஒக்டோபர் 28 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு கொழும்பு 15, ரொக் ஹவுஸ் லேன் இல.15 எனும் இடத்தில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் பிரிவில் இடம்பெறும்.

எந்த ஒரு மனுவையும் முழுமையாக அல்லது பகுதியாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழு உரிமை மனுக்கள் தொடர்பான சபைக்கு உண்டு.

மேலதிக விபரங்கள்

வழங்கல் முகாமையாளர் (மனுக்கள் தொடர்பான) – தொலைபேசி : 011-2525063, தகவல் தொழில்நுட்ப பிரிவு (தொழிநுட்ப தகவல்கள் தொடர்பான) - தொலைபேசி : 0112529637 இன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**
இல – 15, ரொக் ஹவுஸ் லேன், கொழும்பு 15.

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு
## தேசிய லொத்தர் சபை
நிதி அமைச்சு

## தேசிய லொத்தர் சபைக்காக அலுவலகக் கட்டிடம் வாடகைக்கு/ குத்தகைக்குப் பெறுதல்

தேசிய லொத்தர் சபைக்காக (NLB) அலுவலகக் கட்டிடத்தின் வாடகை/ குத்தகைக்கான பெறுகைக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய லொத்தர் சபையின் (NLB) சார்பில் நிதி அமைச்சின் அமைச்சுப் பெறுகைக்குழு (MPC) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

1. இந்த விலைமனுவில் பங்கேற்பதற்கு தகுதியை பெற்றிருப்பதற்கு தேவையான குறைந்தபட்ச தகைமையில் உள்ளடங்குவன;
   - ✓ **கட்டிடமானது குறைந்தபட்சம் 2 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு கிடைக்கப்பெறுவதாக இருத்தல் வேண்டும்.**
   - ✓ சொத்தின் உரிமையாளர் அல்லது முறையான அதிகாரம் பெற்ற நபர் மூலம் விலைமனு நேரடியாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இடைத்தரகர்கள் விலைமனுக்கள் சமர்ப்பிப்பது அனுமதிக்கப்படமாட்டாது.
   - ✓ கட்டிடமானது பிரதான இரயில் நிலையங்களுக்கு அண்மையில் கொழும்பின் மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
   - ✓ தரைப்பகுதி, (படிக்கட்டு, கழிவறை, மாடி முகப்புகள் மற்றும் மின்தூக்கி, முகவாயில்கள் தவிர்ந்த) 40,000 சதுர அடிக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.
   - ✓ கனரக வாகனங்கள் (லொறிகள்) கட்டிடத்தை சிக்கலின்றி அணுக முடியுமாக இருத்தல் வேண்டும்.
   - ✓ 2 ஆண்டுகள் முழுவதற்காகவும் குறைந்தபட்சம் 35 வாகனங்களை தரித்து வைக்கும் வசதி இருத்தல் வேண்டும்.
   - ✓ உரிமையாளரால் மதிப்பீட்டு வரி செலுத்தப்பட வேண்டும்.
   - ✓ தீயணைப்புப் படையினரால் அங்கீகரிக்கப்பட்ட தரமான தீயணைப்பு முறையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - ✓ ஒரு மாற்றாகவும் அதேபோன்று பிரதான மூலமாகவும் குறைந்தபட்ச தேவையாக 300KVA மின்பிறப்பாக்கியை கொண்டிருத்தல் வேண்டும்.
   - ✓ மின் தூக்கியொன்றில் குறைந்தபட்சம் 10 பேர் செல்லக்கூடியதாக இரு மின் தூக்கிகள் இருத்தல் வேண்டும்.
   - ✓ ஒட்டுமொத்த அலுவலகப் பகுதிக்கு குளிரூட்டி வசதி இருத்தல் வேண்டும்.
   - ✓ 400 பேரின் நாளாந்த நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்கு மேல் நிலையில் குறைந்தபட்சம் 15,000 லீ. கொள்ளளவு கொண்ட மேல் நீர்த்தாங்கி மற்றும் நிலக்கீழ் நீர்தொட்டி இருத்தல் வேண்டும்.
   - ✓ கட்டிடத்திற்கான காப்புறுதிப் பாதுகாப்பு இருத்தல் வேண்டும் (உதா.: தீ, தீவிரவாதம்)
   - ✓ தொடர்புடைய நிர்வாகங்களிடம் இருந்து நிறைவுச் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.
3. தகுதிபெற்ற ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் (தொ. 011-4607020) கொழும்பு 01, என்.டபிள்யு.ஜே முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, 1ஆவது மாடி, பெறுகைப் பிரிவு, உதவிப் பொது முகாமையாளரிடம் (பெறுகை) இருந்து மேலதிக விபரம் மற்றும் தெளிவாகத்தைத் பெறலாம் என்பதோடு 2020.10.15 தொடக்கம் 2020.11.04 அன்று வரை எந்த ஒரு வேலை நாளிலும் **9.00 மணி** தொடக்கம் **15.00 மணி** வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
4. மீளளிக்கப்பட மாட்டாத கட்டணம் 30,000.00 ரூபாவை (VAT உள்ளடங்கலாக) செலுத்தி எந்த ஒரு வேலை நாளிலும் **9.00 மணி** தொடக்கம் **15.00 மணி** வரை **2020.10.15** தொடக்கம் **2020.11.04** வரை கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூலக் கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணமானது ரொக்கப்பணமாக இருத்தல் வேண்டும்.
5. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் **2020.11.05** அன்று **14.30 மணி** அல்லது **அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது விலைகேட்புப் பெட்டியில் இடுவதற்கு முடியும்.** தாமதித்து சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் முன்னிலையில் கொழும்பு 01, என்.டபிள்யு.ஜே முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, 5ஆவது மாடி, நிர்வாகப் பிரிவில் விலைமனுக்கள் ஏற்கப்படுவது முடிற்றவுடன் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் இருபத்தெட்டு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் (ரூபா 2,880,000.00) செல்லுபடியான விலைமனு பிணையுடன் சமர்ப்பிக்க வேண்டும். இப்பிணை 2021.03.02 வரை செல்லுபடியாக இருக்க வேண்டும்.
6. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"தேசிய லொத்தர் சபைக்காக அலுவலகக் கட்டிடத்தின் வாடகை/குத்தகை"** என்று குறிப்பிட்டு ஆவணங்கள் முத்திரையிடப்பட்ட உறையில் தலைவர், அமைச்சு பெறுகைக்குழு, தேசிய லொத்தர் சபை, இல. 32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு-01. என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2020.10.28 அன்று 10.00 மணிக்கு இல. 32, என்.டபிள்யு.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01 இல் அமைந்துள்ள தேசிய லொத்தர் சபையில் இடம்பெறும்.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக்குழு**
**தேசிய லொத்தர் சபை**
**இல. 32, என்.டபிள்யு.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு-01.**
15.10.2020

---


The largest Job Market in Sri Lanka

www.observerjobs.lk




Widest reach for your employment advertisement

Email : info@observerjobs.lk Hotline: 1949

For more information

0777270012 / 0112429314

# கொழும்பு மாநகர சபை

## மாநகர பொறியியல் பிரிவு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

கீழ்க்காணும் வேலைகளுக்காக பிரதிகளிலான விலைமனுக்கள் என்னால் பொறுப்பேற்கப்படும்.

| | விலைமனு உருப்படி | விலைமனுதாரரின் தகைமை | பெசேவ உள்ளிட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூ. சதம் | விலைமனுப் பிணையின் பெறுமதி ரூ. சதம் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|---|---|
| 01. | கொழும்பு நகரத்தில் பாதையோரத்தில் வாகனம் நிறுத்தும் கட்டணத்தை அறவிடும் செயற்பாடு மற்றும் முகாமைத்துவத்தைக் குத்தகைக்கு விடல் படி நிலை - XVII | வியாபார பதிவுச் சான்றிதழுடன் இந்த வகை வேலையில் குறிப்பிடத்தக்க அனுபவத்தைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் | 2,160.00 | மொத்த விலைமனு விலையின் 2% (வரி நீங்கலானது) கேட்டவுடன் பணமாக திருப்பிச் செலுத்தும் வங்கி உத்தரவாதம் மீதான நிபந்தனையற்றவை | பணிப்பாளர் பொறியியல் (TDRS) தொலைபேசி : 011-2694593 |

**குறிப்பு: விலைமனுக்கோரல் ஆவணங்களுடன், விலைமனுக்கள் தொடர்பான விரிவான அழைப்பு வழங்கப்படும்.**

**விலைமனு மூடப்படும் நேரம்** : 2020.11.06 அன்று 10.00 மணிக்கு மூடப்படும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**விலைமனு ஆவணங்கள் வழங்கப்படுவது** : 2020.11.05 அன்று 10.00 மணி வரை, கொழும்பு 07,. நகர மண்டபத்திலுள்ள மாநகர பொறியியலாளர் பிரிவின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து,

**விலைமனுவின் செல்லுபடித் தன்மை** : 2021.05.04 வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

**விலைமனுப் பிணை செல்லுபடித் தன்மை** : 2021.06.03 வரை விலைமனுப் பிணை செல்லுபடியாதல் வேண்டும்.

**விலைமனுப் பெட்டி வைக்கப்பட்டுள்ள இடம்** : மாநகர செயலாளர் பிரிவு, நகர மண்டபம், கொழும்பு-07. தபால் மூலம் அனுப்பப்படும் விலைமனுக்கள், நிராகரிக்கப்படும்.

**ஏனைய நிபந்தனைகள்:**

(அ) இதற்காகவுள்ள விலைமனு படிவங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஆ) கொடுப்பனவு செலுத்தப்படும் போது, வியாபார கடிதத் தலைப்பில் சமர்ப்பிக்கப்படும் வேண்டுதல் கடிதமொன்றின் மூலம் மாத்திரமே விலைமனுக்கோரும் ஆவணங்கள் வழங்கப்படும்.

(இ) மாநகர சபை பொறியியல் பிரிவில், செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவில், விலைமனுக் கோரும் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

(ஈ) மூடப்படும் நேரத்திற்குப் பின்னர், விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். குறித்த தினம் ஒரு பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டால், அதற்குப் பின்னரான வேலை நாளில், மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு, அதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

(உ) விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள், விலைமனு திறக்கப்படும் சமயத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

**ரோஷாணி திசாநாயக்க - சட்டத்தரணி,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம்,**
**கொழும்பு-07.**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

**நெடுஞ்சாலைகள் அமைச்சு**

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## கொம்பனி வீதியில் மேம்பாலமொன்றின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான விலை மனுக்கோரல்

### ஒற்றை நிலை - இரண்டு உறை

**இலங்கை அரசினால் நிதி வழங்கப்படுகின்றது (GOSL)**

01. நெடுங்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான C1, CS1, CS2 போன்ற CIDA தரத்தில் பாலக்கட்டுமானத்துறையில் நிபுணத்துவம், கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருக்க தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

02.

| இல. | வேலை பற்றிய விளக்கம் | தகுதிகள் | மனுக்காப்புறுதியின் தொகை (ரூபா.) |
|---|---|---|---|
| 1. | கொம்பனி வீதியில் நீதிபதி அக்பார் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தை புகையிரத வீதிக்கு மேல் இரண்டு பாலங்களை திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல். **ஒப்பந்த இல - RDA/MFAP/GOSL/SI/FO/01** அ. பாலத்தின் அடித்தளம் மற்றும் உப கட்டுமானம் ஆ. இரும்புக்கம்பிகளைக்கொண்டு அமைக்கப்படும் அடித்தள கட்டுமானம் இ. உடனடி அணுகுமுறைகள், சேவை சாலைகள், சந்தி மேம்பாடு, போக்குவரத்து சமிக்ஞைகள், தெருவிளக்குகளை சரிசெய்தல் மற்றும் பிற வீதி உதிரிப்பாகங்களை சரிசெய்தல் **ஒப்பந்த காலம்- 365 நாட்கள்** | CIDA தரங்கள் C1,CS1,CS2 மனு ஆவணத்தில் கூறப்பட்டுள்ளபடி தகுதி, நிதி திறன் மற்றும் அனுபவத் தேவை | மனு ஆவணத்தில் கூறப்பட்டுள்ளபடி |
| 2. | கொம்பனி வீதியின் பேரே ஆறு மற்றும் சாரணர் வீதி மற்றும் சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை புகையிரத வீதிக்கு மேல்பாலமொன்றை திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல் **ஒப்பந்த இல - RDA/MFAP/GOSL/SI/FO/02** அ. பாலத்தின் அடித்தளம் மற்றும் உப கட்டுமானம் ஆ. கொங்க்ரீட், இரும்புக்கம்பிகளைக் கொண்டு அமைக்கப்படும் அடித்தளம் இ. உடனடி அணுகுமுறைகள், சேவை சாலைகள், சந்தி மேம்பாடு, போக்குவரத்து சமிக்ஞைகள், தெருவிளக்குகளை சரிசெய்தல் மற்றும் பிற வீதி உதிரிப்பாகங்களை சரிசெய்தல். **ஒப்பந்த காலம்- 365 நாட்கள்** | CIDA தரங்கள் C1,CS1,CS2 மனு ஆவணத்தில் கூறப்பட்டுள்ளபடி தகுதி, நிதி திறன் மற்றும் அனுபவத் தேவை | மனு ஆவணத்தில் கூறப்பட்டுள்ளபடி |

3. ஆர்வமுள்ள தகுதியுள்ள உள்நாட்டு ஒப்பந்ததாரர்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயற்திட்ட பணிப்பாளர், இதர வெளிநாட்டு உதவி செயற்திட்டம், 12ஆம் மாடி, 'C' பகுதி, செத்சிறிபாய இரண்டாம் கட்டம், பத்தரமுல்ல, இலங்கை, தொ.பே :- 0112870062/63 மின்னஞ்சல் mfapeng@yahoo.com மூலம் 9.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காரியாலய வேளைகளில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

4. மனு ஆவணங்கள் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டுள்ளதுடன் 2020 ஒக்டோபர் 16 ஆம் திகதியிலிருந்து 2020 நவம்பர் 04 ஆம் திகதி வரை 09.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியினுள் காரியாலய வேலை நாட்களில் எவ்வித கட்டணச்செலுத்துதலும் இன்றி மனு ஆவணங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும். இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மீளச்செலுத்தப்படாத ரூபா.100,000 கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை பத்தரமுல்ல, செத்சிறிபாய, இரண்டாம் கட்டம், 12ஆம் மாடி, 'C' பகுதியிலுள்ள இதர வெளிநாட்டு உதவித்திட்டத்தின் செயற்திட்ட பணிப்பாளருக்கு முன்வைப்பதன் மூலம் விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். குறித்த கட்டணத்தை "செயலாளர் நெடுஞ்சாலைகள் அமைச்சு" எனும் பெயரில் எழுதப்பட்ட வங்கிப்பிணையின் மூலம் செலுத்தவேண்டும்.

5. மனு ஆவணங்களை 2020.11.13 ஆம் திகதி 14.00 மணித்தியாலங்களுக்கு அல்லது அதற்கு முன் தலைவர், நிலையான அமைச்சரவை நியமிக்கப்பட்ட வழங்கல் குழுவுக்கு, பிரதி செயலாளரின் கீழ், நெடுஞ்சாலைகள் அமைச்சு, 8 ஆம் மாடி, "மகநெகும மஹாமெதுர" இல 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும்.

6. மனுக்கள் 2020.11.13 ஆம் திகதி 14.00 மணித்தியாலத்திற்கு அல்லது அதற்கு முன் வழங்கல் குழு, 7ஆம் மாடி, நெடுஞ்சாலைகள் அமைச்சு, "மகநெகும மஹாமெதுர", இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்கள் அல்லது மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

7. மனு தொடர்பான கூட்டம் 2020 ஒக்டோபர் 28 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு பத்தரமுல்ல, செத்ரிறிபாய இரண்டாம் கட்டம், 12ஆம் மாடி 'C' பகுதியில் உள்ள இதர வெளிநாட்டு உதவித்திட்டத்திற்குட்பட்ட, செயற்திட்ட பணிப்பாளர் காரியாலயத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**நிலையான அமைச்சரவை நியமிக்கப்பட்ட கொள்முதல் குழு (SCAPC)**
**நெடுஞ்சாலைகள் அமைச்சு**

---

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

---

ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

# Sri Lanka Export Development Board

**வர்த்தக அமைச்சு**

## 2021 ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்காக 2021ஆம் வருடத்திற்காக பின்வரும் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் உற்பத்தியாளர்கள், முகவர்கள், விநியோகஸ்தர்கள், இறக்குமதியாளர்கள், அதிகாரம் வழங்கப்பட்ட விற்பனையாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| உற்பத்திகள்/ சேவைகளின் வகுதிகள்: | |
|---|---|
| **1.0.** | **அலுவலக உபகரணங்கள் மற்றும் காகிதாதி:** |
| 1.1 | அலுவலக காகிதாதி அம்சங்கள் - பேனைகள், பென்சில்கள், தபாலுறைகள், ஸ்டெப்பிள்கள், தட்டச்சுத் தாள்கள், புகைப்படப் பிரதி தாள்கள் மற்றும் டஸ்டர்கள் கோவை உறைகள், புல்டோக் கிளிப், கல்குலேட்டர்கள் போன்றன) |
| 1.2 | கணனிகள் மற்றும் தொடர்புடைய அம்சங்கள் - கணனிகள், மடிக்கணனிகள், கணனி ஹாட்வெயார் மற்றும் கணனி துணைப்பொருட்கள், சேர்வர்கள், ஸ்டோரேஜ், பிரத்தியேக கணனிகள், Taps, monitors, UPS, mouse & keyboards, power adapter, ஸ்கேனர்கள், அச்சுப்பொறிகள் மற்றும் அச்சுப்பொறி துணைப்பொருட்கள் (டொட் மட்ரிக்ஸ், லேசர் ஜெட் அச்சுப்பொறிகள், வர்ண அச்சுப்பொறிகள், போட்டோகொன்டக்டர்ஸ் போன்றன) |
| 1.3 | தொலைநகல் இயந்திரங்கள், நிழற்படபிரதியாக்கல் இயந்திரங்கள், கூட்டல் இயந்திரங்கள், முகம்/விரல் ஸ்கேனிங் வரவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் போன்றன. |
| 1.4 | தகவல் தொழில்நுட்ப வலையமைப்பு சொலூஷன்ஸ், computer consumables (Printer Toners, Cartridges, Ribbons, Pen drives, Recordable CDs/DVDs, etc.) |
| 1.5. | மின் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (குளிர்சாதனப் பெட்டி, மின் விசிறிகள், காற்றுச்சீராக்கிகள் போன்றன) |
| 1.6. | கட்புல, செவிப்புல உபகரணங்கள் மற்றும் தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள் (கமரா, வீடியோ கமரா, புரஜெக்டர் மற்றும் புரொசஸிங் இயந்திரம், வானொலி, கசெட்டுக்கள், தொலைபேசி முறைமைகள் மற்றும் தொலைபேசி உபகரணங்கள் போன்றன) |
| 1.7. | அலுவலக தளபாடம் - மரம்/ உருக்கு/ பப்ரிக்கள் (மேசைகள், கதிரைகள், கப்போட்டுக்கள், அலுமாரிகள், தட்டுக்கள் போன்றன) |
| 18. | திகதி முத்திரைகள், இறப்பர் முத்திரைகள், பெயர்ப் பலகைகள் (அலுமினியம் / பிளாஸ்டிக், பித்தளை போன்றன) |
| 1.9. | சிற்றூழியர்களுக்கான சீருடைப் பொருட்கள் (மேற்சட்டைத் துணிகள், காற்சட்டைத் துணிகள், காலணிகள் மற்றும் காலுறைகள், சேலை) |
| **2.0.** | **அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்** |
| 2.1 | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு (தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், வரவு பதிவு இயந்திரம் (முகம் மற்றும் விரல் பதிவு) மற்றும் ஏனைய உபகரணங்கள்) |
| 2.2 | வளிச்சீராக்கிகளின் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு. |
| 2.3 | அச்சுப்பொறிகள் மற்றும் கணனிகளின் திருத்த வேலைகள் மற்றும் கணனி சேர்வர்களின் பராமரிப்பு |
| 2.4. | அலுவலக தளபாட திருத்த வேலைகள் (மரம்/ உருக்கு) |
| 2.5. | தொலைபேசி திருத்த வேலைகள் |
| **3.0** | **வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களின் திருத்த வேலைகள் மற்றும் வழங்கல்.** |
| 3.1 | டயர்கள், டியூப்கள், பெட்டறிகள், வீல் அலையின்மெண்ட் மற்றும் சரிசெய்தல் |
| 3.2 | வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான உதிரிப்பாகங்கள் |
| 3.3 | சைலன்சர், ரேடியேட்டர்கள் ஆகியவற்றின் திருத்த வேலைகள். |
| 3.4 | வாகனங்களுக்கான மேற்கவிகை வேலைகள் (வாகன ஆசன குஷன்கள், ஆசன உறைகள், இறப்பர் காபெற்றுகள் மற்றும் கன்வஸ் கவர்கள்) |
| 3.5. | வாகன சேவைகள் - (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் - கொழும்பு, யாழ்ப்பாணம், குருநாகல், மாத்தறை, கண்டி – ஒவ்வொரு அலுவலக இடப்பரப்பிலிருந்தும் 10 கி.மீ. தொலைவிற்குள்) |
| 3.6. | மோட்டார் வாகனங்கள் மற்றும் வளிச்சீராக்கல் இயந்திரங்களின் திருத்த வேலைகள். |
| 3.7. | வாகன மின்சார இயந்திரங்களின் திருத்த வேலைகள். |
| 3.8. | மோட்டார் வாகனங்களின் Tinkering மற்றும் பெயிண்ட் பூசுதல் |
| **4.0.** | **விளம்பரங்கள், ஊக்குவித்தல் வேலைகள் மற்றும் அச்சிடல் பொருட்கள்** |
| 4.1. | விளம்பரம்/ வெளிப்புற விளம்பரம் (பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள், LED panels, பெயர் பலகைகள், சுவரொட்டிகள் போன்றன. |
| 4.2. | கட்புல-செவிப்புல ஆவணமாக்க தயாரித்தல். |
| 4.3. | வரைதல் வேலை வடிவமைப்பு, சஞ்சிகைகள், சிறுபுத்தகங்கள், சுவரொட்டிகள், அழைப்புக்கள்/ வாழ்த்து மடல்கள், பெயர் விபர காட்கள் (உள்ளூர்/வெளிநாடுகள்) போன்றன. |
| 4.4. | கண்காட்சிகள்/ கருத்தரங்குகள்/ வேலைப்பட்டறைகளுக்கான ஒலி முறைமைகள் (Microphones, audio recording facility, speakers etc.,) |
| 4.5. | அச்சிடல் மற்றும் புத்தகம் கட்டல் (பற்றுச்சீட்டு புத்தகங்கள், சிற்றேடுகள், பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் போன்றன) |
| 4.6. | Branding (co-operate branding /dealer branding) |
| 4.7. | ஊக்குவித்தல் பொருட்கள் - (வெற்றிக் கிண்ணங்கள், ஞாபகார்த்த சின்னங்கள், பதக்கங்கள், ரி-சேட்டுக்கள், பைகள், பரிசுப் பொருட்கள் போன்றன) |
| **5.0.** | **ஏனைய சேவைகள்** |
| 5.1. | நிகழ்வு முகாமைத்துவம்/ உள்ளூர் மற்றும் வெளியூர் வர்த்தகக் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல். |
| 5.2. | e-வர்த்தகம் (e-வியாபாரம், e-பணக்கொடுப்பனவு வசதிகள், e- சந்தைப்படுத்தல் வசதிகள் போன்றன) |
| 5.3. | கண்காட்சிக்கூடம் நிறுவுதல் மற்றும் பராமரிப்பு – வடிவமைத்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பு. |
| 5.4. | மொழிபெயர்ப்புகள் (ஆங்கிலத்தை தமிழுக்கு, ஜப்பான், சீன மற்றும் ஏனைய வெளிநாட்டு மொழிகளுக்கு) |
| 5.5. | அலுவலக பாதுகாப்பு |
| 5.6. | அலுவலக பிரித்தடுப்புக்கள், உள்ளக வடிவமைத்தல் மற்றும் நிர்மாணங்களின் புதுப்பித்தல் (ceramic, painters, fabrication, cushioning of chairs etc., |
| 5.7. | Electrical and Telephone wiring (circuit breakers, bulb, switch board etc.,) |
| 5.8. | கட்டிட/ கண்காட்சி மண்டபங்களின் ஒளியமைப்புக்கள். |
| 5.9. | போக்குவரத்துச் சேவைகள், வாடகை அடிப்படையிலான மோட்டார் வாகனங்கள் (கார், வேன், பஸ் போன்றன) |
| 5.10. | IT Software Solution (Operation system, SW license, data base, application software, business intelligence, workflow solution, IT security solution, cloud solution etc.) |
| 5.11. | Internet, Broadband, mobile solution |
| 5.12. | Logistics & Freight forwarding - Air, Sea & courier service |
| 5.13. | Performing Arts – Dancing troupe & other performing group ( local & international Expos etc.) |
| 5.14. | பீடைக் கட்டுப்பாடுகள் |
| 5.15. | ஆலோசனை சேவை |
| 5.16. | அலுவலக அடையாள அட்டைகளை தயாரித்தல். |

**விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டிய நடைமுறை:**

❖ வியாபார பதிவு செய்தல் சான்றிதழ் அல்லது உள்ளூர் அதிகாரிகளினால் வழங்கப்பட்ட பதிவுசெய்தல் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதி மற்றும் கம்பனியின் விபரங்கள் ஆகியன விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

❖ பதிவு செய்தலானது மதிப்பீடு/ மதிப்பாய்வு நடைமுறையில் பரிசீலனைக்கு உட்பட்டதாக இருப்பதுடன், வழங்கப்படும் தகவலானது பொய்யானது அல்லது திடநுட்பமில்லாதது என கண்டுபிடிக்கப்பட்டால் நிராகரிக்கப்படும்.

❖ அனைத்து விண்ணப்பதாரிகளும் பண்டங்கள் அல்லது சேவை வழங்குனராக ஆகக் குறைந்தது இரு வருட அனுபவத்தையுடையவராகவும் தற்போதுள்ள சேவை நாடுனர்களின் பட்டியலையும் வழங்கல் வேண்டும்.

❖ வழங்குநரானவர் ஒரு மாத கடன் வசதிக் காலத்தை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.

❖ ஒவ்வொரு உப அம்சத்திற்கும் 2021 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்வதற்காக மீளளிக்கப்படாத பதிவு செய்தல் கட்டணமாக 500 ரூபாவை வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் இஏஅச இன் காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது ''இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை'' இன் பெயரில் வழங்கப்பட்ட காசோலையொன்றின் மூலமாக செலுத்தப்படல் வேண்டும். காசுக் கட்டளை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

❖ இறுதி திகதியை பூர்த்தி செய்வதற்கு மற்றும் எதிர்பார்க்கப்படும் மட்டங்களுக்கு மற்றும் தரப்பேணல் மற்றும் நியமங்களை வழங்க தவறும் பதிவு பெற்றுள்ள வழங்குநர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு வழங்குநர் பட்டியலிலிருந்து நீக்கப்படுவர்.

❖ சேதமடைந்த அல்லது தரம் குறைந்த அம்சங்கள் திருப்பி அனுப்பப்படுவதுடன் அவைகளின் பதிலீடுகள் இயலுமான விரைவில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

❖ மாதிரி விண்ணப்பப் படிவங்களை www.srilankabusiness.com எனும் எமது இணைய தளத்திற்கு பிரவேசித்து "Announcements" கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

❖ வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கான விலைமனுக்கோரல்களைக் கோரல் சாதாரணமாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள்-சேவை வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும்.

❖ விலைமனுக்கோரல்களை அழைத்து கொள்வனவுகள்-சேவைகளை பதிவு செய்யப்படாத வழங்குநர்கள்-சேவை வழங்குநர்களிடமிருந்து மேற்கொள்வதற்கான உரிமையையும் இஏஅச கொண்டுள்ளது.

❖ முத்திரையிடப்பட்ட ஆவணமானது தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "Registration of the Supplier for the year 2021" என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது 2020 நவம்பர் ............. ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பெறுகை அலகு, 6 ஆம் மாடி, EDB, NDB-EDB Tower, இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே பெறுகை அலகில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

❖ மேலதிக தெளிவுறுத்தல்களுக்கு 0112300702 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக கனிஷ்ட பணிப்பாளர் / பெறுகை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் / பிரதான நிறைவேற்றுநர்,**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,**
**NDB-EDB கட்டிடம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02**
**தொலைபேசி: 011-2300705-11 தொலைநகல்: 011 2300715**
**இணையதளம்: www.srilankabusiness.com**

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2020 ஒக்டோபர் 15 வியாழக்கிழமை

# ஐபிஎல்: 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெற்றி



ஐ.பி.எல். ரி 20 தொடரின் 29ஆவது லீக் போட்டியில், 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

ஐபிஎல் தொடரின் 29வது லீக் போட்டி (செவ்வாய்க்கிழமை) டுபாயில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக சாம் குர்ரான் மற்றும் பப் டு பிளசிஸ் ஆகியோர் களமிறங்கினர்.

பப் டு பிளசிஸ் டக் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார். அவரைத் தொடர்ந்து சேன் வொட்சன் களமிறங்கினார். அதிரடியாக ஆடிய சாம் குர்ரான் 21 பந்துகளில் 3 பவுண்டரி, 2 சிக்சர்கள் அடங்களாக 31 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அம்பத்தி ராயுடு, சேன் வொட்சன் உடன் ஜோடி சேர்ந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அதன்படி 14வது ஓவரில் சென்னை அணி 100 ஓட்டங்களைக் கடந்தது.

பொறுப்புடன் ஆடிய ராயுடு 41 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரை தொடர்ந்து வொட்சன் 42 ஓட்டங்களில் வெளியேறினார். அதன் பின்னர் ஜோடி சேர்ந்த அணியின் தலைவர் எம்.எஸ் டோனியும், ஜடேஜாவும் பொறுப்புடன் விளையாடினர்.

எனினும் டோனி 13 பந்துகளில் 21 ஓட்டங்களுடன் வெளியேறினார். பிராவோ டக் அவுட்டானார்.

இறுதியில் சென்னை அணி 20 ஓவர்கள் நிறைவில், 6 விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஹைதராபாத் அணியின் சார்பாக சந்தீப் சர்மா, நடராஜன், கலீல் அகமது ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனையடுத்து, 168 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் ஹைதராபாத் அணியின் தலைவர் டேவிட் வோர்னர் மற்றும் ஜொனி பரிஸ்டோவ் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர். 13 பந்துகளை சந்தித்த வோர்னர் 9 ஓட்டங்களைப் பெற்று சாம் குர்ரான் பந்துவீச்சில் வெளியேறினார். அடுத்து வந்த மனிஷ் பாண்டே 4 ஓட்டங்களில் வெளியேறினார். பின்னர் களமிறங்கிய வில்லியம்சன் தொடக்க வீரர் பிரிஸ்டோவுடன் ஜோடி சேர்ந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். 24 பந்துகளை சந்தித்த பிரிஸ்டோவ் 23 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து களமிறங்கிய பிரியம் கர்ருடன் வில்லியம்சன் ஜோடி சேர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். பிரியம் கர் 16 ஓட்டங்களுடனும், அடுத்து வந்த விஜய் சங்கர் 12 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து வெளியேறினார்.



தனி வீரராக போராடிய வில்லியம்சன் 39 பந்துகளில் 7 பவுண்டரிகள் உட்பட 57 ஓட்டங்களைக் குவித்து கரன் சர்மா பந்து வீச்சில் வெளியேறினார். பின்னர் வந்த வீரர்கள் யாரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தாமல் அடுத்தடுத்து வெளியேறி ஏமாற்றம் அளித்தனர்.

இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்த ஐதராபாத் அணி 147 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

இதனால், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றது.

# டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி திட்டமிட்டபடி நடக்கும் –ஐ.சி.சி

டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி அடுத்த ஆண்டு (2021) ஜூன் மாதம் லண்டனில் நடத்தப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) அறிவித்துள்ளது.

உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் போட்டி 9 அணிகள் இடையே நடந்து வருகிறது. குறிப்பிட்ட டெஸ்ட் தொடர்கள் டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் முடிவுக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு அணிகளும் 6 தொடர்களில் விளையாட வேண்டும். இதுவரை 4 தொடர்களில் ஆடியுள்ள இந்திய அணி 360 புள்ளிகளுடன் முதலிடத்திலும், அவுஸ்திரேலியா 296 புள்ளிகளுடன் 2வது இடத்திலும், இங்கிலாந்து 292 புள்ளிகளுடன் 3வது இடத்திலும் உள்ளன.

கொரோனா அச்சத்தால் பல போட்டிகள் இரத்து செய்யப்பட்டும், சில தொடர்கள் தள்ளிவைக்கப்பட்டும் உள்ளன. இதனால் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியை ஒத்திபோட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டன. ஆனால் திட்டமிட்டபடி அடுத்த ஆண்டு (2021) ஜூன் மாதம் இலண்டனில் இறுதிப்போட்டி நடத்தப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) அறிவித்துள்ளது. இது குறித்து ஐ.சி.சி செய்தி தொடர்பாளர் கூறுகையில், 'டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியை திட்டமிட்டபடி நடத்துவதை நோக்கி பயணிக்கிறோம். எப்படி புள்ளிகளை பகிர்வது, தள்ளிவைக்கப்பட்ட போட்டிகளை நடத்துவது குறித்து விரைவில் தெளிவான அறிவிப்பு வெளியிடப்படும்' என்றார்.

# ரொனால்டோவுக்கு கொரோனா தொற்று

போர்த்துக்கல் நாட்டின் நட்சத்திர கால்பந்து வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ கொவிட்19 வைரஸ் தொற்றுக்கு ஆளாகியிருப்பதாக போர்த்துக்கல் கால்பந்து சம்மேளனம் தாம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் உறுதி செய்திருக்கின்றது. 35 வயது நிரம்பிய ரொனால்டோவின் நோய் நிலைமை பற்றி மேலும் விபரித்த போர்த்துக்கல் கால்பந்து சம்மேளனம், ரொனால்டோ தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்திருந்ததோடு அவரிடம் கொவிட்19 தொற்றுக்கான அறிகுறிகள் தென்படவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றது.

கடைசியாக நெஷனல் லீக் கால்பந்து தொடரில் பிரான்சுக்கு எதிராக ஆடிய ஜுவன்டஸ் கழக வீரரான ரொனால்டோ, கடந்த வாரம் ஸ்பெயின் கால்பந்து அணிக்கு எதிராக நடைபெற்ற நட்புரீதியான மோதலிலும் பங்கேற்றிருந்தார். கொவிட்19 தொற்று உறுதியாகியிருப்பதன் காரணமாக தனது தாயக அணி நெஷனல் லீக் கால்பந்து தொடரில் ஸ்வீடன் அணிக்கு எதிரான போட்டியில் விளையாடும் சந்தர்ப்பத்தினை ரொனால்டோ இழக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஜுவன்டஸ் அணி தொடர் ஏ கால்பந்து தொடரில் Crotone அணிக்கு எதிராக விளையாடவிருக்கும் போட்டியிலும், சம்பியன்ஸ் லீக்கின் குழு நிலை மோதலான டைனமோ கியிவ் அணிக்கு எதிரான போட்டியிலும் விளையாடும் வாய்ப்பு ரொனால்டோவிற்கு இல்லாமல் போகின்றது.



# இலங்கை வருகிறது இங்கிலாந்து அணி



இங்கிலாந்து கிரிக்கட் அணி எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளர் மிக்கி ஆதர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த சுற்றுப்பயணம் கடந்த பெப்ரவரி மாதம் மேற்கொள்ளப்படவிருந்த நிலையில் கொரோனா அச்சம் காரணமாக கைவிடப்பட்டது. இதன் பின்னர் இலங்கை கிரிக்கட் அணி எந்தவொரு சர்வதேச போட்டிகளிலும் பங்கேற்கவில்லை.

அது மாத்திரமன்றி இந்திய, தென்னாபிரிக்க மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான சுற்றுப்பயணங்களும் ஒத்திவைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் ஒத்திவைப்பு



கொவிட் – 19 வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக கல்வி அமைச்சினால் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கிய சகல விளையாட்டு நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கு தடை விதிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, இவ்வருடம் நிறைவடையும் வரை பாடசாலை மட்டத்திலான எந்தவொரு விளையாட்டுப் போட்டியும் இடம்பெறமாட்டாது என அனைத்து பாடசாலைகளுக்கும், விளையாட்டு சங்கங்களுக்கும் கடிதம் மூலம் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் விளையாட்டுப் பணிப்பாளர் தயா பண்டார தெரிவித்துள்ளார்.

கொவிட் – 19 வைரஸின் அச்சுறுத்தல் குறைவடையத் தொடங்கியதை அடுத்து நாட்டில் கட்டம்கட்டமாக பாடசாலைகளை திறப்பதற்கு கல்வி அமைச்சு கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த நிலையில், கடந்த செப்டம்பர் மாதம் முதலாம் திகதி முதல் வழமையான நேரத்தில் பாடசாலைகளை திறப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்தது.

பாடசாலைகள் திறக்கப்பட்ட காரணத்தால் விளையாட்டு நிகழ்ச்சிகளையும் ஆரம்பிக்க வேண்டும் என கல்வி அமைச்சுக்கு பல்வேறு தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், தேசிய அளவிலான போட்டிகளை நவம்பர் மாதம் நடத்துவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியிருந்தது.

இது இவ்வாறிருக்க, நாட்டில் மீண்டும் கொவிட் – 19 வைரஸின் தாக்கம் அதிகரித்துள்ளதால் கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கிய விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒத்திவைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவின் பணிப்பாளர் தயா பண்டார கருத்து தெரிவிக்கையில், "நாங்கள் அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனைத்து விளையாட்டு போட்டிகளையும் மறு அறிவித்தல் வரும் வரை பிற்போடுமாறு அறிவித்துள்ளோம். முன்னதாக கிரிக்கெட், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் உள்ளிட்ட விளையாட்டுக்களை சுகாதார வழிமுறைகளை பின்பற்றி ஆரம்பிக்குமாறு நாங்கள் அனுமதி வழங்கியிருந்தோம். ஆனால் தற்போது அனைத்து விளையாட்டுக்களையும் நடத்த வேண்டாம் என தெரியப்படுத்தியுள்ளோம்" என்றார்.

இதன்படி, 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு பிறகு ஒருநாள் போட்டிகளாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், தற்போதுள்ள நிலைமையில் அந்தத் தொடரை இந்த வருடம் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கொவிட் – 19 வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட கிரிக்கெட், கால்பந்து, ரக்பி மற்றும் மெய்வல்லுனர் உள்ளிட்ட விளையாட்டுக்களை 2021 ஜனவரி முதல் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

SINCE 1978 42nd
OBSERVER MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்–மொபிடெல்

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..............................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..............................

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை : ..............................
வாக்களித்தவர் பெயர் : ..............................
முகவரி : ..............................
மொபைல் இல. : ..............................

SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router — 2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500 — 4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-10-17 — இல. 32




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 15ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.